# வருடாந்த அறிக்கை

## 2012

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**
தலைமை அலுவலகம்
இல.165, கின்சி வீதி, கொழும்பு-08.

(94) 011 2694925, 2685980, 2685981, 2685339
மின்னஞ்சல்: : sechrc@sltnet.lk
இணையத்தளம்: : www.hrcsl.lk

## வுஉள்ளடக்க அட்டவணை

தவிசாளரின் செய்தி
ஆணைக்குழுவின் உள்ளாக்கம்

அத்தியாயம் ஒன்று : அறிமுகம்

அத்தியாயம் இரண்டு: இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிரிவுகள்

2.1 விசாரணைகள் மற்றும் புலனாய்வுகள் பிரிவு 7
2.1.1 தனிப்பட்ட முறைப்பாடுகள் 7
2.1.2 விஜயம் செய்தல் பொறிமுறை
2.1.2.1 மஹரச் சிறைச்சாலைக்கான விசேட விஜயம் 10
2.1.2.2 வெலிக்கடை சிறைச்சாலைக்கான விசேட விஜயம் 11
2.1.2.3 டிவித்துறவத்த, ஏக்கா் 20, பெல்கேனவுக்கான விசேட விஜயம் 11
2.1.2.4 காத்தான்குடிக்கான விசேட விஜயம் 11
2.1.3 தடுத்து வைத்தல் கட்டளைகளை பதிவு செய்தல் 11
2.1.4 சில முக்கிய சம்பவங்கள் 12
2.1.5 முடிவு 13

2.2 கண்காணிப்பு மற்றும் மீளாய்வு பிரிவு 14
2.2.1. வசதி குறைந்த நிறுவன மயப்படுத்தப்பட்ட ஆதரவற்ற பிள்ளைகளுக்கான பாடசாலை அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான சமவாய்ப்பு மீதான கலந்துரையாடல்கள் 14
2.2.2. மொழிக்கொள்கையை அமுல்படுத்துவதைக் கண்காணித்தல் 14
2.2.3. 2008 இல் வெளியிடப்பட்ட பூகோள காலா்ந்த அறிக்கை சிபார்சுகளை அமுல்படுத்துவதைக் கண்காணித்தல்
2.2.4. சிறைச்சாலை விடயங்கள் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுடனான விசேட ஆலோசனை 15
2.2.5. புலம்பெயர்வோர் விடயங்கள் மீதான புதிய கவனம் செலுத்தல் மையத்தினை இ.ம.ஆ நிறுவுதல் 15
2.2.6. ஜோர்தான் அம்மானில் உள்ள இலங்கை தூதரகத்தில் சிக்கியுள்ள உள்நாட்டு தொழிலாளர்களை நடாத்துதல் தொடர்பான அக்கறை 17
2.2.7. மிரிஹானையிலுள்ள வெளிநாட்டினரை தடுத்துவைக்கும் இல்லத்தை வெளிநாட்டு 17
தேசியத்தை உடையோரை வைத்திருக்கும் நிலையம் என்ற பெயரின் கீழ் மீளத்திறத்தல் 17
2.2.8 முடிவு

2.3 கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு 18
2.3.1 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் (TOT) 18
2.3.2 சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு 18
2.3.3 முதியோர் உரிமைகளைப் பாதுகாத்தல் மீதான தேசிய ஆலோசிப்பு 19
2.3.4 மதமும் மனித உரிமைகளும் 19
2.3.5 பல்வேறுபட்ட இயலுமைகளைக் கொண்ட ஆட்கள் உரிமைகளைச் சென்றடைவது மீதான ஊடக மகாநாடு 20
2.3.6 ஆசியா பசுபிக் அமைப்பின் புலனாய்வு மீதான பயிற்சி கையேடு 20
2.3.7 முடிவு 21

2.4 நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு 21
2.4.1 நிர்வாகப் பகுதி 21
2.4.2 நிதிப்பகுதி 21

**அத்தியாயம் மூன்று : பிராந்திய அலுவலகங்கள்**


3.1 அம்பாறை பிராந்திய அலுவலகம் 23
3.2 அனுராதபுரம் பிராந்திய அலுவலகம் 24
3.3 பதுளை பிராந்திய அலுவலகம் 25
3.4 மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் 25
3.5 யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம் 27
3.6 கல்முனை பிராந்திய அலுவலகம் 28
3.7 கண்டி பிராந்திய அலுவலகம் 29
3.8 மாத்தறை பிராந்திய அலுவலகம். 30
3.9 திருகோணமலை பிராந்திய அலுவலகம் 31
3.10 வவுனியா பிராந்திய அலுவலகம் 31
3.11 நடமாடும் / உப அலுவலகங்கள் 32
3.11.1 நடமாடும் அலுவலகம் - கிளிநொச்சி 33
3.11.2 நடமாடும் அலுவலகம் - புத்தளம் 33
3.11.3 உப அலுவலகம் - நுவரெலியா 33


**அத்தியாயம் நான்கு : விசேட அறிக்கை**


4.1 விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவு 35
4.1.1 சுற்றாடல் சம்பவ அறிக்கை
4.1.2. காத்தான்குடி சம்பவம் மீதான விசேட இடையீடுகள் 38
4.2 கண்காணித்தல் மற்றும் மீளாய்வு பிரிவு 39
(சிறைச்சாலை விடயங்கள் தொடர்பானவற்றுடன் அரச அதிகாரிகளுடனான விசேட ஆலோசிப்புக்கள் மீதான அறிக்கை )


**அத்தியாயம் ஐந்து : ஏனைய சில அடைவுகள்**


5.1 சில செயற்பாடுகளின் சுருக்கம்
5.1.1 “தேசத்திற்கு மகுடம்”கண்காட்சியில் மனித உரிமைகள் விழிப்புணர்வு 44
5.1.2 மனித உரிமைகளில் உயர்தர டிப்ளோமாவினை ஆரம்பித்து வைக்கும் வைபவம் 44
5.1.3 சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினம் - 2012 44
5.1.4. மனநோயுடைய ஆட்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கு இ.ம.ஆ இன் இடையீடுகள் உதவியது. 44
5.1.5 சிவில் சமூகக் கூட்டமைப்பு 45
5.1.6 ஊடகவியலாளர்களுக்கான மனிதஉரிமைகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 45
5.1.7 “உங்களது உரிமைளைக் கோருவதற்கான உரிமை” மீதான ஒரு பதாகை 45
5.1.8 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மனித உரிமைகள் மீதான ஒரு கற்கை மகாநாடு. 45
5.1.9 சர்வதேச மனிதஉரிமைகள் கொண்டாட்டம் 45
5.2 கூட்டங்கள் / ஆலோசிப்புக்கள் / ஊடக விளக்கங்கள் / ஊடகக் குறிப்புக்கள் - 2012


**அத்தியாயம் ஆறு : வெளிநாட்டு நிதியீட்டப்பட்ட கருத்திட்டங்கள்** 49


6.1. தேசிய மனித உரிமைகள் நிறுவகத்திற்கான ஐநா ஆதரவு - இலங்கையின் மனித உரிமைகள் 2012 இன் மீதான ஐநா கூட்டு நிகழ்ச்சித்திட்டம்
6.2. UNICEF நிதியீட்டத்திலான கருத்திட்டங்கள் 51


**அத்தியாயம் ஏழு : 2012 ஆம் ஆண்டின் மனித உரிமைகளின் நிலை** 52


பின்னிணைப்பு I : 2012 இல் 2 ஆம் சுழற்சி, 14வது அமர்வின்போதான பூகோள காலாந்த மீளாய்வுக்கான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் எழுத்து மூல சமர்ப்பிப்பு 59
பின்னிணைப்பு II : இலங்கையில் வயது முதிர்ந்த ஆட்களின் உரிமைகளைப் பலப்படுத்துதல் மீதான அறிக்கை 65
பின்னிணைப்பு III : 2012 இல் வெளிநாட்டுக்கான உத்தியோகபூர்வ பயணம் - மகாநாடு /கூட்டங்கள் / பயிற்சிப்பட்டறை 68

# ஆணைக்குழுவின் உள்ளாக்கம்

**தவிசாளர்**
ஓய்வுபெற்ற நீதியரசர். பிரியந்த ஆர் பி பெரேரா

**ஆணையாளர்கள்**
திருமதி. ஜெஸிமா இஸ்மாயில்
திரு. T.E. ஆனந்தராஜா
கலாநிதி. பேணாட் டி சொய்சா
கலாநிதி. S.W பிரதீபா மஹானாமஹேவ

## தவிசாளரின் செய்தி



மனித உரிமைகள் மீதான 1993 ஆம் ஆண்டு உலக மகாநாடானது தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் பலப்படுத்தலை ஊக்குவித்துள்ளதுடன் அதேவேளையில் பரிஷ் கோட்பாடுகளின் காரண காரியங்களையும் மற்றும் தேவைப்பாடுகளையும் அங்கீகரித்துள்ளதுடன், ஒவ்வொரு அரசும் தனது குறித்த தேவைகளுக்கு மிகவும் பொருந்தக் கூடிய சட்டக வேலையை தெரிவு செய்வதற்கும் அனுமதித்துள்ளது.

மேலே சொல்லப்பட்ட மகாநாடானது மனித உரிமைகளை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தலுக்காக தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களால் ஆற்றப்பட வேண்டிய வகிபங்குகளின் முக்கியத்துவத்தை மீள உறுதிப்படுத்தியதுடன், குறிப்பாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு அறிவுரை கூறுதல், மனித உரிமைகள் மீறல்களுக்கு பரிகாரம் காணுதல், மனித உரிமைகள் தொடர்பான பாதுகாப்புக்களைப் பரப்புதல், மனித உரிமைகள் குறித்து பொதுமக்கள், அரச அதிகாரிகள், பொலிசார், ஆயுதப்படையினருக்கு கல்வியூட்டுதல் என்பனவற்றில் தேசிய மனித உரிமை நிறுவனங்களால் ஆற்றப்பட வேண்டிய வகிபங்குகளின் முக்கியத்துவத்தையும் மீள உறுதிப்படுத்தியுள்ளது.

இதன் வண்ணம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (இ.ம.ஆ) ஆனது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க சட்ட ஏற்பாடுகளின் கீழ் இலங்கை அரசியலமைப்பின் 18வது திருத்தத்துடன் இணங்கும் விதமாக நிறுவப்பட்டுள்ளது. இவ் ஆணைக்குழுவுக்கு இலங்கை மக்கள் தொடர்பாக, மனித உரிமைகளின் ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்ற பரந்த பணி ஒப்புவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் மீறப்படல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து புலனாய்வு செய்வதற்கும், அடிப்படை உரிமைகள் தொடர்பாக அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்துவதற்கும், மரியாதையை ஊக்குவிப்பதற்கும், மனித உரிமைகளுடன் தொடர்புடைய கொள்கைகளுடன் ஒட்டிப்போவதை உறுதிப்படுத்துவதற்கும் இவ் ஆணைக்குழு வலுவூட்டப்பட்டுள்ளது.

எனது பரிசீலிக்கப்பட்ட பார்வையில் இ.ம.ஆ ஆனது கடந்த வருடத்தில் ஜனநாயகத்தின் அடிப்படை நிறுவனங்களாகிய, அதில் அடங்கும் ஒரு பன்மைத்துவ மற்றும் பொறுப்புக்கூறும் பாராளுமன்றம், தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் அதிகாரத்திற்கும், உறுதியாக உட்படும் நிறைவேற்று அதிகாரம், மற்றும் ஒரு சுயாதீன நீதித்துறை போன்ற ஜனநாயகத்தின் நிறுவனங்களுக்கு தடங்கல் எதுமின்றி ஆதரவளிப்பதால் இச் செயற்பாட்டு விடயத்தில் ஒரு பெறுமதியான பங்களிப்புச் செய்துள்ளது.

- மனித உரிமைகளின் குற்றம்சாட்டப்பட்ட மீறுகைகளை விசாரிப்பதில் பொறுப்பெடுத்தல்
- மனித உரிமைகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் சட்டவாக்கம் மற்றும் கொள்கைகளுக்கும் மதியுரை வழங்குதல்.
- உரிமைகளை ஊக்குவிப்பதும் பொதுமக்களுக்கு கல்வியூட்டலும்
- அரசாங்கத்திற்கும் சிவில் சமூக நிறுவனங்களுக்குமிடையில் பாலங்களைக் கட்டியெழுப்பல்
- பொது விசாரணை எண்ணக்கருவை முனைப்புச் செய்வதற்கான முயற்சி
  இ.ம.ஆ இன் செயற்படுத்துவதற்கான அதன் அதிகாரங்களிலிருந்து இன் இ.ம.ஆ அதிமுக்கிய பங்களிப்புக்கள் எழுகின்றன.

கடந்த வருட காலப்பகுதியிலே இந்த முக்கிய இலக்குகளை செயற்படுத்துவதை நோக்கி, எவ் விடயப்பரப்புக்களில் இ.ம.ஆ ஆனது கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது என்பதை குறித்துக் காட்டுவது இந்தக் கட்டத்தில் பொருத்தமானதாகும். அவைகள் கீழே காட்டப்படுகின்றன.

- வயது முதிர்தல் தொடர்பாக கட்டமைப்பு வரையறைகளற்ற செயற்படும் குழுவுக்கு ஆக்கபூர்வமான முன்மொழிவுகளை வழங்கும் ஒரு நோக்குடன், இலங்கை வயதுமுதிர்ந்த சனத்தொகையினரால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக 2012 ஜூன் இல் ஒரு தேசிய கலந்துரையாடலை இ.ம.ஆ ஒழுங்குசெய்தது.

- மீள்பார்வைக்கு உட்படும் காலப்பகுதியின்பொழுது ஒரு பாரதூரமான திருப்பத்தை எடுத்ததாகத்

தோன்றிய மதரீதியான பதற்றம் தொடர்பாக கருத்தில் எடுத்து, இ.ம.ஆ மனித உரிமைகள் தொடர்பாக சமயத் தலைவர்களுக்கான ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு தீர்மானித்தது.

- இயலாமையுடன் கூடிய ஆட்கள் நன்மைகளை சென்றடைதல் தொடர்பில் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்தது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அக்கறை செலுத்தியது. சனசமூகத்தின் சுதந்திரமாக நடமாடுவதற்கு வேறுபட்ட இயலுமையுடன் கூடிய ஆட்களுக்கான உரிமைகளை அறியச் செய்வதற்காக பொதுவாக சமூகத்திற்கும் மற்றும் இயலாமையுடன் கூடிய ஆட்களும் அறியச் செய்யும் இலக்குடன் நன்மைகளை "சென்றடைவதற்கான உரிமை" என்ற தொனிப்பொருளில் ஒரு ஊடக மகாநாட்டை ஆணைக்குழு ஒழுங்கு செய்தது.

- பெற்றோரின் கவனத்தையும் பாதுகாப்பையும் இழந்த அநாதை இல்லங்களில் உள்ள சிறுவர்களின் பாடசாலை அனுமதிப்பிரச்சினையை மீளாய்வு செய்வதற்கான ஒரு விசேட கலந்தாலோசனை இ.ம.ஆ ஆல் நடத்தப்பட்டது. உண்மையான பெற்றோர் ஆவணத்தை வழங்க முடியாத பிள்ளைகளுக்கான, பாடசாலை அனுமதியுடன் தொடர்புடைய ஒரு விசாரணையின் சம்பவத்தில் இப்பிரச்சினையானது எடுத்துக்காட்டப்பட்டது. அநாதை இல்லங்களில் அல்லது மற்றும் ஏனைய நிறுவனங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் அனுமதிக்கும் இவ்விடயத்தில், பாடசாலை அனுமதி தொடர்பாக சமனான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு கொள்கையில் ஒரு தாக்கமான மாற்றத்தை ஏற்படுத்தவும் பொது வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும் இச் சந்தர்ப்பத்தில் ஆணைக்குழு தீர்மானித்தது.

- பொதுமக்களின் ஒரு குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு இழைக்கப்படும் பாரபட்சம் மற்றும் இடுக்கண்களை தவிர்க்கும் ஒரு நோக்குடன் அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதை கண்காணிப்பதற்கு ஆணைக்குழுவானது நடைமுறை ஆண்டில் தீர்மானித்தது.

- இலங்கை சூழமைவில் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஊக்குவித்தல் தொடர்பான பிரச்சினைகளை மீளாய்வு செய்வதற்கும் இ.ம.ஆ க்கு ஒரு சந்தர்ப்பம் இருந்தது. வேலை செய்யும் நாடுகளிலுள்ள இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு போதிய படிநிலைகளை இலங்கைத் தூதரங்களும் வெளிநாடுகளிலுள்ள தூதுவராலயங்களும் எடுக்கவில்லை என்பதே ஆணைக்குழுவின் ஆராய்ந்து பார்க்கும் நோக்காக உள்ளது. இந்தச் சூழமைவில் ஆணைக்குழுவானது இவ்விடயம் தொடர்பாக எல்லா உரிய அமைச்சுக்களுக்கும் இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்திற்கும் ஒரு விசேட வழிகாட்டல் தொகுதியை வெளியிட்டது. இதன் விளைவாக இச்செயற்பாட்டுத்துறையில் கணிசமான முன்னேற்றம் இருந்ததாக அறிக்கையிடப்படுகிறது.

- இவ் ஆண்டிலே ஆணைக்குழுவானது சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தைக் குறிக்கும் முகமாக ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கு செய்தது. இதிலே பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள், மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் உறுப்பினர்களும் சமூகமளித்திருந்தனர்.

- உரிய காலப்பகுதியிலே இ.ம.ஆ தனது நடவடிக்கைகளை விஸ்தரித்தது இன்னொரு விடயமாக உள்ளது என்னவெனில் இலங்கை மன்ற நிறுவனத்தில் 2012 ஒக்ரோபரில் ஒரு பயிற்சிப்பட்டறையில் சிவில் சமூக நிறுவனங்களைப் பங்குபற்றும்படியான அதன் அழைப்பிதழுக்கு எல்லா சிவில் சமூக நிறுவனங்களும் பங்குபற்றி மனித உரிமைகள் விடயம் தொடர்பான எல்லா விடயங்கள் மீதும் தமது கருத்துக்களை தெரிவித்தன.

- 2012 டிசெம்பரில் இ.ம.ஆ முதற்தடவையாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மனித உரிமைகள் மீதான கற்கை மகாநாடு ஒன்றை நடத்தியது. இம் மகாநாட்டின் இலக்காக இருந்தது என்னவெனில் மனித உரிமை கருவிகள் மீதான ஒரு அடிப்படை அறிவை பரப்புவதும் அவைகளை மதிப்பதற்கான அரசின் கடப்பாட்டிற்கு அழுத்தம் கொடுப்பதும் ஆகும்.

- பாடசாலை பாடவிதானத்தில் மனித உரிமைகளை ஒன்று சேர்த்தல். 2012 ஒக்ரோபரில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சியினால் வழங்கப்பட்ட நிதியு-

தவியுடன் பாடசாலை பாடவிதானத்தில் மனித உரிமைகளை உள்ளடக்கும் நீண்டகாலம் காத்திருந்த செயன்முறையை ஆரம்பித்தது. இது தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல் ஆனது 2007 இடம்பெற்றது. ஆனாலும் நிதியின்மை காரணமாக இவ் செயற்பாடானது தாமதிக்கப்பட்டது. எதிர்காலத் தலைமுறையின் நன்மைக்காக எமது கல்வி முறைமையைப் பலப்படுத்துவதின் முக்கியத்துவத்தை இனங்கண்டமைக்காக தேசிய கல்வி நிறுவனதுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நன்றியுடையதாக உள்ளது. இச் செயற்பாட்டின் முக்கியத்துவம் என்னவெனில் இ.ம.ஆ ஆனது தற்பொழுது கல்வியுடன் தொடர்புடைய இரு அரச நிறுவனங்களுடன் பணியாற்றக்கூடியதாக இருப்பதாகும். அவைகளாவன கல்வியமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவனம். அத்துடன் இலங்கை கல்வி முன்னேற்றத்திற்கான சங்கம்(ளுடுயுயுநுனு) என்பனவற்றுடன் கூட்டிணைந்து பணியாற்றக்கூடியதாக இருப்பதுமாகும்.


- கற்றுக்கொண்ட பாடங்களிற்கான நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மற்றும் தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் போன்ற மீளிணக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு செயன்முறைகளுடன் தொடர்புடைய புதிய விடயங்களிலான இச் செயற்பாட்டு விடயங்களில் ஏற்கனவே என்ன சாதிக்கப்பட்டுள்ளது என மதிப்பீடு செய்வதில் 2007 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பல தொடர்புபட்ட விடயங்கள் கணக்கில் எடுக்கப்பட வேண்டியனவாக உள்ளன.

- முதியோர்கள் உரிமைகள் மீதான தேசிய மகாநாடு
  இத்துறையின் செயற்பாடுகளில் பணியாற்றும் எல்லா முகவர்கள் சங்கங்களின் உள்ளீடுகளே இம் மகாநாடு. இந்த மகாநாட்டின் பின்னாக முதியோரின் உரிமைகள் துறையில் ஒரு சாதகமான முன்னேற்றம் செய்யப்பட்டிருப்பதுடன் இலங்கையின் குடிப்பரம்பலில் இது ஒரு முக்கிய காரணியும் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது.

- இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சட்டத்தில் திருத்தங்கள்
  ஆணைக்குழுவானது இ.ம.ஆ சட்டத்தில் சில திருத்தங்களை பரிசீலித்திருந்தது. இவ்விடயம் தொடர்பாக ஆணைக்குழுவின உறுப்பினர்கள் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளின் கூட்டுழைப்புடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தனர். இ.ம.ஆஇன் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களின் கருத்துக்களும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உரிய திருத்தங்கள் தொடர்பில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பொறுப்பெடுக்கப்பட்ட இந்த வேலைச்சுமையை சிறந்ததாக்குவதற்காக தமது பெறுமதியான ஆதரவிற்கும் பயனுள்ள கருத்துக்களுக்கும் எல்லா ஐநா முகவர்கள், சர்வதேச அரசசார்பற்றநிறுவனங்கள், அரசசார்பற்றநிறுவனங்கள், சிவில் சமூககத்தினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதற்கு இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு ஒப்புவிக்கப்பட்ட தொழிற்பாடுகளை செயலாற்றுவதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முழுமையான தமது ஒத்துழைப்பை எப்பொழுதும் வழங்கிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் மற்றும் பணியாட்டொகுதியினருக்கு எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் பதிவுக்காக சமர்ப்பிக்காது விடில் நான் எனது கடமையில் தவறிவிடுவேன். மேலே சொல்லப்பட்ட எல்லாத் தரப்பினரும் எல்லோருக்கும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துதல் மற்றும் சட்டம் ஒழுங்கை ஊக்குவித்தலும் பாதுகாத்தலும் என்ற இலக்கை செயற்படுத்துவதற்கு தற்போதைய ஆணைக்குழுவின் அபிலாஷைகளை சாதிப்பதற்கான அதனது பெரும் முயற்சிகளில் எதிர்காலத்திலும் ஆணைக்குழுவுக்கு அவர்களது முழுமையான ஒத்துழைப்பை தொடர்ந்தும் வழங்குவார்கள் என நான் நம்பிக்கையுடையவனாக இருக்கின்றேன்.



ஓய்வுபெற்ற நீதியரசர் பிரியந்த R P பெரேரா
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# அறிமுகம்

இலங்கை மக்களின் மனித உரிமைகளை ஊக்குவித்து பாதுகாப்பதற்காக ஒரு சுயாதீனமானதும் நிதி ரீதியாக இயலக்கூடிய நிறுவனமாக 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நிறுவப்பட்டது. ஆணைக்குழுவை நிறுவும் சட்டமானது தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் நிலையுடன் தொடர்புடைய பரிஷ் கோட்பாடுகளை கொண்டுள்ளது. முன்னைய இரு நிறுவனங்களாகிய பாரபட்சத்தை ஒழித்தல் மற்றும் மனித உரிமைகளைக் கண்காணித்தலுக்கான ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் செயலணி என்பவற்றால் ஆற்றப்பட்ட தொழிற்பாடுகளை ஆணைக்குழு பொறுப்பெடுத்துக்கொண்டது. பிரிவு 10 இல் காட்டப்பட்டவாறாக ஆணைக்குழுவின் ஏனைய தொழிற்பாடுகளாவன அரசியலமைப்பின் III ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் மீறுதல் அல்லது மீறவுள்ளமை முறைப்பாடுகளை விசாரணை செய்வதாகும். மனித உரிமைகளை மேலும் ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தலில் நிர்வாக வழிகாட்டுதல்களை வழங்குதலும் சட்டவாக்கத்தை உருவாக்குவதிற்கு அரசாங்கத்திற்கு மதியுரைத்தல் போன்ற மேலும் சில தொழிற்பாடுகளையும் இது செய்ய வேண்டியுள்ளதுடன் மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய சர்வதேச சட்டங்களில் பங்காளியாகவோ அல்லது இணங்கிப்போகவோ அரசாங்கத்திற்கு மதியுரை கொடுத்தல் போன்ற ஏனைய தொழிற்பாடுகளைச் செய்கிறது.

ஆணைக்குழுவானது தனது தொழிற்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு பரந்த வீச்சிலான அதிகாரங்களைக் கொண்டுள்ளதுடன் அவைகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவில் குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றன. நீதிமன்றத்திற்கு முன்னாலுள்ள மனித உரிமை, அடிப்படை உரிமைகளின் மீறுதல்கள் அல்லது மீறல்கள் ஒத்தவைகள் தொடர்பானவற்றில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் கட்டளையுடன் அல்லது வேறு வகையிலோ தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தினை ஒழுங்குக் கிரமமாக மேற்பார்வை செய்வதினாலோ, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆட்களின் நலனோம்பலைக் கண்காணித்தல் அத்துடன் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தினை முன்னேற்றுவதிற்கு தேவையாக இருக்கும் சிபார்சுகளைச் செய்தல் போன்ற வழிகளில் நடைமுறைகளில் தலையிடுவதற்கான அதிகாரத்தை கொண்டிருப்பதனை இது உள்ளடக்குகிறது. மனித உரிமைகள் தொடர்புடையவற்றில் கல்வியூட்டுதலை வழங்கவும், விழிப்புணர்வை ஊக்குவித்தலும், ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளில் ஒன்றாக உள்ளதுடன், ஆய்வுகளைப் பொறுப்பெடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்தரங்குகளையும் பயிற்சிப்பட்டறைகளையும் நடாத்தவும் ஆய்வுகளை நடாத்தவும் அது அதிகாரத்தைக் கொண்டுள்ளது. மேலும் பிரிவு 11 (V) குறிப்பிடுவதின்படி "அதனது தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதான அல்லது உகந்ததான ஏனைய அனைத்து விடயங்களையும் செய்வதற்கு" இவ்வண்ணமாக ஆணைக்குழுவுக்கு அதனது தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பரந்த அதிகாரங்களைக் கொடுக்கிறது.

ஆணைக்குழுவை அமைக்கும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறாக தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் ஆணையுடன் ஒரு ஆணைக்குழுவானது ஒரு தவிசாளரையும் நான்கு ஆணையாளர்களையும் கொண்டு பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

அதன் தொழிற்பாடுகளை வினைத்திறனுடன் செயற்படுத்தும் வகையில் பல்வேறு பகுதியிலும் 10 பிராந்திய

அலுவலகங்களைக் கொண்டுள்ளது. உள்ளக முரண்பாட்டின் நிமித்தமாக 2009 க்கு முன்பாக மீறுகைகள் தொடர்பான முறைப்பாடுகள் பெரும் எண்ணிக்கையில் இருந்த வடக்கு கிழக்குப் பகுதிகளில் அவ்வண்ணமான ஐந்து பிராந்திய அலுவலகங்கள் தொழிற்படுகின்றன. நாட்டின் பல்வேறு பாகங்களிலும் அதிக பிராந்திய அலுவலகங்களைத் திறப்பதற்கான தேவையும் அதன் மூலம் மக்கள் தமது குறைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க தேவையில்லாது இருப்பதும் ஆணைக்குழுவால் நீண்டகாலமாக உணரப்பட்டிருக்கிறது. ஆனால் நிதி நெருக்கடிகளானது ஆணைக்குழுவை கடந்த சில ஆண்டுகளாக அவ்வாறு செய்வதிலிருந்து தடுத்திருந்தது. நுவரெலியாவில் ஒரு உப அலுவலகம் தொழிற்படுகிறது. அங்கே பிராந்திய அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் முறைப்பாடுகளைப் பெறுவதற்காக ஒவ்வொரு புதன்கிழமையும் வருகிறார்கள். இருப்பினும் அவ்முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் கண்டி அலுவலகத்தில் இடம்பெறுகின்றன. எவ்வாறாயினும் 2012 ஆம் ஆண்டின்பொழுது ஆணைக்குழுவானது இரண்டு நடமாடும் அலுவலகங்களை ஒன்று கிளிநொச்சியிலும் மற்றையது புத்தளத்திலும் திறந்துள்ளது. மிக விரைவில் நிரந்தர அலுவலகங்களாக இவ் அலுவலகங்களை மாற்றப்படுமென நம்பப்படுகிறது.

ஆணைக்குழுவானது 2500 புத்தகங்களுடன் கூடிய ஒரு நூலகத்தைக் கொண்டுள்ளது. நூலகமானது ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசேட இடையீடுகள் மற்றும் விசாரணைகள் குறித்த பதிவுகளைக் கொண்டுள்ளது. உசாத்துணை நோக்கங்களுக்காக நூலகத்தைப் பயன்படுத்துவதற்கு எவரும் உத்தரவு பெறக்கூடியதாக உள்ளது.

ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட சிபார்சுகளை செயற்படுத்த முடியாமையானது பல வருடங்களாக ஒரு அக்கறைக்குரிய விடயமாக இருந்து வந்தது. மீள்பார்வைக்குட்படும் ஆண்டில் தவிசாளரும் சட்ட செயலாளரும் ஆணைக்குழுவின் சிபார்சுகள் மேற்கொள்ளப்படாத 90 அரச தரப்புக்களின் சம்பவங்களை அழைத்ததுடன் இ.ம.ஆ இன் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதில் அவர்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் குறித்து விசாரித்தது. இச் செயற்பாடானது வெற்றிகரமாக அமைந்ததுடன் 48 சம்பவங்களில் அரசதரப்புகளானவை இ.ம.ஆ ஆல் வழங்கப்பட்ட சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இணங்கிக் கொண்டனர்.

ஆணைக்குழுவால் பொறுப்பெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் ஒரு சுருக்கம் மற்றும் 2012 ஆம் ஆண்டிலே இதன் சவால்கள் மற்றும் சாதிப்புக்கள் என்பவை இவ் அறிக்கையிலே கொடுக்கப்படுகிறது.

## அத்தியாயம் இரண்டு

# இ.ம.ஆ இன் பிரிவுகள்

ஆணைக்குழுவானது நான்கு தொழிற்பாட்டுப் பிரிவுகளை, ஒவ்வொன்றும் ஒரு பணிப்பாளரால் தலைமை தாங்கப்படும் படியாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவினாலும் மீளாய்விற்கு உட்படுத்தப்படும் ஆண்டில் ஆற்றப்பட்ட முக்கிய செயற்பாடுகளின் ஒரு சுருக்கமானது கீழே விபரிக்கப்படுகிறது.

### 2.1 விசாரணை மற்றும் புலனாய்வுப்பிரிவு

#### 2.1.1 தனிப்பட்ட முறைப்பாடுகள்

அடிப்படை உரிமை மீறல்கள் அல்லது மீறவுள்ள முறைப்பாடுகள் இப்பிரிவினால் விசாரிக்கப்பட்டு புலனாய்வு செய்யப்படுவதால் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளில் மிகவும் முக்கியமானவற்றை இப்பிரிவு ஆற்றிவருகிறது. 2012 இலே தலைமைக்காரியாலயத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 4726 ஆகும். பிராந்திய அலுவலகங்களில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டவைகள் 3765 ஆகும்.

| ஆண்டு | | சித்திரவதை | காணாமற்போகச் செய்தலும் காணாமற்போதலும் | | தடுப்பிலுள்ள பொழுது இறப்பு | |
|---|---|---|---|---|---|---|
| 2008 | தலைமை அலுவலகம் | 439 | 147 | 06 | 04 | 550 |
| | பிராந்திய அலுவலகங்கள் | 337 | 883 | 15 | 08 | 767 |
| 2009 | தலைமை அலுவலகம் | 374 | 136 | 03 | 16 | 441 |
| | பிராந்திய அலுவலகங்கள் | 212 | 1972 (ஆட்களைத் தேடுதல்) | 04 | 01 | 1417 |
| 2010 | தலைமை அலுவலகம் | 361 | 67 | 03 | 08 | 308 |
| | பிராந்திய அலுவலகங்கள் | 170 | 1987 (ஆட்களைத் தேடுதல்) | 05 | 04 | 865 |
| 2011 | தலைமை அலுவலகம் | 348 | 48 | 04 | 10 | 307 |
| | பிராந்திய அலுவலகங்கள் | 221 | 182 | 02 | --- | 274 |
| 2012 | தலைமை அலுவலகம் | 381 | 40 | 02 | 08 | 296 |
| | பிராந்திய அலுவலகங்கள் | 154 | 86 | - | 01 | 379 |

மீளாய்விற்கு உட்படும் ஆண்டில் 4726 முறைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றுள் 927

**பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் - 2012**

| இல | முறைப்பாடுகளை வகைப்படுத்துதல் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | தனிப்பட்ட சுதந்திரம் | 1650 |
| 2 | வேலைவாய்ப்பு | 1052 |
| 3 | புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் | 36 |
| 4 | கல்வி | 619 |
| 5 | சொத்து மற்றும் பயன்பாடுகள் | 328 |
| 6 | அரசு மற்றும் அரச நலனோம்பல் | 25 |
| 7 | ஏனையவை | 89 |
| | மொத்தம் | **3799** |

**புலனாய்வு மற்றும் விசாரணையின் பின்பு முடித்து வைக்கப்பட்ட முறைப்பாடுகள் 2012**

| முடித்து வைக்கப்பட்டவைகளை வகைப்படுத்துதல் (H/O) | முடித்து வைக்கப்பட்டவைகள் 2012 | ஏனைய ஆண்டிற்குரியவற்றில் முடித்து வைக்கப்பட்டவைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| அடிப்படை உரிமை மீறப்படாதவை | 610 | 515 | 1125 |
| விருப்பற்றவர்கள் | 197 | 269 | 466 |
| சிபார்சு | 29 | 112 | 141 |
| தீர்த்து வைப்பு | 78 | 90 | 168 |
| நிவாரணம் வழங்கப்பட்டமை | 134 | 147 | 281 |
| பின்வாங்கப்பட்டவைகள் | 99 | 68 | 167 |
| ஏனைய அதிகாரவமைப்புக்களுக்கு அனுப்பப்பட்டவைகள் | 240 | 11 | 251 |
| பணிப்புக்கள் கொடுக்கப்பட்டவைகள் | 31 | 63 | 94 |
| நீதிமன்றத்திலுள்ள வழக்குகள் | 109 | 62 | 171 |
| ஆணைக்குட்படாதவைகள் | 368 | 99 | 467 |
| காலவரையறை | 38 | 03 | 41 |
| மொத்தம் | **1933** | **1439** | **3372** |

எல்லா உண்மைகளையும் தெரிவித்து ஒரு எளிய கடிதத்தை இ.ம.ஆ க்கு எழுதி ஆணைக்குழு அலுவலகத்திற்கோ அல்லது வேறு ஏதும் பிராந்திய அலுவகத்திற்கோ அக்கடிதத்தை தபால் செய்வதன் மூலமோ அல்லது தொலைநகல் செய்வதன் மூலமோ ஒரு முறைப்பாட்டைச் செய்ய முடியும். ஒருவர் ஆணைக்குழுவிற்கு நேரடியாக வந்து முறைப்படைச் செய்ய முடியும். அங்கே உள்ள ஒரு கடமை உத்தியோகத்தர் அவ்வாறான ஆட்களுக்கு அவர்களது குறைபாட்டை கேட்டறிந்த உதவுவதற்காக இருப்பார். கடமை உத்தியோகத்தர் ஒரு நாளைக்கு 30 – 40 முறைப்பாடுகளில் கவனம் செலுத்துகிறார்.

ஆணைக்குழுவானது ஒரு இணையத்தளத்தைப் பேணுவதினால், குறித்த ஆள் முறைப்பாட்டுப் படிவத்தை இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து, அதனைப் பூர்த்தி செய்து அதற்குப் பின்பு பொருத்தமான அலுவலகத்தில் அதனை தாக்கல் செய்யமுடியும்.

முறைப்பாட்டின் இரண்டாம் கட்டமானது இந்த முறைப்பாட்டை தொடர முடியுமா எனத் தீர்மானிப்பதாகும். இந்த முறைப்பாடானது தொடரப்படக் கூடியதாயின் ஒரு ஆரம்ப கட்ட விசாரணை நடத்தப்படும். அதாவது அறிக்கைளையும் அவதானிப்புக்களையும் பதிலளிப்பவர்களிடமிருந்து கோரப்பட்ட பின்பு அவ் ஆவணங்களானவை நுணுகி ஆராயப்பட்ட பின்னர் அழைப்பாணைகளை விடுத்து விசாரணை ஆரம்பிக்கப்படுகிறது.

முறைப்பாடுகளை செயற்படுத்துவதில் ஆணைக்குழுவுக்குள்ள அதிகாரங்கள் பின்வருமாறு

i) திறத்தவர்களை இணக்கத்திற்கு அல்லது மத்தியஸ்தத்திற்கு வசதிப்படுத்துதல்
ii) விசாரணைகளையும் புலனாய்வுகளையும் நடத்துவதுடன் மனித உரிமைகள் மீறுவது தொடர்பான சிபார்சுகளைச் செய்தல்
iii) மனித உரிமைகளை மீறுவதற்கு விளைவித்த நிலைமைகளை திருத்துவதற்கு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புக்களை விடுத்தல்.

ஒவ்வொரு சம்பவம் தொடர்பாகவும் இ.ம.ஆ கொடுத்த சிபார்சுகள் மீது அது பின்தொடர்புகளை நடாத்துகிறது. ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட சிபார்சுகளின் மீள்பரிசீலனைக்கான வேண்டுகோள்கள் மேன்முறையீடுகளாக பெற்றுக்கொள்ளப்படுகிறது. ஆணைக்குழுவானது மேலதிக விசாரணைகளை நடத்தித்திய பின்னர் அச் சிபார்சுகளை நிலைநாட்டுவதா அல்லது வாபஸ்பெறுவதா எனத் தீர்மானிக்கிறது.

இவ் ஆண்டின்பொழுது பிராந்திய அலுவலகங்கள் 219 சம்பவங்களை தலைமை அலுவலகத்திற்கு விசாரணைக்காகவும் புலனாய்விற்காகவும் ஆற்றுப்படுத்தியிருந்தன. விசாரணை மற்றும் புலனாய்வு செய்த சம்பவங்கள் தொடர்பாக பிராந்திய அலுவலகங்களின் அறிக்கைகள் தலைமை அலுவலகத்திற்கு அதனால் வழங்கப்படும் சிபார்சுகளுக்காகவோ பணிப்புரைகளுக்காகவோ முன்வைக்கப்படுகின்றன. பிராந்திய அலுவலகங்கள் தரப்புக்களை இணக்கத்திற்கோ மத்தியஸ்தத்திற்கோ வசதிப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக எந்த விடயமும் அனுப்பப்பட்டதாக அறிக்கையிடப்படவில்லை. இ.ம.ஆ நீதிமன்றத்தின் முன்பாக உள்ள எந்த ஒரு விடயம் தொடர்பாகவும் தலையிடுவது இல்லை. சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பொதுச்சேவை ஆணைக்குழு, மொழி ஆணைக்குழு போன்ற நிறுவனங்களின் ஆணைக்குள் வரும் சம்பவங்களையும் இ.ம.ஆ அந்நிறுவனங்களுக்கே ஆற்றுப்படுத்துகிறது.

பல ஆண்டுகளாக முடிக்கப்படாது இருந்த விடயங்களை விசாரித்து இறுதிப்படுத்துவதற்கு விசாரணை அதிகாரிகளாக 2011 இல் 4 நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். ஆண்டின் இறுதியில் அவ்வாறான 206 விடயங்கள் கவனத்திற்குட்படாது இருந்திருந்தன. மீள்பார்வை செய்யப்படும் ஆண்டில் 463 விடயங்கள் நீதிபதிகளிடம் அனுப்பிவைக்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் நீதிபதிகள் 284 விடயங்களைப் பூர்த்தி செய்ததுடன், வருட இறுதியில் 385 விடயங்களை மிகுதியாக வைத்திருந்தனர்.

தலைமை அலுவலகத்திடம் பொதுமக்கள் உரிமையொன்றின் மீறுகை அல்லது தெளிவான மீறுகை குறித்து முறைப்பாடு செய்வதற்காக 24 மணித்தியால உடனடி தொலைபேசி இணைப்பு சேவை உள்ளது. இவ்வசதியானது, அறிவித்தல் கிடைக்கப்பெற்றதும், கைது மற்றும் தடுப்பு மீது உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு உதவுகிறது.

ஆணைக்குழுவின் இணையத்தளமானது ஆணைக்குழு மற்றும் அதன் செயற்பாடுகள் குறித்து உரிய தகவல்களை வழங்குகிறது. ஒருவர் இணையத்தளத்தை பார்வையிடுவதன் மூலம் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்

இப்பிரிவால் பேணப்படும் தரவுத்தளமானது முறைப்பாட்டின் தன்மையை இனங்காணுவதற்கும் மனுதாரர்கள் பதிலளிப்பவர்களின் விபரங்களைப் பெறுவதற்கும், கோப்புகளை மீளப் பெறுவதற்கும், விசாரணை அதிகாரியின் பெயரை அறிவதற்கும், சம்பவத்தின் கட்டங்களை அறிவதற்கும் உதவுகிறது. முறைப்பாடுகள் பிராந்திய அலுவலகங்களில் செய்யப்பட்டாலும் விசாரணைக்காகவோ தீர்வுக்காகவோ தலைமைச் செயலகத்திற்கோ முறைப்பாடுகள் அனுப்பப்படின் இந்த வசதிகள் அவருக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

### 2.1.2 விஜயம் மேற்கொள்ளல் பொறிமுறை

ஆணைக்குழுவானது பொலிஸ்நிலையங்கள், சிறைச்சாலைகள், தடுத்து வைக்கும் நிலையங்கள் அல்லது ஆட்களை அரசாங்கம் தடுத்து வைக்கும் ஏனைய இடங்களுக்கு விஜயங்களை மேற்கொள்கிறது.

அட்டவணைப்படுத்தல் மூலமாகவோ அல்லது எழுந்தமானமான வழிப்பாதை விஜயங்கள் ஊடாகவோ தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக தீவிலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் இதில் உள்ளடக்கப்படுகிறன. ஆணைக்குழுவானது பொலிஸ்நிலையங்களுக்கு இரவு விஜயங்களை மேற்கொள்கிறது. ஏனெனில் அவ் விஜயங்களானவை சட்டத்திற்கு முரணாண தடுத்துவைப்புக்களையும், சித்திரவதைகளையும் இவ்விடங்களுக்கான பகல் விஜயங்களை விட சிறப்பாகக் கண்காணிப்பதற்கு உதவும் என்பதால் இவ்வாறான இரவு விஜயங்கள் மேற்கொள்ளப்படுகிறது. விஜயங்களை அட்டவணைப்படுத்தும் வசதிக்காக ஒரு பாதை வழியான அட்டவணையயை தயாரித்து இருப்பதுடன் இவ் அட்டவணையின் பிரகாரம் அண்ணளவாக நாட்டிலுள்ள 400 பொலிஸ்நிலையங்கள் ஆணைக்குழுவின் விசாரணை உத்தியோகத்தர்களால் பார்வையிட வேண்டியனவாக உள்ளன. தலைமை அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்கள், 159 பொலிஸ்நிலையங்களுக்கு விஜயம் மேற்கொள்வதுடன் ஏனைய பொலிஸ்நிலையங்களாவன 10 பிராந்திய அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களால் பார்வையிடப்படுகின்றன. வினைத்திறனான சார்ந்த மற்றும் மறுதாக்க ஏற்பாடுகள் ஊடாக இலங்கையில் சித்திரவதை சம்பவங்கள் மற்றும் சட்டத்திற்கு முரணான கைதுகளை இல்லாதொழிப்பது அல்லது குறைப்பதே இவ்வாறான பொலிஸ்நிலைய விஜயங்களின் இலக்காகும். அத்துடன் இவ் மீறுகைகளை மேற்கொள்வதற்கு பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்களை உரிய நியாயாதிக்க முகவர்களிடம் கொண்டுவருவதற்கான படிநிலைகளை எடுப்பதும், அத்துடன் சித்திரவதை சம்பவங்களுடன் போராடும் முகமாக உரிய அரச மற்றும் அரசசார்ப்பற்ற நிறுவனங்களுடன் கூட்டிணைந்து செயற்படுவதும் இதன் இலக்காகும். உடனடித் தொலைபேசி இணைப்பு வசதியைக் கொண்ட 24 மணி நேர கருமபீடமானது சித்திரவதை, சட்டத்திற்கு முரணான கைது, மற்றும் தடுத்துவைப்பு தொடர்பான பல முறைப்பாடுகளைப் பெற்று வருகிறது. ஆணைக்குழுவும் திடீர் விஜயங்களையும், விசாரணைகளையும் மேற்கொள்கிறது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக அதே உத்தியோகத்தர்களாலே பின்தொடர்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரத்தின் கீழ்வரும் பயங்கரவாத புலனாய்வுப்பிரிவு (TID) மற்றும் குற்றப்புலனாய்வுப் திணைக்களம் (CID) என்பனவற்றுக்கும் இ.ம.ஆ திடீர் விஜயங்களை மேற்கொள்கிறது.
பொலிஸ்நிலைய விஜயங்களில் இனங்காணப்பட்ட பொதுவான விடயங்களாவன பின்வருமாறு

- நீதிமன்றத்தில் ஆஜா்டுத்துவதில் தாமதம்
- அடைத்து வைக்கும் கூடுகளில் இடநெரிசல்
- சில பொலிஸ் நிலையங்களிலுள்ள அடைத்து வைக்கும் கூடுகளில் உரிய சுகாதாரவசதிகள் இல்லை
- தடுத்து வைக்கும்பொழுது தாக்குதல்
- ஏலவே புலனாய்வு செய்யப்படாது கைது செய்தல்
- சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்படும் சமயங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவர்கள் செய்ததாக சொல்லப்படும் குற்றம் குறித்து விபரிக்க முடியாதோராய் உள்ளனர்.

சிறைச்சாலைக்கு மாதம் ஒரு தடவை விஜயம் மேற்கொள்ளப்படுவதுடன் வேண்டுகோளின் பேரில் மேலதிக விஜயங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. சுகாதார வசதிகள், உறவினர்களை சந்திப்பதற்கான வசதிகள், உள்ளகப் பாதுகாப்பு போன்ற விடயங்கள் இவ் விஜயங்களின்பொழுது கண்காணிக்கப்படுவதுடன், ஆணைக்குழுவானது அதிகாரிகளுடன் அந்த இடத்திலேயே கலந்துரையாடி சில பிரச்சினைகளை தீர்த்து வைக்கப்படக்கூடியதாக இருப்பதுடன், தடுத்து வைக்கும் இடங்களின் நிலைமைகளை முன்னேற்றுவதற்கான மாற்றங்களையும் செய்து கொள்கின்றன.

#### 2.1.2.1 மஹர சிறைச்சாலைக்கான விசேட விஜயம்

வவுனியா சிறைச்சாலையில் சில கைதிகள் தாக்கப்பட்டு பின்பு அனுராதபுர சிறைக்கு மாற்றப்பட்டு, பின்பு அங்கிருந்து மஹர சிறைக்கு மாற்றப்பட்ட, குற்றம்சாட்டப்பட்ட தாக்குதல் தொடர்பாக விசாரணை நடாத்துவதற்கு ஆணையாளர் திரு. T.E ஆனந்தராஜாவின் அறிவுறுத்தலின் பிரகாரம் மஹர சிறைச்சாலைக்கு

ஒரு விஜயம் மேற்கொள்ளப்பட்டது. எல்ரிரிஈ உறுப்பினர்கள் என்பதற்காக தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்தப் 10 கைதிகள் மீதும் ஒரு தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதை குழு உறுதிப்படுத்தியது. அனுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட தமது சக கைதி ஒருவர் வவுனியா சிறைச்சாலைக்கு மீளக் கொண்டுவரப்பட வேண்டும் என இந்த சிறைக்கைதிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஏனெனில் அவர்கள் அனுரதபுர சிறையிலிருந்து வவுனியா சிறைக்கு மாற்றப்பட்ட வேறொரு கைதியிடமிருந்து பெற்ற தகவலின் பிரகாரம் அனுராதபுர சிறையில் அவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர் தாக்கப்பட்டிருக்கிறாரென தகவல் பெற்றிருந்தமையினாலாகும். இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாமையினால் சிறைக்கைதிகள் சிறைக்காவலாளிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். பின்பு விசேட அதிரடிப்படையினர் நுழைந்து சிறைக்கைதிகளைத் தாக்கியதுடன், சிறைக் காவலாளிகளை விடுவித்து 10 சிறைக் கைதிகளையும் அனுராதபுரத்திற்கு மாற்றியிருந்தனர். இறுதியாக இந்த சிறைக்கைதிகள் மருத்துவ வசதி கிடைக்கக்கூடிய மஹர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

ஆணைக்குழுவானது பொலிஸ் தலைமைச் செயலகம், சிறைச்சாலை தலைமைச் செயலகம் என்பவற்றிடமிருந்து அறிக்கைகளைக் கோரியிருப்பதுடன், இத்தாக்குதல் தொடர்பான ஒரு மருத்துவ சட்ட அறிக்கையையும் கோரியுள்ளது.

இ.ம.ஆ உத்தியோகத்தர்களுக்கும் சட்ட மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் சந்தேக நபர்களால் வழங்கப்பட்ட கூற்றுக்களில் தாக்குதலுடன் தொடர்பான முரண்பாடான கூற்றுக்கள் உள்ளன. விசாரணைகளையும் சந்தேக நபர்களின் கூற்றுக்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவானது சிறைச்சாலை அதிகாரிகளாலோ அல்லது விசேட அதிரடிப்படையினராலோ சிறையிலுள்ள குழப்பத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான மெதுவான தாக்குதலைத் தவிர ஒழுங்கு செய்யப்பட்ட அல்லது நோக்குடன் கூடிய பிழையான நடவடிக்கை அல்ல என்ற கருத்தை ஆணைக்குழு கொண்டுள்ளது.

2012 செப்ரெம்பர் 10 ஆம் திகதி பொலிஸ் தலைமையகத்திடமிருந்து ஆணைக்குழுவானது இச் சம்பவம் தொடர்பான அறிக்கையைப் பெற்றுக்கொண்டது. அதன் பிரகாரம் சிறைக் கைதிகள் சிறைக்காவலாளிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் சட்டத்திற்கு முரணான வகையில் கொண்டு வந்ததாகவும் அதன் நிமிர்த்தம் அதிகாரிகள் நிலைமையை சாதாரண நிலைக்கு வரும் முகமான ஏற்பாடுகளை எடுத்ததாகவும், அந்நோக்கத்திற்குத் தேவையான குறைந்தபட்ச நிர்பந்தம் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

#### 2.1.2.2 வெலிக்கடை சிறைச்சாலைக்கான விசேட விஜயம்

2012 செப்ரெம்பரில் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் நிறுவனத்திடமிருந்து கொழும்பு தடுத்து வைப்புச் சிறைச்சாலையில் சில மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக கிடைக்கப் பெற்ற தகவலைத் தொடர்ந்து இரண்டு விசாரணை அதிகாரிகள் விசாரணைகளை நடத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர். அதிகாரிகள் சிறைச்சாலை உத்தியோகத்தர்கைளயும் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்களையும் சந்தித்ததுடன், எந்தவித மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லையென முடிவுக்கு வந்தனர்.

#### 2.1.2.3 டிவித்துறவத்த, ஏக்கர் 20, பொல்ஹேனவுக்கான விசேட விஜயம்

சிவில் உரிமைகள் சட்டத்தரணி மற்றும் பவரலிடமிருந்து, டிவிதுறவத்த, ஏக்கர் 20 இலுள்ள சிங்கள மற்றும் தமிழ் சகவாழ்வை ஊக்குவிக்கும் நோக்குடன் நிறுவப்பட்ட ஒரு கிராமத்தில், பொதுமக்களுக்கிடையிலான ஒரு பிணக்கின் பொழுது நீதியான முறையில் தமது கடமையை பொலிசார் செய்யவில்லை என முறைப்பாடு பெறப்பட்டது. ஒரு விசாரணைக்குழு அவ்விடத்திற்கு விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்டது. விசாரணையின்பொழுது பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும் உரிய தரப்புக்களிடமிருந்தும் கூற்றுக்கள் பதிவு செய்யப்பட்டன. முடிவிலே அரச அதிகாரிகள் தமது கடமைகளை சட்டத்தின் பிரகாரம் நீதியான முறையில் செய்துள்ளனர் என தெரியவந்தது.

#### 2.1.2.4 காத்தான்குடிக்கான விசேட விஜயம்

4 ஆம் அத்தியாயத்தில் முழுமையான அறிக்கை காணப்படுகிறது.

### 2.1.3 தடுத்து வைப்புக் கட்டளைகளின் பதிவுகள்

இ.ம.ஆ சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் 1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக

ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 10) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கின் பிரகாரம் யாதும் ஒருவர் கைது செய்யப்பட்டோ அல்லது தடுத்து வைக்கப்பட்டிருப்பின் கைது செய்பவர் அல்லது தடுத்து வைக்கும் கட்டளையை இடுபவர் அத் தடுப்பு அல்லது தடுத்துவைப்புக் குறித்தும், எங்கே அவர் வைத்திருக்கப்படுகிறார் அவ்வாறு கைது செய்தது அல்லது தடுத்து வைக்கப்பட்டிருப்பவர் எப்போது விடுவிக்கப்படுவார் அல்லது வேறொரு தடுத்து வைப்பு இடத்திற்கு மாற்றப்படுவார் என்பது குறித்த அனைத்தையும் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும்.

ஆணைக்குழுவானது தடுத்து வைப்பிற்கான ஒரு பதிவினைப் பேணுவதுடன் 2012 ஆம் ஆண்டில் 1053 தடுத்து வைப்புக்கட்டளைகள் பதியப்பட்டுள்ளன.

### 2.1.4 சில முக்கியமான சம்பவங்கள்

#### 2.1.4.1 சுற்றாடல் சம்பந்தப்பட்டது - HRC/6441/07

**வண. கொலோனே சிறிஷாந்த ஹிமி மற்றும் ஏனையோர்**

**எதிர்**

**செயலாளர் பௌத்த மற்றும் சமய விவகாரங்கள் அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் ஒன்பது பேர்**

சிவனொளிபாதமலையின் உச்சியிலே கண்ணாடியால் மூடப்பட்ட ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதானது பொதுமக்களின் கலாசார மற்றும் மத உரிமையை மீறுவதாகும் என அதை நிறுத்துமாறு மனுதாரர் ஒரு முறைப்பாட்டைச் செய்திருந்தார். சப்பியும் பரமித்த சன்விதானய எனப்படும் இலாபநோக்கமற்ற நிறுவனத்தினால் பிரதம குருவின் இணக்கத்துடன் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அன்பளிப்புகளால் ஒரு கண்ணாடியால் மூடப்பட்ட கட்டிடத்தை அமைப்பதற்கு பொறுப்பெடுக்கப்பட்டதெனவும், இந் நோக்கத்திற்காக பல ஊடகங்களின் ஊடாக நிதியீட்டங்கள் மேற்கொள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிட்டிருந்தாகவும் ஆணைக்குழுவால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. இக் கட்டிட வேலையானது பிரதமகுருவின் மேற்பார்வையின் கீழே மேற்கொள்ளப்பட்டதாகவும் உல்லாசப்பயணிகளுக்காக கேபிள் கார் சேவைக்கான கருத்திட்டம் ஒன்றும் இருந்ததாகவும் மேலும் தெரியவந்தது.

கட்டிட நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு முன்பதாக உரிய செயன்முறைகள் பின்பற்றப்படவில்லையெனவும் ஆணைக்குழுவின் விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டதுடன், ஆணைக்குழுவானது பதிலளிப்பவரிடம் கட்டிட நிர்மாணத்தை உடனடியாக நிறுத்தும்படி தனது சிபார்சுகளை தெரிவித்ததுடன், சிவனொளிபாதமலையின் முழுப்பகுதியையும், செல்லும் வழியையும், உலக மரபுரிமையாக அங்கீகரித்ததுடன், கட்டிட நிர்மாணமானது புதைபொருளியல் திணைக்களத்தின் வழிகாட்டுதலின் கீழ், உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் போன்ற எல்லாத் தரப்புக்களுக்கும் அறிவித்த பிற்பாடு செய்யப்பட வேண்டுமெனவும் பணித்தது. கட்டிட நிர்மாணத்தை நிறுத்துவதற்கு பதிலளிப்பவர்கள் செயற்பாடு காட்டாமையின் நிமித்தமாக இலங்கை ஜனநாயகக் குடியரசின் 1948 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழான சமய மற்றும் கலாசார உரிமைகளையும், மனித உரிமைகள் மீதான உலகளாவிய பிரகடனத்தையும் (1948), 1931 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க கோயில்கள் சட்டத்தையும் அது மீறிவிட்டதாக ஆணைக்குழு மேலும் பிரகடனம் செய்தது.

#### 2.1.4.2 சிறைச்சாலை நிர்வாகம் - HRC/3712/10, HRC/2891/10, HRC/2414/10, HRC/2306/10, HRC/4158/10, HRC/4293/10

**வெலிக்கட சிறைச்சாலையில் தடுத்து வைத்திருக்கப்படுபவர்கள், வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் எதிர்**

**வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலை பொறுப்பதிகாரி, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்**

தனது கணவர் உயர் குருதியமுக்கத்தால் துன்புறுவதாகவும், அவர் ஒரு நீரிழிவு நோயாளியாக இருப்பதாகவும் முறைப்பாட்டாளர்களில் ஒருவர் தெரிவித்ததுடன் சிறைச்சாலையின் பிரதம வைத்திய அதிகாரி தொடர்ச்சியாக அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கவில்லையெனவும் மருந்தில் அடிக்கடி மாற்றங்களை ஏற்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் கணவரிடம் அவர் மேற்கொள்ளும் விஜயங்களும் வரையறுக்கப்பட்டிருந்தன.

புலனாய்வு மற்றும் விசாரணைக்கு பின்பு ஆணைக்குழுவானது பின்வரும் பரிந்துரைகளை செய்தது.

1) தடுத்து வைத்திருக்கப்படுபவர்களை வைத்தியசாலைக்கு அனுப்புமாறு நீதிமன்றக் கட்டளைகள் இருந்தபொழுதிலும் கூட தேசிய வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அவர்கள் அனுப்பப்படவில்லை. ஆகவே சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இவ்வண்ணமாக சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்கா வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2) வைத்தியசாலை பணியாட்டொகுதியினருக்கும் பதிலளிப்போருக்கும் இடையிலான நிர்வாக சமனின்மைகளின் நிமித்தமாக தடுப்புக்காவலில் உள்ளவர்கள் தமது மருத்துவ உதவி பெறும் உரிமையிலிருந்து விலக்கி வைக்கப்பட முடியாது.

3) தடுத்து வைக்கப்படுவோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதும் செயன்முறைகள் நீதியானதாகவும் சுயாதீனமானதாகவும் இருக்க வேண்டும்.

**2.1.4.3 கல்வி தொடர்பானது - HRC/4643/09**

**திருமதி. K. லியனகே**

**எதிர்**

**எல்பிற்றிடிய ஆனந்தா மத்திய கல்லூரி தரம் 13 (கலைக்கு பொறுப்பான ஆசிரியர்)**

தனது எல்பிற்றிய கல்லூரியில் கல்வி பயிலும் மகன், பதிலளிப்பவர் ஒரு கடினப் பந்தை அவரை நோக்கி வேண்டுமென்றே எறிந்தபொழுது உதட்டில் காயங்களுக்குள்ளாகி இருப்பதாக பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. எல்பிற்றிய பொலிஸ் பொறுப்பதிகாரி எல்பிற்றிய நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். சம்பவத்தை விசாரித்த சட்ட வைத்திய அதிகாரியிடமிருந்தான மருத்துவ சட்ட அறிக்கையையும் சம்பவத்தைப் பார்த்த மாணவர்களிடமிருந்தான சத்தியக்கடதாசியையும் ஆணைக்குழு சேகரித்துக் கொண்டதுடன், இது குறித்து விசாரணை நடத்தி பின்வரும் சிபார்சுகளைச் செய்தது.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரை 11 இற்கமைய மாணவர் உரிமையானது மீறப்பட்டுள்ளதுடன், பதிலளிப்பவரை முறைப்பாட்டாளருக்கு நட்டஈடாக ரூபா 10,000/- செலுத்துமாறும் பணித்தது. மேலும் ஆணைக்குழுவானது கல்வியமைச்சின் செயலாளரிடம் பதிலளிப்பவருக்கு எதிராக ஒரு ஒழுக்காற்று விசாரணை நடத்தும்படியும் அது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் பணிப்புரை விடுத்தது

**2.1.4.4 சுற்றாடல் - HRC/2073/09, HRC /1166/09,HRC/4945/09,HRC/5405/09**

**Ms சந்திரா அமரசிங்க**

**எதிர்**

**செயலாளர், ஜா எல பிரதேச சபை / தவிசாளர் BOI/ தவிசாளர் CEA / தவிசாளர் இலங்கை L R&D Corp /தவிசாளர் ருனுயு**

**முழு அறிக்கை 4 ஆம் அத்தியாயத்தில் காணப்படுகின்றது.**

**2.1.5 முடிவுரை**

இந்த வருடமும் மீண்டும் பிரிவானது 3372 விடயங்களை பூர்த்தி செய்துள்ளது. அவ்விடயங்களில் 1933 மாத்திரமே 2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளுடன் தொடர்புடையதாக உள்ளது. குறித்த ஆண்டினபொழுது ஆணைக்குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3799 ஆகும். ஆகவே 2012 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் 1439 முறைப்பாடுகள் 2013 க்கு முன்வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பிரிவால் ஆகக் குறைந்தது 75% ஆன முறைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள தடைக்கான காரணங்களாவன பாரதூரமாக விசாரிக்கப்பட்டு, ஆணைக்குழுவின் பதிவுகளில் உள்ள முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய சம்பவங்களின் சேருகையை தடுக்கும் முகமாக அவை கவனிக்கப்பட வேண்டும்.

## 2.2 கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப்பிரிவு

கண்காணிப்பு மற்றும் மீள்பார்வைப் பிரிவிடம், நாட்டில் மனித உரிமைகளின் நிலையை கண்காணிக்கும் பணி அளிக்கப்பட்டுள்ளது. அரச முகவர்களால் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதற்கு இட்டுச் செல்லக்கூடிய ஏதும் முறைமைத் தவறுகளை இனங்காணுவதும், அவ்வண்ணமான வன்முறைகளை விளைவிக்கக்கூடிய நிர்வாக மற்றும் நிறைவேற்று செயற்பாடுகளைத் தவிர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பரிகார ஏற்பாடுகளை சிபார்சு செய்வதும் இப் பிரிவு செய்ய வேண்டியாதாகும். பிரிவு ஆனது உண்மை கண்டுபிடிக்கும் பணிகளையும் / ஆய்வுகளையும் / கற்கைகளையும் பொறுப்பெடுப்பதுடன் அக்கருத்திட்டங்கள் பூர்த்தியடைந்த பிற்பாடு அரசாங்கத்திற்கு சிபார்சுகளை சமர்ப்பிக்கிறது. பிரிவானது பொதுமக்களுடன் ஈடுபடும்பொழுது அரச அதிகாரிகள் மனித உரிமைகள் மீறுவதைத் தடுப்பதற்காக பொது வழிகாட்டுதல்களைப் பிரசுரிப்பதுடன் நியம மாதிரிகளையும் வழங்குகிறது. மேலும் அவசியமானதாக கருதப்படும்பொழுது இது அவ்வண்ணமான வழிகாட்டுதல் / மாதிரிகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான படிநிலைகளையும் எடுக்கிறது.

இப்பிரிவால் ஆற்றப்படும் சில முக்கிய பணிகளாவன,

### 2.2.1. வசதி குறைந்த அல்லது நிறுவன மயப்படுத்தப்பட்ட ஆதரவற்ற சிறுவர்களுக்கு பாடசாலை அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் சம சந்தர்ப்பம் தொடர்பான கலந்துரையாடல்கள்

பெற்றோர் கவனத்தையும் பாதுகாப்பையும் இழந்த ஆதரவற்ற பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதியிலிருந்து விலக்கப்பட்டுள்ள பிரச்சினையை கலந்துரையாடுவதற்காக ஒரு விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. பிள்ளையானது அசலான பெற்றோர் ஆவணத்தைக் காட்ட முடியாதிருப்பதன் நிமித்தம் பாடசாலைகளுக்கு அனுமதி கொடுக்கப்படுவதில்லை என்ற பிரச்சினை தொடர்பான ஒரு விசாரணை மேற்கொள்ளப்பட்ட பிற்பாடே இவ் விடயம் இனங்காணப்பட்டது. கலந்துரையாடலின் பிற்பாடு ஆணைக்குழுவானது பாடசாலை அனுமதி தொடர்பாக சிறுவர் இல்லங்களில் உள்ள அல்லது நிறுவனங்களுக்கு வரையறுக்கப்பட்ட எல்லாப் பிள்ளைகளுக்கும் பாடசாலை அனுமதி தொடர்பாக சம சந்தர்ப்பம் வழங்க அனுமதிக்கும் இவ்விடயம் மீது பொதுவழிகாட்டுதல்களை வழங்கவோ அல்லது கொள்கை மாற்றத்தை செய்யவோ தீர்மானித்தது.

### 2.2.2. மொழிக் கொள்கையின் அமுல்படுத்தலை கண்காணித்தல்

பொதுமக்களில் சில பிரிவினருக்கு ஏற்படுத்தப்படும் பாரபட்சம் மற்றும் இன்னல்களைத் தடுக்கும் முகமாக அரசியலமைப்பின் கீழ் தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதைக் கண்காணிப்பதை இப்பிரிவானது இந்த ஆண்டு ஆரம்பித்தது. இலங்கையின் அரசியலமைப்பானது சிங்களம் உத்தியோகபூர்வமொழி எனவும், 13வது திருத்தத்தின் கீழ் தமிழும் இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாக்கப்பட்டது. மேலும் அரசியலமைப்பானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகியன இலங்கையின் தேசிய மொழி எனக் குறிப்பிடுகிறது.
வீதியிலுள்ள பலகைகளின் தகவல்கள், பொதுப் போக்குவரத்து வாகனங்கள், வடக்கு கிழக்கிலும் கொழும்பிலும் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்தும் மக்களுக்கு செய்யப்படும் அறிவிப்புக்கள் மீதான தகவல்கள் தொடர்பாக மொழிக்கொள்கை மீறப்படும் கிட்டத்தட்ட 80 சந்தர்ப்பங்கள் தொடர்பாக மாற்றுக்கொள்கைக்கான நிலையம் முறைப்பாடு செய்தது.

I. பிரிவானது இவ் விடயத்தை விசாரணை செய்தது அதன் பின்னர் இலங்கைப் போக்குவரத்துச்சபை (SLTB) ஆனது மாகாண முகாமையாளர்கள், டிப்போ அத்தியட்சகர்கள் மற்றும் ஏனைய உரிய அதிகாரிகளுக்கு அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல்படுத்துமாறு பணித்தது. ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்ற இலங்கை போக்குவரத்துச் சபை சுற்றுநிருபத்தின் பிரதியின் பிரகாரம் இவ் அமுல்படுத்தலின் முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் அறிக்கை சமர்ப்பிக்கும்படி அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

II. அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கையானது நாணயத்தாள்கள் மீதான எழுத்துக்களை அச்சடிப்பதில் பின்பற்றப்படவில்லை என ஒரு முறைப்பாடு பதிவாகியது. இவ்விடயம் தொடர்பான ஒரு விசாரணையின்பொழுது மத்தியவங்கியின் ஆளுநரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பதிலளிப்பவர் இவ்வண்ணமான மீறுகை இடம் பெற்றதை முறைப்பாட்டாளரிடம், ஏற்றுக்கொண்டதுடன் எதிர்காலத்தில்

அச்சடிக்கப்படவிருக்கும் நாணயத்தாள்களில் மும்மொழிக்கொள்கையை ஒட்டி ஒழுகுவதற்கு ஒரு உத்தரவாதத்தை வழங்கினார்.

### 2.2.3. 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பூ கோள காலாந்த மீளாய்வு அறிக்கையின் சிபார்சுகளை அமுல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல்

ஐநாவின் மனித உரிமைகள் பேரவையில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற பூகோள கால்ந்த மீளாய்வில் இலங்கை தொடர்பாக செய்யப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக அரச அதிகாரிகள் மற்றும் ஏனைய பங்காண்மையாளர்களுடன் மீள்பார்வைக்குள்ளாகும் இவ்வாண்டில் ஆணைக்குழு கலந்தாலோசனைகளை நடாத்தியது. பூகோள கால்ந்த மீளாய்வு என்பது ஒரு புதிய மனித உரிமைகள் பொறிமுறையாகும். இதன் ஊடாக மனித உரிமைகள் பேரவை காலத்திற்கு காலம் 192 உறுப்பு நாடுகளினது மனித உரிமைகள் கடப்பாடுகள் மற்றும் அர்ப்பணிப்புக்களை மீள்பார்வை செய்கிறது. 2008 ஆம் ஆண்டில் செயற்குழுவால் கொடுக்கப்பட்ட 52 சிபார்சுகளை இலங்கை ஏற்றுக்கொண்டதுடன் 8 தொடர்பாக பொதுப் பதிலை வெளிப்படுத்தியதுடன், 28 சிபார்சுகளை மறுத்தும் இருந்தது. இதனை அரசாங்கம் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மறுமுனையில் சிவில்சமூக அமைப்புக்களிற்கும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க பொறுப்புள்ளது.

2012 ஏப்ரலில், 2008 சிபார்சுகளின் அமுல்படுத்தல் தொடர்பாக அரச தரப்புக்கள் மற்றும் சிவில் தரப்பு பிரதிநிதிகளுடன் இ.ம.ஆ இரு வெற்றிகரமான கலந்துரையாடல்களை தனித்தனியாக நடாத்தியதுடன், கலந்துரையாடலில் பங்குபற்றுபவர்களால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களை மதிப்பீடு செய்தது. இறுதியாக இ.ம.ஆ இன் எழுத்து மூலமான சமர்ப்பணமானது இரண்டாவது பூகோள கால்ந்த மீளாய்வு சுற்று 14வது அமர்வுக்காக 2012 ஏப்ரலில் சமர்ப்பிக்கப்பட்டது.

பூகோள கால்ந்த மீளாய்விக்கான இ.ம.ஆ இன் எழுத்து மூல சமர்ப்பணம் ஆனது பின்னிணைப்பு 1 இல் காணப்படுகிறது.

### 2.2.4. சிறைச்சாலை விடயங்கள் தொடர்பாக அரச அதிகாரிகளுடன் விசேட கலந்துரையாடல

சிறைச்சாலைகளில் உள்ள இடநெரிசல்கள், மற்றும் தண்டனை சிறைக்கைதிகள், நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைக்கைதிகள் தொடர்பான விடயங்கள் குறித்து புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, சட்டமாஅதிபர் திணைக்களம், சமூக சேவைகள் அமைச்சு, மற்றும் தேசிய அபாய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை என்பன உட்பட்ட 40 அரச அதிகாரிகளுடன் ஒரு கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக 2012 செப்ரெம்பரில் இந்தக் கலந்துரையாடல் இ.ம.ஆ ஆல் ஒழுங்கு செய்யப்பட்டதை கவனிப்பது முக்கியமானது. தவிசாளரும் ஒரு ஆணையாளரும் மற்றும் கண்காணிப்பு பிரிவின் பல உத்தியோகத்தர்களும் 2012 வெலிக்கடை சிறைச்சாலைக்கு விஜயம் செய்ததுடன், உடனடித் தீர்வு தேவைப்படும் சிறைக்கைதிகளுக்கான பல மனித உரிமை விடயங்கள் இருப்பது குறித்து அறிந்துகொண்டனர். ஆணைக்குழுவானது சிறைச்சாலைகள் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் இக் கலந்துரையாடலை ஒழுங்கு செய்தது. இதன் மூலமாக ஆணைக்குழுவானது சிறைச்சாலைகளின் அவசரப்பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்திற்கு சில சிபார்சுகளை வழங்க முடியும்.

கலந்துரையாடலில் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களின் சுருக்கம் அத்தியாயம் 4 இல் காணப்படுகிறது

### 2.2.5. புலம்பெயர்வோர் பிரச்சினைகளில் ஒரு புதிய மையத்தை இ.ம.ஆ ஏற்படுத்தியுள்ளது

புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பாக பல ஆண்டுகளாக ஆணைக்குழுவானது அக்கறை கொண்டிருப்பதுடன் வீட்டு வேலைவாய்ப்புக்களின் பிரதான ஒழுங்கமைப்பு அமைப்பாகிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பல் அமைச்சினால் தொழில் புலம்பெயர்வுக்கான ஒரு நிறுவக சட்டகவேலை வழங்கப்படுவதன் முக்கியத்துவத்தையும் அங்கீகரிக்கிறது.

தொழிலாளரைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளிலுள்ள இலங்கை இராஜதந்திர பணியகங்கள், வெளிநாடுகளிலுள்ள

எல்லா இலங்கைப் பணியாளர்களுக்கும், பாதுகாப்பையும் நலனோம்பலையும் வழங்குவதற்காக, ஆணையுடனும் வசதிப்படுத்தல்களுடனும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைச் சூழமைவில் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஊக்குவித்தலில் பல முக்கிய அரச நிறுவனங்கள் மற்றும் முகவர்களாலும் ஆற்றப்படும் முக்கிய வகிபங்குகளை பாராட்டும் அதேவேளையில் எமது புலம்பெயர் தொழிலாளர்கள் அவர்களது வேலைவாய்ப்பு பெறும் நாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் தூதராலயங்களால் அவர்களின் விருப்புக்களை கவனிப்பது தொடர்பாக ஆற்றப்பட வேண்டிய வகிபங்கு குறித்து ஆணைக்குழுவானது பெரும் கவலை கொண்டுள்ளது. வேலைவழங்கும் நாடுகளில் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதில் தமது கடமைகளை ஆற்றும்பொழுது இராஜதந்திரப் பணியகங்கள் தூதரகங்கள், தூதரலாயங்கள் மற்றும் தொழிலாளர் நலனோம்பல் உத்தியோகத்தர்கள் தமது பிரசைகள் தொடர்பாக ஒரு முக்கிய வகிபங்கை ஆற்றுகின்றனர். மேற்படி விடயத்தில் இருந்து இ.ம.ஆ தவிசாளர், வெளிவிவகார அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலனோம்பல் அமைச்சு என்பவற்றின் கௌரவ அமைச்சர்கள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தவிசாளர் போன்றோரின் கவனத்திற்காக பின்வரும் வழிகாட்டுதல்களை வெளியிட்டார்.

- முன்வைக்கப்பட்டுள்ள புலம்பெயர்வோர் தொடர்பாக ஒரு வலைப்பின்னல் முறைமையை நிறுவுவதும் அவர்களின் வழக்குகளின் நிலை மற்றும் அவர்கள் தூதரலாயத்தையோ அல்லது தூதரக பிரதிநிதிகளையோ மற்றும் குடும்ப உறுப்பினர்களையோ தொடர்புகொள்ளுவதற்கான அவர்களின் உரிமை மற்றும் பின்தொடர்வுச் செயன்முறைகளைக் கொண்டிருப்பதற்கான உரிமை என்பன குறித்து சரியாக தகவலளித்தல்.

- ஒழுங்கீனமான புலம்பெயர்வோர் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வீடுகள், மற்றும் நிலையங்கள், மற்றும் சுதந்திரத்திலிருந்து தடுக்கப்பட்டுள்ள புலம்பெயர்வோருக்கான உதவி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்வதற்கும் தொடர்வதற்கும் மற்றும் தொடர்பாடல் மீதான இடைவெளியை நிரப்புவதற்கும் சட்ட உதவிகள் மொழிபெயர்ப்பு சேவைகள் உட்பட்டனவற்றை வழங்குவதற்கும் சமூக மற்றும் உளவியல் வசதிகளை வழங்குவதற்கான ஒரு ஒழுங்குக்கிரமான விஜயம் செய்யும் பொறிமுறையை நிறுவுதல்

- குறைந்த திறனுடைய புலம்பெயர்வோர் தொழிலாளர்களாக சென்றுள்ள வீட்டுப்பணிப்பெண்களின் சிறப்பாக வளைகுடா நாடுகளுக்கு சென்ற வீட்டுப் பணிப்பெண்களின் நலனோம்பல் தொடர்பாக காலத்திற்கு காலம் பரிசோதித்துக் கொள்வதற்காக தூதரக அதிகாரிகளையும் நலனோம்பல் உத்தியோகத்தர்களையும் இயலச் செய்வதற்கான முறைமை ஒன்றை இலங்கை வெளிநாட்டு பணியகமும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் வடிவமைக்க வேண்டும்

- புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இலங்கையுடனான அவர்களது கலாசார தொடர்புகளைப் பேணுவதற்கும் தேவைப்படும் எல்லா செயற்பாடுகளினதும் செயற்படுத்துகைக்காக தூதரகம் மற்றும் தொழிலாளர் நலனோம்பல் அதிகாரிகளுக்கு போதிய வளங்கள் வழங்கப்பட வேண்டும்

- புலம்பெயர் தொழிலாளர்களின் பால்நிலை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முகமாக பெண் உத்தியோகத்தருடன் தொடர்பாடல் செய்வது அவர்களுக்கு பொதுவாக சுலபமாக இருக்கக்கூடியதாக எல்லாத் தூதரகங்களிலும் பணியாற்றுவதற்கு ஒரு பெண் தொழில் உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும்

- தூதரக / நலனோம்பல் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பதவிநிலைகளுக்கு இருத்தப்படுவதற்கு முன்பாக அவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் போதிய தன்மையை உறுதிப்படுத்தும் முகமாக தற்போதுள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது இலங்கை வெளிநாட்டு பணியகம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்

- இலங்கைப் பணியகங்களுடன் தொடர்புடைய பணியகத்தின் பிரதிநிதிகளுக்கான தற்போதுள்ள பயிற்சி பாடத்திட்டத்தை பகுப்பாய்வு செய்வதற்கும், அவர்களுக்கான ஒரு புதிய அனைத்துமடங்கிய பயிற்சி கைந்நூலை வரைவதற்கும், ஒரு நிபுணத்துவ ஆலோசகரின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பணியாளர்களைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளிலுள்ள அனைத்து இராஜதந்திர தூதரகங்களிலும் தொழிற்படும் பொறிமுறையாக மேற்படி வழிகாட்டல்கள் கைக்கொள்ளப்பட வேண்டும் என ஆணைக்குழு ஆர்வமாக உள்ளது. மையத்தின் ஊடாக இவ்வழிகாட்டுதல்களின் அமுல்படுத்தல் கண்காணிக்கப்படுகிறது.

### 2.2.6. ஜோர்தான் அம்மானிலுள்ள தூதரகத்தில் அநாதரவாக உள்ள உள்நாட்டு பணியாளர்கள் நடத்தப்படுவது தொடர்பான அக்கறை

ஜோர்தான் அம்மானிலிருந்து அண்மையில் திரும்பி வந்த ஒரு புலம்பெயர் பணியாளர், அங்கு 200 க்கு மேற்பட்ட உள்நாட்டு பணியாளர்கள் அநாதரவாக தூதரக பாதுகாப்பு வீட்டில் வாழ்வதாக தெரிவித்தார். அவர்களில் பெரும்பாலானோர் அவர்களது முன்னைய வேலைவழங்குனர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பதுடன், பெரும் சிரமப்பட்டு தண்டங்களைக் கட்டியுள்ளதாகவும், வீடு திரும்பவும் விருப்பமாக உள்ளனர். இ.ம.ஆ தவிசாளர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தவிசாளரிடமிருந்து ஒரு அறிக்கையைக் கேட்டிருக்கிறார். ஆணைக்குழுவானது ஜோர்தான் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமிருந்து இத்தகவலை சரிபார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதுடன் இவ்விடயம் தொடர்பில் அவர்களின் தலையீட்டையும் கேட்டுள்ளது. வீட்டுப்பணியாளர்களுக்கான பிழையான நடத்தை குறித்து இவ்வாறான பல சம்பவங்கள் அறிக்கை செய்யப்பட்டிருப்பதனால், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது ஒவ்வொரு வேலையாள் தொடர்பாகவும் வெளிநாட்டு வேலை வழங்குனர் 100 அமெரிக்க டொலர்களை வைப்பாக செலுத்துதல் மற்றும் ஜோர்தான் மற்றும் சவுதிஅரேபியா போன்ற சில வளைகுடா நாடுகளிற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான வயதை 25 ஆக உயர்த்துத்தல் போன்ற வீட்டுப்பணியாளர்களின் வேலைவழங்குனர் தொடர்பாக சில நிபந்தனைகளை விதித்துள்ளது.

### 2.2.7. மிரிஹானையிலுள்ள வெளிநாட்டு தேசியத்தினரை வைத்திருக்கும் நிலையம் பெயர்மாற்றம் செய்யப்பட்ட மிரிஹானையிலுள்ள வெளிநாட்டோரை தடுத்து வைத்திருக்கும் இல்லத்தை மீளத் திறத்தல்

மேற்படி தடுத்து வைத்திருக்கும் நிலையத்தின் நிலைமைகளை அவதானித்த பின்னா் ஆணைக்குழுவானது பின்வரும் சிபார்சுகளைச் செய்துள்ளது

- i) நிலையத்தின் தற்போதுள்ள நிலைமைகளை பரிசீலித்து அதனை இடமாற்றுமாறும் அவ்வாறு செய்யும்பொழுது பால்நிலை கூருணர்வுக்கு மதிப்புக் கொடுப்பதுடன், இயலாமையுடைய ஆட்களின் தேவைப்பாடுகளைத் தீர்த்து வைக்கவும்
- ii) நிலையத்தை வினைத்திறனான முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு வேண்டிய பணியாட்டொகுதியினரை குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரால் ஒதுக்கிக் கொள்ளவும்
- iii) உரிய நாட்டு தூதரகங்கள்/உயர் ஸ்தானிய அலுவலகங்கள்/தூதரக உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைந்து அவர்களை திருப்பி அனுப்பும் செயன்முறையை வசதிப்படுத்தவும்
- iv) அவ்வாறு தடுத்து வைத்திருப்போரின் தரவுத்தளத்தை சேகரித்துப் பேணவும்
- v) நிறுவன அடையாளத்துவத்தை மீள்பெயரிடவும்
- vi) தடுத்து வைக்கப்படுபவர்கள் ஒரு தற்காலிக் இடத்திற்கு அல்லது உத்தேச மினிவாங்ஹொட நிரந்தரக் கட்டிடத்திற்கு நகர்த்தப்படும் வரைக்கும் தற்போதுள்ள கட்டிடத்தை புனரமைப்பதுடன், மிரிஹான தடுத்து வைப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டவர்களின் நிலையை தரமுயர்த்தவும். இவ்வாறான ஒரு மீள்நிர்மாணத்திற்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கு ஐமூஆ தனது விருப்பத்தை பெளிப்படுத்தியுள்ளது.

ஆணைக்குழுவால் எடுக்கப்பட்ட முனைப்புக்களின் விளைவாக இவ்வில்லமானது புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு தேசியத்தினரை வைத்திருக்கும் நிலையம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது. நிலையத்தில் தடுத்து வைத்திருக்கும் ஆட்களின் நிலைமைகளும் கணிசமானளவு முன்னேற்றம் அடைந்துள்ளது.

### 2.2.8 முடிவுரை

2012 ஏப்ரலில் பூகோள காலாந்த மீளாய்வுக்கு இ.ம.ஆ ஆல் அனுப்பி வைக்கப்பட்டுள்ள எழுத்துமூலமான சமர்ப்பணங்களானவை ஆணைக்குழுவானது பூகோள காலாந்த மீளாய்வுக்கு முதற்தடவையாக சமர்ப்பித்திருக்கின்றது என்ற வகையில், இப்பிரிவானது வேலையின் ஒரு சுமுகமான சாதிப்பாக பார்க்கக்கூடியதாக உள்ளது. புலம்பெயர் தொழிலாளர் தொடர்பாக உரிய அமைச்சுக்களுக்கு புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாப்பது தொடர்பாக வழிகாட்டுதல்களைச் சமர்ப்பிப்பதன் ஊடாக இவ்வருடத்திலே ஆற்றப்பட்ட வகிபங்கானது தொழிலாளர்களால் எதிர்கொள்ளப்பட்ட துன்பங்கள் மட்டில் கண்காணிப்பு பிரிவின் பங்கிலுள்ள விழிப்புணர்வைக் காட்டுகிறது. இது அடிக்கடி எமது ஊடகங்களில் காட்டப்பட்டிருந்ததாகும் அத்துடன் மொழிக்கொள்கையின் அறிமுகப்படுத்துதல் மற்றும் சிறைச்சாலைப் பிரச்சினை மீதான

கலந்துரையாடல்கள் என்பனவும் இவ்வருடத்திலே பிரிவின் சாதனைகளாக உள்ளன.

## 2.3 கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு

இப்பிரிவானது முன்னைய வருடங்களில் சிறுவர் உரிமைகள், புலம்பெயர்வோர் உரிமைகள், மனித வஞ்சக்கடத்தல், பாலியல் சமத்துவம், வீட்டு வன்முறை, இயலாமையுடையோர் உரிமைகள், முதியோர் உரிமைகள் போன்ற பல மனித உரிமை விடயங்களை உட்படுத்திய விடயங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது. ஆணைக்குழுவின் ஆணையை மேற்கொள்வதற்காக ஒழுங்குக்கிரம அடிப்படையில் நிகழ்த்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் ஒரு சுருக்க விபரம் பிரிவின் அறிக்கையின் இறுதியிலிருந்து சுருக்கமாக தரப்படுவதுடன், இவ்வருடத்தின்பொழுது மேற்கொள்ளப்பட்ட சில முக்கியமான நிகழ்ச்சித்திட்டங்கள் சுருக்கமாக கீழே விபரிக்கப்படுகின்றன.

### 2.3.1 பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் (TOT) பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்

கம்பஹாவிலுள்ள சனசமூக பொலிஸ்பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டத்திலே 25 ஆண்கள் 06 பெண்கள் உள்ளடங்களாக தீவின் வேறுபட்ட பிராந்தியங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்தமாக 31 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மனித வஞ்சக்கடத்தலைத் தடுத்தல், சனசமூக பொலிசாரின் மனித உரிமைகள் பாதுகாப்பு முறைமை, பெண்கள் சிறுவர்கள் முதியோர் போன்ற நலிவான குழுக்களின் உரிமைகள் போன்ற விடயங்களில் 5 நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

### 2.3.2 சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு

I. ஐநா பொதுச் செயலாளருக்கான சிரேஷ்ட பிரதிநிதியின் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடு மீதான நிகழ்ச்சித்திட்ட அதிகாரி அரசாங்கப் பங்காளர்களுடன் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் மீதான நிரலில் இருந்து அகற்றல் செயன்முறையின் மாதிரிகள் மற்றும் நாட்டின் செயலணியை முடிவுக்கு கொண்டு வருதல் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். விஜயம் மேற்கொண்ட தொழில்நுட்பக் குழுவானது இ.ம.ஆ பணியாட்டொகுதியினருடன் ஒரு கூட்டத்தை நடாத்தியது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகளில் இராணுவத்தின் பிரசன்னம் இருப்பது குழுவின் அக்கறைகளுள் ஒன்றாக இருந்தது. விஜயத்தின்பிற்பாடு கிளிநொச்சி பூநகரி கி ஃ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இராணுவ பிரசன்னம் குறித்து இ.ம.ஆ க்கு அறிவிக்கப்பட்டது. 1612 மற்றும் 1882 பாதுகாப்புச்சபை தீர்மானத்தின் தொடர்ச்சியாக இலங்கையில் ஆயுத முரண்பாட்டில் சிறுவர்கள் மீதான பொதுச் செயலாளரின் 4வது அறிக்கையின் வெட்கத்திற்குரிய நிரலில் இருந்து 2012 டிசெம்பரில் இலங்கை அகற்றப்பட்டது. பாதுகாப்புச் சபைக்கு செயலாளர் நாயகம் விடுத்த தனது வருடாந்த அறிக்கையில் முரண்பாட்டு வலயங்களில் சிறுவர்களின் நிலைமைகள் குறித்த ஒரு மேலோட்டப்பார்வையை வழங்கியதுடன் அவர்களின் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட ஏற்பாடுகள் குறித்தும் மேலோட்டப்பார்வையை வழங்கினார்.

II. சிறுவர் உரிமை மீறல்களை அறிக்கையிடல் மற்றும் பதிற்செயற்பாடு காட்டுவதில் சனசமூகத்தின் நம்பிக்கையை அதிகரித்தல் மீதான யுனிசெப் இனால் நிதியீட்டப்பட்ட இ.ம.ஆ நிகழ்ச்சித்திட்டம் கிளிநொச்சியில் நடாத்தப்பட்டபொழுது கிளிநொச்சி பூநகரி கி / விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இராணுவம் நிலைகொண்டிருப்பது தொடர்பான அதே கேள்வி பங்குபற்றுனர்களால் எழுப்பப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் இ.ம.ஆ தவிசாளரால் அறிவுறுத்தப்பட்டு HRCSL யாழ்ப்பாண பிராந்திய ஒருங்கிணைப்பாளர் திரு.கனகராஜா, பிரிகேடியர் R.P ராஜபத்திரான RSP, USP க்கு இது குறித்து எழுதியிருந்தார். 2012 ஜுலையில் கிளிநொச்சியில் உள்ள பாதுகாப்பு தலைமையகமானது தலைமைச் செயலகத்தை இடம்மாற்றுவதற்கும் பாடசாலையை மீளத் தொடக்குவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இது சிறிது காலம் எடுக்கக்கூடும் எனவும் தெரிவித்திருந்தது. மேலும் முகாமை இடம்மாற்றுவதற்கான புதிய கட்டிடம் வேலைகள் பூர்த்தியடையும் வரைக்கும் மாணவர்கள் பூநகரி மகாவித்தியாலயத்தில் பாடசாலைக்கு சமூகமளிப்பதற்கான போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

### 2.3.3 முதியோர் உரிமைகள் பாதுகாப்பது மீதான தேசிய கலந்துரையாடல்

நாட்டில் வயது முதிர்ந்த சனத்தொகையினரால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்காக 2012 ஆம் ஆண்டு ஜுன் 4 – 6 ஆம் திகதி வரைக்குமான தேசிய கலந்துரையாடலானது, வயது முதிர்தல் மீதான வரையறையற்ற செயற்பாட்டுக்குழுவுக்கு முன்மொழிவுகளை அனுப்பிவைக்கும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்டது. கலந்துரையாடலானது மற்றிட் செயற்திட்டத்தையும் அரச மற்றும் அரசுசாராத்துறைகளில் முதியோருடன் பணியாற்றும் ஆட்களின் அக்கறைகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் மனித உரிமைகள் விடயங்கள் மீது நன்கு அறியப்பட்ட அதிகாரிகளான பேராசிரியரான சாவித்திரி குணசேகர போன்றோர் மகாநாட்டில் உரையாற்றினர். இரண்டு தலைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் ஒவ்வொன்றின் கீழும் சில பகுதிகள் கலந்துரையாடப்பட்டு பொருத்தமான சிபார்சுகள் மேற்கொள்ளப்பட்டன. இச் சிபார்சுகளானவை பின்பு வரையறையற்ற செயற்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஐந்து தலைப்புக்கள் மற்றும் ஒவ்வொரு தலைப்பின் கீழும் கலந்துரையாடப்பட்ட வேறும் சில விடயங்களும் கீழே சுருக்கமாக தரப்படுகின்றன்

A) **பொதுச் சுகாதாரமும் மனநலச்சுகாதாரமும்**
- i) உணவுப்பாதுகாப்பும் போசாக்கும்
- ii) உளவளஆலோசனை, மனவடுக்குறைப்பு, நடமாடும் சுகாதார சேவைகள்
- iii) நோய்களுக்கான தேசியமட்ட பரிசோதிப்பு

B) **சமூகப் பாதுகாப்பு சமூக நலனோம்பல்**
- i) வயது முதிர்ந்தோருக்காக 3மூ வேலைகளை ஒதுக்குதல்
- ii) போக்குவரத்திற்கான சலுகை அடிப்படையிலான கட்டணம்
- iii) பெண்கள் மற்றும் சிறுவர்கள் கருமபீடங்கள் ஊடாக பொலிஸ்நிலையங்களில் முதியோர்களும் சேவைகளைப் பெறக்கூடியதாக இருத்தல்
- iv) பெற்றோர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பிள்ளைகளும் பங்களிப்புச் செய்தல்

C) **முரண்பாடு மற்றும் அழிவு நிலைமைகள் ∴ கல்வி, பரிந்துரைப்பு மற்றும் தொடர்பாடல்**
- i) அவர்களது உரிமைகள் குறித்து வயது முதிர்ந்தோருக்கு அறிவூட்டல்
- ii) தனியான இணைய மற்றும் நூலக வசதிகள்
- iii) ஊடகத்தில் நேரம் ஒதுக்குதல்

D) **கொள்கை, சட்டம் மற்றும் நிறுவன சட்டக வேலை**
- i) எல்லோருக்கும் தேசிய ஓய்வூதியம் மற்றும் தற்போதைய ரூபா 1000/- கொடுப்பனவை அதிகரித்தல்
- ii) ஓய்வு பெறும் வயதை 65 ஆக்குதல்

வரையறையற்ற செயற்குழுவுக்கு அனுப்பப்பட்ட சிபார்சுகள் பின்னிணைப்பு II இல் உள்ளன.

### 2.3.4 மத மற்றும் மனித உரிமைகள்

அண்மைக்காலங்களில் வளர்ந்துவரும் மத ரீதியான பதற்றமானது ஆணைக்குழுவின் அக்கறைக்குரிய விடயமாக உள்ளது. மீள்பார்வைக்குட்படும் இவ்வாண்டில் இ.ம.ஆ சமயத் தலைவர்களுக்கும் மனித உரிமை பணியாட்டொகுதியினருக்கும் நாட்டில் மத பற்றத்தை இல்லாது போக்குவதற்கு விழிப்புணர்வூட்டல் உதவும் எனும் நம்பிக்கையுடன் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த இ.ம.ஆ தீர்மானம் எடுத்தது. முதற் படிநிலையாக ஆணைக்குழுவுக்கு சிறந்த சேவையை வழங்கும் பணியாட்டொகுதியினருக்காக மனித உரிமைகளும் மதமும் என்ற தொனிப்பொருளின் கீழ் விசேட தொடர்ச்சியான விரிவுரைகளை ஒழுங்கு செய்தது. இவ்வாண்டின்பொழுது பின்வரும் விரிவுரைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன்

- i) இந்துமதம் - இந்து மதத்துடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் இலங்கைச் சமூகத்தில் அதன் பிரயோகத்தன்மை – ஓய்வுபெற்ற நீதியரசர் C.V. விக்கினேஸ்வரன்
- ii) பௌத்த மதம் - பௌத்த மதத்துடன் தொடர்புடைய கொள்கைகள் இலங்கைச் சமூகத்தில் அதன் பிரயோகத்தன்மை- திரு. ராஜ குறுப்பு
- iii) கிறிஸ்தவம் - கிறிஸ்தவம் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் இலங்கைச் சமூகத்தில் அதன்

பிரயோகத்தன்மை – வண. பிதா. வெஸ்லி அலெக்ஸ்சாண்டர்.

- கத்தோலிக்கத்துடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் இலங்கைச் சமூகத்தில் அதன் பிரயோகத்தன்மை.

iv) இஸ்லாம் - இஸ்லாத்துடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் இலங்கைச் சமூகத்தில் அதன் பிரயோகத்தன்மை – திருமதி. ஜெசிமா இஸ்மாயில் ஆணையாளர் இ.ம.ஆ

### 2.3.5 வேறுபட்ட இயலாமையுடைய ஆட்கள் உரிமைகளை அடைந்துகொள்வது மீதான ஊடக மகாநாடு

வேறுபட்ட இயலாமையுடைய ஆட்கள் விடயங்களைப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடைய சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதானது அதிகரித்திருப்பது தொடர்பாக பிரிவு கவலையடைந்ததுடன் வேறுபட்ட இயலாமையுடைய ஆட்கள் விடயங்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை தொடர்பான தொனிப்பொருளின் கீழ் ஒரு ஊடக மகாநாட்டையும் ஒழுங்கு செய்தது. மகாநாட்டின் பிரதான இலக்கு என்னவெனில் வேறுபட்ட இயலுமையுடைய ஆட்களின் சுதந்திரமாக நடமாடல் மற்றும் அவ்வண்ணமான ஆட்களுக்கு சனசமூகத்தில் சுதந்திரமாக நடமாடுவதற்கான போதிய வசதியை வழங்குவதற்கு எல்லாப் பங்காண்மையாளர்களுக்கும் உள்ள பொறுப்பு என்பவற்றுக்கான மக்களின் உரிமையை சமூகம் அறியச் செய்வதாகும். டாக்டர். அஜித் பெரேரா நிறைவேற்று அதிகாரி, "இறிடிய/ செயலாளர் நாயகம் 2011 ஆம் ஆண்டு ஏப்ரலில் உயர் நீதிமன்றக் கட்டளை SCFR 221/2009 எடுத்தாண்டு கட்டளையின் அமுல்படுத்தலானது பொதுமக்கள் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அவசர தேசிய பிரச்சினைக்கு இயலக்கூடிய அர்த்தபுஷ்டியான தீர்வைக் கொண்டு வரும் என நம்பப்பட்டது. மேலும் இது அவர்களது பாதுகாப்பையும் நலனோம்பலையும் அதிகரிப்பதுடன், மக்களின் வாழ்க்கை தரத்தையும் முன்னேற்றும் எனக் குறிப்பிட்டார். ஒரு வருடம் கடந்தபொழுதிலும் பல மீறுகைகள் நடைபெற்றுள்ளன எனவும் குறிப்பிட்டு ஆணைக்குழுவானது உயர் நீதிமன்றக் கட்டளையை அமுல்படுத்த அர்த்தபுஷ்டியான படிநிலைகளை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்.

### 2.3.6 ஆசியா பசிபிக் அமைப்பின் புலனாய்வு மீதான பயிற்சிக் கையேடு

ஒரு புலனாய்வுப் பயிற்சிக் கையேட்டை உருவாக்குவதற்கு தமது தகவல் சமர்ப்பிப்புக்கள் ஆவணப்படுத்தல்கள் மற்றும் நிபுணத்துவ மதியுரை ஊடாக பங்களிப்புச் செய்வதற்கு உலகம் பூராகவும் உள்ள நிறுவனங்களிடம் ஆசிய பசுபிக் அமைப்பு அழைப்புவிடுத்திருந்தது. இவ் வேண்டுகோளுக்கு பதிற்செயற்படாக இ.ம.ஆ பிரதானமாக பின்வருவன தொடர்பாக உள்ளீடுகளை வழங்கியத்து

i. இ.ம.ஆ இன் உருவாக்கம் பற்றிய பின்புலம் மற்றும் அதன் புலனாய்வு முறைமை
ii. கொடுக்கப்பட்ட வினாக்கொத்துக்களின் விபரங்கள் வழங்கப்பட்டன.

இக் கையேடானது ஒரு அனுபவமான புலனாய்வாளரும், புலனாய்வுப் பயிற்றுவிப்பாளரும் புலனாய்வுகளின் வேறுபட்ட வகைகளில் ஒரு வீச்சில் நடத்தி 10 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவங்களைக் கொண்டவருமான திரு. ஹரேத் யோண்ஸ் அவர்களால் எழுதப்பட்டது. பணியாட்டொகுதியினரின் நன்மைக்காக சில நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு பின்பு அவரை அழைப்பதற்கு இ.ம.ஆ முன்மொழிகிறது.

**கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவால் ஒழுங்கு செய்யப்பட்ட மனித உரிமை நிகழ்ச்சித்திட்டங்கள்**

| நிகழ்ச்சித்திட்ட வகை | தொனிப்பொருள் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| மனித உரிமைகள் விழிப்புணர்வு | இ.ம.ஆ | 01 |
| கலந்துரையாடல்கள் | முதியோர் உரிமைகள் மீதான தேசிய மகாநாடு | 01 |
| மகாநாடு – ஊடகம் | பெற்றுக்கொள்வதற்கான உரிமை | 01 |
| நினைவுகூர்தல் | முக்கியமான உலகதினம்<br>வயது முதிர்ந்தோர் உலக தினம்<br>சர்வதேச மனித உரிமைகள் தினம் | 03 |
| பயிற்சி | மத்தியஸ்தம் | 01 |
| கூட்டங்கள் | | 01 |
| இ.ம.ஆ பணியாட்டொகுதியினருக்கான விசேட விரிவுரைகள் | உளவள ஆலோசனை<br>மதம் மற்றும் மனித உரிமைகள்<br>முதியோர் உரிமைகள்<br>மனித உரிமைகளை வெல்வதற்கு தனக்கு சவால் விடல்<br>சிறுவர் உரிமை | 09 |
| | மொத்தம் | **17** |

26 மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டங்களில்இ.ம.ஆ பணியாட்டொகுதியினர் வளவாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

### 2.3.7 முடிவுரை

மனித உரிமை நெறிகள் மற்றும் நியமங்களை பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதை இப்பிரிவு தொடர்ந்தாற்றுகிறது. கடந்த சில ஆண்டுகளின்பொழுது இயலாமையுடைய ஆட்களின் உரிமைகள் தொடர்பாக சுதந்திரமாக நடமாடுதல் மற்றும் சனசமூக வாழ்வை அனுபவித்தல் என்பவற்றில் அது கவனம் செலுத்தியது. இவ் வருடம் பிரிவானது இலங்கையில் முதியோர் சனத்தொகை விரைவாக வளர்ந்து வருவதால் அது மற்றுமொரு அக்கறைக்குரிய விடயமாக இருப்பதால் முதியோர் உரிமைகள் மீதான கலந்துரையாடலை மேற்கொண்டது. கலந்துரையாடலின் முடிவின்பொழுதான சிபார்சுகளானவை வயதுமுதிர்தல் மீதான வரையறையற்ற செயற்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இப் பிரிவானது மனித உரிமைகள் கல்வியூட்டலுக்காக தனது பணியாட்டொகுதியினரை, வளவாளர்களாக அவர்களை வேண்டி நிற்கும் ஏனைய நிறுவனங்களுக்கு தேவையானபோது அனுப்பி வைக்கிறது.

## 2.4 நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு

### 2.4.1 நிர்வாகப் பகுதி

2012 ஆம் ஆண்டும் முன்னைய ஆண்டைப் போல, பெயர் குறிப்பிட்டுச் சொல்லும்பொழுது ஓய்வுபெற்ற நீதியரசர் பிரியந்த சீ. பெரேரா தவிசாளராகவும், திருமதி. ஜெசிமா இஸ்மாயில், திரு. வு.நு ஆனந்தராஜா, கலாநிதி பேணார்ட் டி சொய்சா, மற்றும் திரு. ஆனந்த மென்டிஸ் ஆணையாளர்களாகவும் அதே சபை உறுப்பினர்கள் இருக்கும் நிலையிலேயே ஆரம்பித்தது. எவ்வாறாயினும் பெப்ரவரி 01 ஆம் திகதி ஆணையாளர் திரு. ஆனந்த மென்டிஸ் ஓய்வுபெற, 2012 பெப்ருவரி 13 ஆம் திகதி கலாநிதி பிரதீபா மஹானாமஹேவ அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்டார். 2012 மே 02 ஆம் திகதி புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளின் பணிப்பாளராக பணியாற்றிவந்த திருமதி. சமந்தி ஜயமான பரணகம ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டார். இவ்வண்ணமாக ஒரு நீண்டகாலமாக இருந்த வெற்றிடம் நிரப்பப்பட்டது. எவ்வாறாயினும் புலனாய்வுகள் மற்றும் விசாரணைப் பணிப்பாளர் மற்றும் நிர்வாகம் மற்றும் நிதிப் பணிப்பாளர் பதவிநிலைகள் இன்னும் நிரப்பப்படவில்லை. ஆணைக்குழுவானது ஒவ்வொரு பிரிவுக்கும் ஒன்றென இரு உத்தியோகத்தர்களை நியமித்து அவர்களின் மேற்பார்வையின் கீழ் உரிய பிரிவுகளின் வேலைகள் மேற்கொள்ளப்படுகிறன.

ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தை அதன் புதிய வளாகமாகிய 165, கின்சி வீதி, கொழும்பு 08 க்கு மாற்றிய பின்னா் விசாரணைகள் மற்றும் புலனாய்வுகள் பிரிவுக்கு அதிக இடத்தை ஒதுக்குவதற்கும் பல்வேறு நோக்கங்களுக்காக தலைமைச் செயலகத்திற்கு வருவோருக்கும் வேறுபட்ட முறையில் இயலுமையுடைய ஆட்களின் கவலைகளை மனதில் கொண்டு சிறந்த வசதிகளை வழங்குவதற்கும் இயலுமாகியது.

மீள்பார்வைக்குட்படும் ஆண்டின்பொழுது பொதுநிர்வாக சுற்றறிக்கை இல 28/2010 இற்கமைய இ.ம.ஆ இன் பணியாளர்களின் சம்பளம் தொடர்பில் அமுல்படுத்தப்பட்டது. இ.ம.ஆ பணியாளர்களுக்கு ஒரு ஓய்வூதியத் திட்டத்தை அமைப்பதற்கான ஒரு கலந்துரையாடலும் இவ் ஆண்டிலேயே இடம்பெற்றது.

பணியாட்டொகுதியினருக்கு அவர்கள் ஆற்றவேண்டிய பலவகையான பணிகளை செயற்படுத்துவதற்கு அவர்களது தொழில்வன்மை அறிவையும் திறன்களையும் அதிகரிப்பதற்காக பயிற்சியை வழங்க வேண்டிய தேவை எப்பொழுதும் உள்ளது. ஆண்டின்பொழுது பணியாட்டொகுதியினருக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சி கிடைக்கச் செய்யப்பட்டது. ( பின்னிணைப்பு III மற்றும் ஐஏ யைப் பார்க்குக.)

சமூகமளித்தல் மற்றும் வேலைக்கு வருதல் புறப்படுதல் நேரங்களில் உரிய வகையில் ஒட்டியொழுகுவதற்கும் சிறந்த சமூகமளிப்பு முகாமைத்துவத்திற்குமாக ஒரு கணனிமயப்படுத்தப்பட்ட சமூகமளிப்பு மற்றும் கைவிரல் அடையாள முறைமையானது தலைமைச் செயலகத்தில் நிறுவப்பட்டது. இச் செயற்பாடானது திருப்திகரமான முறையில் செயற்பட்டதுடன் அலுவலகத்தின் நிர்வாகத்தையும் முன்னேற்றியது.

இப்பகுதியில் உள்ள மக்கள் யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் போன்ற பிராந்திய அலுவலகங்களுக்கோஅல்லது கொழும்பு தலைமைக்காரியாலயத்திற்கோ நீண்ட தூரம் பயணிப்பதில் எதிர்கொண்ட அசௌகரியங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இ.ம.ஆ பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்புக்கான வரையப்பட்ட ஒரு திட்டமானது, சம்பளங்கள மற்றும் பணியாட்டொகுதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு படிநிலைகள் எடுக்கப்படுகின்றன.

நிதி ஒழுங்குவிதிகளின் நிமித்தம் இ.ம.ஆ இன் சொத்துக்களை சரிபார்ப்பதற்காக ஒரு கருத்தாய்வுச்சபை நியமிக்கப்பட்டது.

### 2.4.2 நிதிப்பகுதி

**2012 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுக்கணக்கு**

| | தொகை (இ.ரூபா) |
|---|---|
| அரசாங்கத்தின் பங்களிப்பு | |
| மீண்டெழுவன | 137,500,000.00 |
| மூலதனம் | 1,940,000.00 |
| வெளிநாட்டு மானியம் (UNFPA) | 535,254.00 |
| ஏனைய பெறுகைகள் | 246,375.93 |
| **மொத்த வருமானம்** | **140,221,629.93** |
| தனிப்பட்ட சம்பளக் கொடுப்பனவுகள் | 80,805,000.00 |
| பிரயாணச் செலவினங்கள் | 996,078.02 |
| வழங்கல்கள் | 5,266,708.21 |
| பரிபாலனச் செலவினங்கள் | 2,358,517.40 |
| சேவைகள் | 48,120,072.30 |
| மாற்றுகைகள் | 200,000.00 |
| புனர்வாழ்வு மற்றும் மூலதனச் சொத்துக்களின் இறக்குமதி | 214,829.13 |
| மூலதனச் சொத்துக்களின் பெறுகைகள் | 1,234,249.32 |
| இயலுமையைக் கட்டியெழுப்பல் | 200,000.00 |
| ஏனைய மூலதனச் செலவினங்கள் (UNFPA கருத்திட்ட செயற்பாடுகள்) | 535,254.00 |
| **மொத்தச் செலவினங்கள்** | **139,930,708.38** |

# பிராந்திய அலுவலகங்கள்

ஆணைக்குழுவால் நிறுவப்பட்ட பத்து பிராந்திய அலுவலகங்கள் உள்ளன. இவைகள் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களால் இயக்கப்படுகின்றன. இவ் அலுவலகங்களிலுள்ள ஆதரவுப் பணியாட்டொகுதியினரில் விசாரணை அதிகாரிகள் மற்றும் ஏனைய பணியாட்டொகுதியினர் உள்ளடங்குகின்றனர். 2012 ஆம் ஆண்டின்பொழுது இரண்டு நடமாடும் அலுவலகங்கள் கிளிநொச்சி மற்றும் புத்தளத்தில் திறந்து வைக்கப்பட்டன. கிளிநொச்சியில் உள்ள நடமாடும் அலுவலகமானது யாழ்ப்பாண பிராந்திய ஒருங்கிணைப்பாளரால் கவனிக்கப்படுகின்றது. புத்தளத்தில் உள்ள நடமாடும் அலுவகமானது 2012 டிசெம்பரில் வடமேல் மாகாணத்திலுள்ள மக்களுக்கு பணியாற்றுவதற்கு, அங்கே மனித உரிமைகள் பிராந்திய அலுவலகங்கள் இல்லாமையினால் திறந்து வைக்கப்பட்டதுடன் தற்பொழுது தலைமைச் செயலகத்தின் ஒரு விசாரணை அதிகாரியால் கவனிக்கப்படுகிறது. ஒரு உப அலுவலகமானது சிறிது காலமாக நுவரெலியாவில் தொழிற்படுகிறது. அங்கே கண்டிப் பிராந்திய அலுவலகத்தில் இருந்து ஒரு அதிகாரி முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு புதன்கிழமையும் சமூகமளிக்கிறார். எதிர்காலத்தில் மூன்று அலுவலகங்களும் நிரந்தர அலுவலகங்களாக்கப்படும் என நம்பப்படுகிறது. 2012 ஆம் ஆண்டில் ஒவ்வொரு அலுவலகங்களாலும் ஆற்றப்பட்ட வேலையின் ஒரு சுருக்கம் கீழே தரப்படுகிறது.

### 3.1 அம்பாறை பிராந்திய அலுவலகம்

அம்பாறை அலுவலகமானது ஆணைக்குட்பட்டவற்றுள் 139 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. இதில் 07 சித்திரவதை தொடர்பாகவும், 03 தொந்தரவு தொடர்பானதாகவும், 05 ஏதேச்சாதிகாரமான கைது தொடர்பானதாகவும், 26 வேலைவாய்ப்பு தொடர்பானதாகவும், 32 கல்வி தொடர்பானதாகவும், 60 அரசாங்கத்தின் செயற்பாடின்மை தொடர்பானதாகவும் இருந்தது. ஏனையவைகள் ஏனைய அதிகாரிகளுக்கு எதிரானவையாக இருந்தது. அலுவலகமானது முந்திய வருடத்தில் தீர்க்கப்படாதவைகளுடன் சேர்த்து இவ்வாண்டின் பொழுது 161 முறைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ளது.

**முறைப்பாடுகளின் வகைப்பாடுகள் - அம்பாறை**

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 07 |
| | தொந்தரவு | 03 |
| | கைது/தடுத்துவைப்பு | 05 |
| வேலைவாய்ப்பு | | 26 |
| கல்வி | | 32 |
| செயற்பாடின்மை | | 60 |
| ஏனையவை | | 06 |

பொலிஸ்நிலையங்கள், சிறைக்கூடங்கள் என்பவற்றுக்கு 104 விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், மீள்பார்வை செய்யப்படும் ஆண்டின்பொழுது உத்தியோகத்தர்கள் 84 தடுத்து வைத்திருப்போரை பார்வையிட்டனர்.

அலுவலகமானது 28 சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள், சித்திரவதை, மனித வஞ்சக்கடத்தல், முதியோர் உரிமைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும 14 பயிற்சி பட்டறைகளையும் மாணவர்கள், ஆசிரியர்கள், பொலிஸ்அதிகாரிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களை இலக்குவைத்து நடாத்தியுள்ளது.

இவ்வாண்டின்பொழுது ஆலோசனைக்காக 906 ஆட்கள் சமூகமளித்திருந்தனர்.

### 3.2 அனுராதபுரம் பிராந்திய அலுவலகம்

இவ் ஆண்டின்பொழுது அனுராதபுர அலுவலகம் 748 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. ஆண்டின் ஆரம்பத்தில் 395 முறைப்பாடுகள் தீர்க்கப்படாதனவாக இருந்தன. 40 முறைப்பாடுகள் சித்திரவதை தொடர்பானதாகவும், 63 கைதுகள் மற்றும் தடுத்து வைப்புத் தொடர்பானதாகவும் 50 தொந்தரவுகள், 02 காணாமற்போன ஆட்கள், 01 தடுத்து வைத்திருக்கும் பொழுது மரணம், 165 அரசாங்கத்தின் செயற்பாடின்மை தொடர்பாகவும் ஏனையவைகள் அனைத்தும் அதிகாரிகளுக்கு எதிரானவையாகவும் இருந்தது. அலுவலகமானது இவ்வாண்டின்பொழுது 722 விடயங்களை பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்ததுடன், 20 விடயங்கள் சிபார்சுகளுக்காகவும் மற்றும் 115 விடயங்கள் மேலதிக விசாரணைகளுக்காகவும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. மிகுதியான 421 விடயங்கள் அடுத்த வருடத்திற்காக விடப்படுகின்றன.

**முறைப்பாடுகளின் வகைப்படுத்தல் - அனுராதபுரம்**

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 40 |
| | தொந்தரவு | 50 |
| | கைது/தடுத்துவைப்பு | 63 |
| | காணாமலாக்கல்/ காணாமல்போதல் | 02 |
| வேலைவாய்ப்பு | | 115 |
| செயற்பாடின்மை | | 165 |
| கல்வி | | 74 |
| சொத்து மற்றும் பயன்பாடு | | 198 |
| அரசநலனோம்பல் | | 08 |
| தடுத்து வைத்திருக்கும் பொழுது மரணம் | | 01 |
| ஏனையவை | | 03 |

அலுவலகமானது பொலிஸ்நிலையங்களுக்கான 144 விஜயங்களையும், புனர்வாழ்வு நிலையங்களுக்கான 02 விஜயங்களையும் மேற்கொண்டது. அலுவலகம், பொலிசார், இராணுவத்தினர், அரசாங்க உத்தியோகத்தினர், சிவில் சமூகத்தினரை இலக்கு வைத்து 19 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தன. இவைகளுக்கு 1580 ஆட்கள் சமூகமளித்திருந்தன. மனித உரிமைகள் தினமானது முதியோர் உரிமைகள், இயலாமையுடன் கூடிய ஆட்களின் உரிமைகள், தொடர்பாக விசேட நிகழ்ச்சித்திட்டங்களுடன் நடாத்தப்பட்டது. இவற்றில் அனுராதபுர மாவட்டத்தின் 64 சிவில் சமூக உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர்.

### 3.3 பதுளை பிராந்திய அலுவலகம்

பதுளை பிராந்திய அலுவலகமானது 326 முறைப்பாடுகளை இவ்வாண்டில் பெற்றுக்கொண்டது. இதில் 01 மாத்திரம் சித்திரவதை தொடர்பானதாகவும், 07 தாக்குதல், 28 தொந்தரவு, 11 கைது மற்றும் தடுத்துவைப்பு தொடர்பானதாக இருந்தது. காணாமற் போன ஆட்கள் பற்றி எந்த முறைப்பாடுகளும் இருக்கவில்லை. அரச செயற்பாடு தொடர்பான முறைப்பாடுகள் 50, சொத்து மற்றும் பயன்பாடு பற்றி 59, வேலைவாய்ப்பு முறைப்பாடுகள் 87, கல்வி தொடர்பான முறைப்பாடுகள் 18 இருந்தன. ஏனையவை அதிகாரிகளுக்கு எதிரானவையாக இருந்தன. 19 முறைப்பாடுகள் ஆணைக்குட்படாதவையாக இருந்தன. அலுவலகமானது 204 விடயங்களை பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. 07 விடயங்கள் தலைமைச் செயலகத்திற்கு சிபார்சுகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தன.

**முறைப்பாடுகளின் வகைப்படுத்தல் - பதுளை**

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 01 |
| | தொந்தரவுகள்தாக்குதல் | 35 |
| | கைது/தடுத்துவைப்பு | 11 |
| வேலைவாய்ப்பு | | 87 |
| செயற்பாடின்மை | | 50 |
| கல்வி | | 18 |
| சொத்து மற்றும் பயன்பாடு | | 59 |
| அரசநலனோம்பல் | | 08 |
| ஏனையவை | | 38 |

அலுவலகமானது பொலிஸ் நிலையங்களுக்கு 51 விஜயங்களை மேற்கொண்டது.

பொலிசாரை இலக்குவைத்து 20 மனித உரிமை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றன. இவைகள் பிரதானமாக முறையே மஹியங்கனை பொலிஸ்பயிற்சி பாடசாலையிலும் பொரலந்தவிலும் இடம்பெற்றன. அத்துடன் 03 சிவில் சமூக உறுப்பினர்களுக்காகவும் நடாத்தப்பட்டது. ஒரு நிகழ்ச்சித்திட்டமானது முதியோர் உரிமைகள் தொடர்பாக சனசமூகத் தலைவர்களுக்கு விழிப்புணர்வை பரப்புவதற்காக நடாத்தப்பட்டது. இவ்வாண்டின்பொழுது 03 சிவில் சமூகக் கூட்டங்களும், ஒரு மூன்று நாள் பாசறையும் அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

1100 ஆட்கள் 2012 ஆம் ஆண்டில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக அலுவலகத்திற்கு ஆலோசனைக்காக விஜயம் மேற்கொண்டு இருந்தனர்.

### 3.4 மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம்

மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் 389 முறைப்பாடுகளை மீள்பார்வைக்குட்படும் ஆண்டில் பெற்றுக்கொண்டது. 3 சித்திரவதை தொடர்பாகவும், 27 தொந்தரவு, 23 கைது, காணாமற்போகைகள் 10, வேலைவாய்ப்பு தொடர்பானவை 33, கல்வி தொடர்பானது 87, செயற்பாடின்மை தொடர்பாக 85, சொத்து மற்றும் பயன்பாடு தொடர்பாக 39, மற்றும் ஏனையவைகள் அதிகாரிகளுக்கு எதிரானவையாக இருந்தன. அலுவலகமானது 297 விடயங்களை இந்த ஆண்டிலே தீர்த்து வைத்ததுடன், 92 விடயங்களை ஆண்டின் இறுதியிலே மிகுதியாக விட்டிருந்தன.

**முறைப்பாடுகளின் வகைப்படுத்தல் - மட்டக்களப்பு**

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 03 |
| | தொந்தரவுகள் | 27 |
| | கைது/தடுத்துவைப்பு | 23 |
| | காணாமலாக்கல்/ காணாமல்போதல் | 10 |
| வேலைவாய்ப்பு | | 33 |
| செயற்பாடின்மை | | 85 |
| கல்வி | | 87 |
| சொத்து மற்றும் பயன்பாடு | | 39 |
| ஏனையவை | | 82 |

அலுவலகமானது பொலிஸ்நிலையங்களுக்கு 92 விஜயங்களையும், சிறைச்சாலைகளுக்கு 10 விஜயங்களையும், முதியோர் இல்லத்திற்கு ஒரு விஜயத்தையும் மேற்கொண்டது.

அலுவலகமானது 38 விழிப்புணர்வு / கல்வி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியிருந்தது. அவற்றுள் 15 கூட்டங்களும் அவற்றுள் 04 விசேட நிகழ்ச்சித்திட்டங்களும், 02 பெண்கள் தினக் கொண்டாட்டங்களும், 01 சிறுவர் தினக் கொண்டாட்டமும், ஒரு புத்தக வெளியீடும், மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சிவில்சமூக உறுப்பினர்கள் போன்ற பல்வேறுபட்ட குழுக்களை இலக்கு வைக்கும் 12 பயிற்சிப்பட்டறைகளும் இவற்றுள் உள்ளடங்கியிருந்தன. மொத்தமாக 400 க்கு மேற்பட்ட மக்கள் இந் நிகழ்வுகளிலே பங்குபற்றியிருந்தனர்.
ஏனைய செயற்பாடுகள்

i) 2006 – 2009 ஆண்டு காலப்பகுதியில் காணாமற்போன ஆட்களின் உறவினர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளாவன தலைமைச் செயலகத்திடமிருந்தான பணியாட்டொகுதியினரால் 2012 மே 8 -10 ஆம் திகதிகளில் விசாரிக்கப்பட்டன. மொத்தமாக 182 முறைப்பாடுகள் இம் மூன்று நாட்களிலும் விசாரிக்கப்பட்டன. துலைமைக்காரியாலயத்தால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

ii) காணாமற்போன ஆட்களின் பெற்றோர் பிரசைகள் குழு உறுப்பினர்களுக்கிடையிலான கவலையுறும் ஆட்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்கள்

iii) வலயக்கல்விப் பணிப்பாளர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள், அரசசார்பற்றதுறையினர் மற்றும் சிவில் சமூகத்தினரிடையே, வறுமையின் நிமித்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர் உழைப்பு அதிகரித்திருப்பதினால், அது தொடர்பான கலந்துரையாடல்கள்

iv) சிரேஷ்ட பிரசைகளின் உரிமைகள் மீதான சிவில் சமூக உறுப்பினர்களுக்கான பயிற்சிப்பட்டறை.

v) காத்தான்குடியில் இரண்டு முஸ்லிம் பெண்கள் தாக்குதல் மீதான விசாரணை – அத்தியாயம் 4 இல் அறிக்கை உள்ளது

### 3.5 யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம்

யாழ்ப்பாண பிராந்திய அலுவலகமானது 377 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. அதில் 07 சித்திரவதை தொடர்பானதாகவும், 77 தொந்தரவுகள், 55 கைது மற்றும் தடுத்துவைப்பு, 26 காணாமற்போகைகள், 30 கல்வி தொடர்பானவை, 62 வேலைவாய்ப்பு தொடர்பானவை, 59 அரசாங்கத்தின் செயற்பாடின்மை, 33 சொத்து தொடர்பாகவும் ஏனையவைகள் அதிகாரிகளுக்கு எதிரானவையாகவும் இருந்தன. அவ்வாண்டின்பொழுது அலுவலகமானது 139 விடயங்களை பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது.

2012 ஆம் ஆண்டில் வீடுகள் மற்றும் காணிகளில் பாதுகாப்பு படைகள் வதிதல் தொடர்பாக பல முறைப்பாடுகளை பிராந்திய அலுவலகம் விசாரித்தது. இவ் விசாரணைகளில் பிராந்திய அலுவலகமானது எடுத்த நடவடிக்கைகளால் 82 வீடுகளும் மற்றும் 01 காணியும் இவ்வாண்டின்பொழுது உண்மையான சொந்தக்காரர்களிடம் கையளிக்கப்படச் செய்தது. அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட 3 முறைப்பாடுகளின் கீழ் இச் சம்பவங்களுக்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

**முறைப்பாடுகளின் வகைப்படுத்தல் - யாழ்ப்பாணம்**

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 07 |
| | தொந்தரவுகள் | 77 |
| | கைது/தடுத்துவைப்பு | 55 |
| | காணாமலாக்கல்/ காணாமல்போதல் | 26 |
| வேலைவாய்ப்பு | | 62 |
| செயற்பாடின்மை | | 59 |
| கல்வி | | 30 |
| சொத்து மற்றும் பயன்பாடு | | 33 |
| அரச நலனோம்பல் | | 06 |
| ஏனையவை | | 22 |

அலுவலகமானது பொலிஸ்நிலையங்களுக்கு 182 விஜயங்களையும், சிறைச்சாலைகளுக்கு 11 விஜயங்களையும், சிறுவர் இல்லங்களுக்கு 05 விஜயங்களையும், புலனாய்வு நிலையத்திற்கு 01 விஜயத்தையும் மேற்கொண்டது.
அலுவலகமானது யுனிசெப் நிதியீட்டக் கருத்திட்டத்தின் கீழ் 17 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் சிறுவர் உரிமைகள் மீதான 10 கூட்டங்களையும் நடாத்தியது. மேலும் மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு பரிகாரங்களின் ஒரு பரந்த வீச்சை உட்படுத்தும் 09 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் அலுவலகத்தால் நடாத்தப்பட்டன.

சர்வதேச சிறுவர் தினம் பாடசாலைப் பிள்ளைகளிடையே ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதன் மூலம் கொண்டாடப்பட்டதுடன், சர்வதேச மனித உரிமைகள் தினமானது சிவில் சமூக உறுப்பினர்களிடையேயும் அரச உத்தியோகத்தர்களிடையேயும் மனித உரிமை நெறிகள் மற்றும் நியமங்கள் தொடர்பான ஒரு கலந்துரையாடலை நடத்துவதன் மூலம் கொண்டாடப்பட்டது.

சிவில் சமூகத்தினருடன் நான்கு கூட்டங்களும் பொலிஸ் உயர்பதவி உத்தியோகத்தர்களுடன் ஒரு கூட்டமும் மீள்பார்வைக்குட்படும் ஆண்டில் நடாத்தப்பட்டது.

### 3.6 கல்முனை பிராந்திய அலுவலகம்

கல்முனை அலுவலகம் 2012 ஆம் ஆண்டில் 206 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. சித்திரவதைக்கு எதிராக 4, தொந்தரவுகள் 20, கைது மற்றும் தடுத்துவைப்பு 03, காணாமலாக்கல் ஃகாணாமற்போதல் 06, அரச செயற்பாடின்மை 69, கல்வி தொடர்பானது 39, வேலைவாய்ப்பு 23 மற்றும் ஏனையவை அதிகாரிகளுக்கு எதிரானவையாக இருந்தன. அலுவலகமானது 232 முறைப்பாடுகளைப் பூர்த்திசெய்ததுடன் அவற்றுள் 116 முறைப்பாடுகள் 2012 ஆம் ஆண்டில் அறிக்கை செய்யப்பட்டனவாகவும், ஏனையவை முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடையனவாகவும் இருந்தன.

**முறைப்பாடுகளின் வகைப்பாடு – கல்முனை**

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 04 |
| | தொந்தரவுகள் | 20 |
| | கைது/தடுத்துவைப்பு | 03 |
| | காணாமற்போக்கல்/ காணாமல்போதல் | 06 |
| வேலைவாய்ப்பு | | 23 |
| செயற்பாடின்மை | | 69 |
| கல்வி | | 39 |
| சொத்து மற்றும் பயன்பாடு | | 05 |
| ஏனையவை | | 35 |

அலுவலகமானது அலுவலகப் பகுதியிலுள்ள எல்லாப் பொலிஸ் நிலையங்களையும் உட்படுத்தி பொலிஸ்நிலையங்களுக்கான 33 கண்காணிப்பு விஜயங்களை மேற்கொண்டிருந்தது. இவ் அலுவலகமானது மனித உரிமைகள் ஊக்குவிப்பு மற்றும் பாதுகாத்தல், சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் போன்ற பல விடயங்கள் தொடர்பாக 21 உரிமைகள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது. இலக்கு குழுக்களிலே 2600 பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மற்றும் பெண்கள், அரச உத்தியோகத்தர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் உள்ளடங்கிய மேலும் 1000 பேர் இலக்குக்குழுவிலே உட்பட்டிருந்தனர்.

நடைமுறையானதும் மனித உரிமை விடயங்களில் அவசரமானதுமான விடயங்களை கலந்தாலோசிப்பதற்கு கூட்டங்கள், கலந்துரையாடல்கள், ஆலோசிப்புக்கள் போன்றன இவ்வாண்டில் அலுவலகத்தால் நடாத்தப்பட்டுள்ளன. அலுவலகமானது அதிகரித்துச் செல்லும் தற்கொலை செய்தல் போக்கு, பாலியல் தொந்தரவுகள், சிறுவர் துஷ்பிரயோகம், மற்றும் அதிகரித்துச் செல்லும் மதுபான நுகர்வு என்பனவற்றை உரிய பங்காண்மையாளர்களுடன் கலந்துரையாடுவதற்கு 15 கூட்டங்களை நடாத்தியிருந்தது. புலம்பெயர் தொழிலாளர்கள், மனிதவஞ்சக்கடத்தல், முதியோர் உரிமைகள், முதியோருக்கு நல்ல ஆரோக்கிய சேவைகளை வழங்குவதற்காக இந்தப் பகுதிகளில் வைத்தியசாலைகளில் முதியோருக்கான வைத்திய நிபுணர்களின்மை தொடர்புடையவைகள் உட்பட்ட பல பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்ட 07 பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டன. பிராந்தியத்திலுள்ள மீனவர்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள், பாடசாலையில் ஒழுக்கம், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பாக சமயத் தலைவர்களின் வகிபங்கு என்பன மீதான 5 கலந்துரையாடல்களையும் அலுவலகம் நடாத்தியது.

மனித உரிமை தினங்களை நினைவுகூருவதற்கான வைபவங்களம் இடம்பெற்றன. 2012 ஜுன் 12 ஆம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தை சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல், சிறுவர் உழைப்பை நிறுத்துதல் என்ற தொனியிலான சுவரொட்டிகளுடன் ஒரு சுவரொட்டிப் பிரச்சாரத்துடன் கொண்டாடப்பட்டது. இச் சுவரொட்டிகளானவை பிரதேச செயலகங்கள், பொலிஸ்நிலையங்கள், வலயக் கல்வி அலுலகம் மற்றும் பாடசாலைகளுக்கு சுற்றுச் செய்யப்பட்டன.

சித்திரவதைத் தினத்தை குறிக்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டமானது 2012 ஜுன் 26 ஆம் திகதி சித்திரவதையால் பாதிக்கப்பட்ட 50 பங்குபற்றுனர்களுடன் இடம்பெற்றது.

சர்வதேச பெண்கள் தினத்தைக் குறிக்கும் நடமாடும் ஒரு கையெழுத்துப் பிரச்சாரமானது பெப்ருவரி 27, 28 மற்றும் 2012 மார்ச் 1ஆம், 2ஆம், மற்றும் 5ஆம் திகதிகளில் பல இடங்களிலும் இடம்பெற்று மார்ச் 08 ஆம் திகதி பெண்கள் தினமானது 55 பங்குபற்றுனர்களுடன் கிறிஸ்றலா இல்லத்தில் இடம்பெற்றது.

சமாதான தினமானது காரைதீவு சண்முகா வித்தியாலயத்தில் அமைதி, அகிம்சை, மனித உயிர்களின் மகத்துவத்தை / இணக்கத்தை ஊக்குவித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தி 100 தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்களின் பங்குபற்றுகையுடன் ஒரு நிகழ்ச்சித்திட்டத்துடன் கொண்டாடப்பட்டது. இது வேறு இரு நிறுவனங்களுடன் கூட்டுமுயற்சியாக இடம்பெற்றது

### 3.7 கண்டி பிராந்திய அலுவலகம்

கண்டி அலுவலகம் 584 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. இதில் 28 சித்திரவதை தொடர்பாகவும், 34 கைதுகள் தொடர்பாகவும், 34 கைது மற்றும் தடுத்துவைப்பு, 01 காணாமற் போதல், 75 அரசாங்கத்தின் செயற்பாடின்மை, 90 வேலைவாய்ப்பு, 35 கல்வி தொடர்பானதாகவும் ஏனையவை அதிகாரிகளுக்கு எதிரானவையாகவும் இருந்தன. அலுவலகமானது 471 விடயங்களைப் பூர்த்தி செய்ததுடன், 119 சம்பவங்களை தலைமை அலுவலகத்திற்கு சிபார்சுகளுக்காகவும் மேலதிக விசாரணைகளுக்காகவும் அனுப்பி வைத்தது. இச் சம்பவங்களிலே 2012 ஜனவரி 01 ஆம் திகதி பூர்த்தி செய்யப்படாமலிருந்த முன்னைய முறைப்பாடுகளும் உள்ளடங்கியிருந்தன.

**முறைப்பாடுகளின் வகைப்பாடு – கண்டி**

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 28 |
| | தொந்தரவுகள் | 34 |
| | கைது/தடுத்துவைப்பு | 34 |
| | காணாமற்போக்கல்/ காணாமல்போதல் | 01 |
| வேலைவாய்ப்பு | | 90 |
| பாரபட்சம் | | 279 |
| செயற்பாடின்மை | | 75 |
| கல்வி | | 35 |
| ஏனையவை | | 08 |

சமா433 பொலிஸ் விஜயங்களும், பொம்பரகந்த சிறைச்சாலைக்கான 04 விஜயங்களும், சிறுவர் இல்லத்திற்கான 02 விஜயங்களும் தடுத்து வைக்கப்பட்டிருப்போரினதும் அங்கே இருப்போரதும் நலனோம்பலைக்

கவனிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் உரிய இடங்களிலுள்ளோரதும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்களதும் நலனோம்பலைக் கண்காணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டன.

அலுவலகத்தின் ஆணையை மேற்கொள்ளுகையில் கல்வி / பயிற்சி / விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாணவர்களையும், பொலிசாரையும், இராணுவத்தினரையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும், சிவில் சமூகத்தினரையும் பொதுமக்களையும் இலக்கு வைக்கும் 55 விரிவுரைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இதன் மூன்று விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந் நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்று பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதும் மற்றையது மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதும் ஆகும். சிவில் சமூகக் கூட்டமொன்று 40 பங்குபற்றுனர்களுடன் விசேட நிகழ்வாக இடம்பெற்று இருந்தது.

மீள்பார்வை செய்யப்படும் ஆண்டிலே அலுவலகம் ஆனது 3039 பொதுமக்கள் கலந்துரையாடல்களை நடாத்தியது (நுவரெலிய நடமாடும் அலுவலத்தில் இடம்பெற்றவைகள் உட்பட)

### 3.8 மாத்தறை பிராந்திய அலுவலகம்

மாத்தறை பிராந்திய அலுவலகமானது மீள்பார்வை செய்யப்படும் ஆண்டில் 645 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. 59 முறைப்பாடுகள் சித்திரவதை தொடர்பாகவும், 37 தொந்தரவுகள், 64 கைது மற்றும் தடுத்துவைப்பு, 01 காணாமற்போதல், 75 அரசாங்கத்தின் செயற்பாடின்மை, 130 சொத்து மற்றும் பயன்பாடுகள், 128 கல்வி தொடர்புடையவை, 113 வேலைவாய்ப்பு தொடர்பானதாகவும் ஏனையவைகள் அதிகாரிகளுக்கு எதிரானவையாகவும் இருந்தன. ஆண்டின் ஆரம்பத்திலே 108 விடயங்கள் முந்திய ஆண்டில் இருந்து முன்கொண்டுவரப்பட்டன. 573 விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் வருட இறுதியில் 180 மிகுதியான விடப்பட்டிருந்தன.

**முறைப்பாடுகளின் வகைப்பாடு – மாத்தறை**

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 59 |
| | தொந்தரவுகள் | 37 |
| | கைது/தடுத்துவைப்பு | 64 |
| | காணாமற்போக்கல்/ காணாமல்போதல் | 01 |
| வேலைவாய்ப்பு | | 113 |
| செயற்பாடின்மை | | 75 |
| கல்வி | | 128 |
| சொத்து மற்றும் பயன்பாடு | | 103 |
| அரச நலனோம்பல் | | 09 |
| ஏனையவை | | 56 |

அலுலவகமானது 62 பொலிஸ்நிலையங்களுக்குமான 258 கண்காணிப்பு விஜயங்களையும், காலி மற்றும் மாத்தறை சிறைச்சாலைக்கான 08 விஜயங்களையும், பூசா தடுத்து வைக்கும் முகாமிற்கான 02 விஜயங்களையும் மேற்கொண்டது.

அலுவலகமானது இராணுவத்தினர், பொலிசார், மாணவர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் இளையோர்களுக்கான 34 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்/ விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது. அலுவலகத்தால் ஒரு

சிவில் சமூகக் கூட்டமும் ஒழுங்கு செய்யப்பட்டது. சிறுவர் தினம், மனித உரிமைகள் தினம் என்பன கொண்டாடப்பட்டன. எல்லா நிகழ்ச்சித்திட்டங்களிலும் நிகழ்வுகளிலும் 2000 க்கும் மேற்பட்ட மக்கள் பங்குபற்றியிருந்தனர்.

### 3.9 திருகோணமலை பிராந்திய அலுவலகம்

திருகோணமலை அலுவலகம் 2012 ஆம் ஆண்டின்பொழுது 167 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. இவற்றுள் 02 சித்திரவதை தொடர்பானதாகவும், 10 தொந்தரவு, 56 கைதுகள், 03 காணாமற்போதல், 02 கடத்தல், 18 வேலைவாய்ப்புக்கள், 24 அரசாங்க செயற்பாடின்மை தொடர்பானதாகவும் ஏனையவைகள் அதிகாரிகளுக்கு எதிரானவையாகவும் இருந்தன. 62 விடயங்கள் முன்னைய ஆண்டுகளில் இருந்து கொண்டுவரப்பட்டவையாக இருந்தன. அலுவலகமானது இவ் ஆண்டின்பொழுது 76 விடயங்களை பூர்த்தி செய்ததுடன் குறித்த ஆண்டுக்கு முன்செல்லப்படும் என மிகுதியானவைகளை விட்டு வைத்துள்ளது.

**முறைப்பாடுகளின் வகைப்பாடு – திருகோணமலை**

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 02 |
| | தொந்தரவுகள் | 10 |
| | கைது/தடுத்துவைப்பு | 56 |
| | காணாமற்போக்கல்/ காணாமல்போதல் | 03 |
| | கடத்தல் | 02 |
| வேலைவாய்ப்பு | | 18 |
| செயற்பாடின்மை | | 24 |
| கல்வி | | 04 |
| சொத்து மற்றும் பயன்பாடு | | 10 |
| ஏனையவை | | 38 |

அலுவலகமானது பொலிஸ்நிலையங்களுக்கான 62 விஜயங்களையும் தடுத்து வைப்பு சிறைச்சாலைக்கான 03 விஜயங்களையும் மேற்கொண்டிருந்தது.

விழிப்புணர்வு /கல்வி நிகழ்ச்சித்திட்டங்களானவை பின்வருமாறு நடாத்தப்பட்டன. இராணுவத்தினருக்கான 08 நிகழ்ச்சித்திட்டங்களும், பொலிசாருக்கான 10 நிகழ்ச்சித்திட்டங்களும், பாடசாலைப் பிள்ளைகளுக்காக 02, சனசமூகத் தலைவர்களுக்காக 02, சிவில் சமூகத்தினருக்கான 04 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 3.10 வவுனியா பிராந்திய அலுவலகம்

வவுனியா அலுவலகமானது மீளாய்விற்கு உட்படும் ஆண்டில் 367 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டன. 02 சித்திரவதைக்கு எதிரானவையாகவும், 30 தொந்தரவுகள், 57 கைது மற்றும் தடுத்து வைப்பு, 39 காணாமற்போதல், 16 அரசாங்க செயற்பாடின்மை, 44 சொத்து, 45 கல்வி, 28 வேலைவாய்ப்பு தொடர்பானவைகளாகவும் ஏனையவை அதிகாரிகளுக்கு எதிரானவையாகவும் இருந்தன. அலுவலகமானது இவ்வாண்டின்பொழுது 262 விடயங்களைப் பூர்த்தி செய்திருந்தது.

**முறைப்பாடுகளின் வகைப்பாடு – வவுனியா**

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 02 |
| | தொந்தரவுகள் | 30 |
| | கைது/தடுத்துவைப்பு | 57 |
| | காணாமற்போக்கல்/ காணாமல்போதல் | 39 |
| வேலைவாய்ப்பு | | 28 |
| செயற்பாடின்மை | | 16 |
| கல்வி | | 45 |
| சொத்து மற்றும் பயன்பாடு | | 44 |
| அரச நலனோம்பல் | | 12 |
| ஏனையவைகள் | | 94 |

அலுவலகமானது பொலிஸ்நிலையங்களுக்கான 29 விஜயங்களையும், புனர்வாழ்வு நிலையங்களுக்கான 02 விஜயங்களையும் இவ்வாண்டில் மேற்கொண்டிருந்தன.

விழிப்புணர்வு / கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் / பயிற்சிப்பட்டறைகள் / விரிவுரைகள் மற்றும் கூட்டங்கள் என்பன சிவில் சமூகத்தினர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் போன்றோரை இலக்கு வைத்து இவ்வாண்டின்பொழுது இவ்வாறான 14 நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

நலிவான கிராமங்களுக்கு 04 களவிஜயங்களை அலுவலர்கள் மேற்கொண்டதுடன், அக்கிராமங்களிலே விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியிருந்தன.

மனித உரிமைகள் தினமானது பிராந்திய அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது

## 3.11 நடமாடும் / உப அலுவலகங்கள்

### 3.11.1 நடமாடும் அலுவலகம் - கிளிநொச்சி

இவ் அலுவலகமானது 2012 ஒக்ரோபரில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் தற்பொழுது யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய ஒருங்கிணைப்பாளரால் கவனிக்கப்படுகிறது. இவ் அலுவலகமானது 2012 டிசெம்பர் 31ம் திகதி வரைக்கும் 35 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டிருப்பதுடன் அவற்றுள் 09 முறைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இவ் அலுவலகமானது குறுகிய காலப்பகுதிக்குள்ளே 196 ஆலோசனைகளை வழங்கக்கூடியதாக இருந்துள்ளது.

முறைப்பாடுகளின் வகைப்பாடு – கிளிநொச்சி

| முறைப்பாடுகளின் வகைப்பாடு | | சம்பவங்களின் எண். |
|---|---|---|
| **தனிப்பட்ட சுதந்திரம்** | சித்திரவதை | 03 |
| | தொந்தரவுகள் | 01 |
| | கைது/தடுத்துவைப்பு | 04 |
| | காணாமற்போக்கல்/ காணாமல்போதல் | 04 |
| வேலைவாய்ப்பு | | 05 |
| **செயற்பாடின்மை** | | 05 |
| **கல்வி** | | 02 |
| சொத்து மற்றும் பயன்பாடு | | 09 |
| அரச நலனோம்பல் | | 02 |

### 3.11.2 நடமாடும் அலுவலகம் - புத்தளம்

இவ் அலுவலகமானது 2012 டிசெம்பர் 06 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன் தலைமைச் செயலகத்தின் புலனாய்வு உத்தியோகத்தரால் கவனிக்கப்படுகிறது. குறித்த மாதத்தின்பொழுது 05 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

### 3.11.3 உப அலுவலகம் - நுவரெலியா

கண்டி பிராந்திய அலுவலகமானது ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் நுவரெலியவில் நடமாடும் அலுவலகம் ஒன்றை நடத்துகிறது. அங்கே பொதுமக்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இவ் ஆண்டின்பொழுது 09 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் முறைப்பாடுகளுக்கான விசாரணைகளானவை கண்டி பிராந்திய அலுவலகத்திலேயே நடத்தப்படுகின்றனது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய அலுவலகங்கள்

முறைப்பாட்டு வகைப்பாடு 2012

| முறைப்பாடுகளின் வகை | அம்பாறை | அனுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | கல்முனை | கண்டி | மாத்தறை | திருகோணமலை | வவுனியா | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சித்திரவதை | 07 | 40 | 01 | 04 | 07 | 04 | 28 | 59 | 02 | 03 | **154** |
| தொந்தரவு | 03 | 50 | 07 | 20 | 77 | 20 | 34 | 37 | 10 | 30 | **288** |
| கைது மற்றும் தடுத்துவைப்பு | 05 | 63 | 39 | 03 | 55 | 03 | 34 | 64 | 56 | 57 | **379** |
| காணாமற்போதல்/ கடத்தல்/ காணாமற்போகச் செய்தல் | | 02 | - | 06 | 26 | 06 | 01 | 01 | 05 | 39 | **86** |
| செயற்பாடின்மை | 60 | 165 | 50 | 23 | 59 | 69 | 75 | 75 | 24 | 16 | **616** |
| வேலைவாய்ப்பு | 26 | 115 | 87 | 69 | 62 | 23 | 90 | 113 | 18 | 28 | **631** |
| பாரபட்சம்/ ஏதேச்சாதிகாரமான செயற்பாடுகள் | - | - | - | - | - | - | 279 | - | 04 | - | **283** |
| கல்வி | 32 | 74 | 18 | 39 | 30 | 39 | 35 | 128 | 04 | 45 | **444** |
| சுகாதாரம் | - | - | 01 | 06 | 02 | 06 | - | 01 | - | - | **16** |
| சொத்தும் பயன்பாடும் | - | 198 | 59 | 05 | 33 | 05 | - | 103 | 02 | 44 | **449** |
| அரச நலனோம்பல் | - | 08 | 08 | 08 | 06 | 08 | - | 09 | 08 | 12 | **67** |
| சூழல் | - | 02 | 06 | 03 | 01 | 03 | 02 | 03 | - | 01 | **21** |
| சிறுவர் | - | - | - | 05 | - | 05 | 03 | 01 | - | - | **14** |
| பெண்கள் | - | - | - | - | - | - | 02 | - | - | - | **02** |
| ஏனையவை | 06 | 01 | 31 | 13 | 19 | 13 | 03 | 49 | 34 | 93 | **262** |
| இ.ம.ஆ இன் ஆணைக்குட்படாதவை | - | 29 | 19 | 02 | - | 02 | - | - | - | - | **52** |
| சட்டத்திற்கு புறம்பான கொலைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | **-** |
| தடுத்து வைக்கும்பொழுது மரணம் | - | 01 | - | - | - | - | - | - | - | - | **01** |
| இனந்தெரியாதோரால் அச்சுறுத்தப்படுதல் | - | - | - | - | - | - | - | - | - | - | **-** |
| மொத்தம் | **139** | **748** | **326** | **206** | **377** | **206** | **584** | **645** | **167** | **367** | **3765** |

## அத்தியாயம் நான்கு

# விசேட அறிக்கைகள்

### 4.1 விசாரணைகள் மற்றும் புலனாய்வுப்பிரிவு

#### 4.1.1 சுற்றாடல் நேர்வு அறிக்கை

**Ms சந்திர அமரசிங்க**

**எதிர்**

தவிசாளர் BOI/ தவிசாளர் CEA / தவிசாளர் இலங்கை L R&D Corp /தவிசாளர் UDA

நேர்வு இல: HRC/2073/09, HRC /1166/ 09,HRC/4945/09,HRC/5405/09

பின்வரும் அரச நிறுவனங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

1. முதலீட்டுச் சபை (BOI)
2. மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA)
3. இலங்கை நிலமீட்பு மற்றும் விருத்திக் கூட்டுத்தாபனம் (SLLRDC)
4. ஜா எல பிரதேசசபை

இலங்கை முதலீட்டுச்சபையானது Rhino Roofing Products Ltd மற்றும் Melwire Roofing Ltd இல 111 மைத்திரி மாவத்தை ஏக்கலை மற்றும் கோயில் வீதி ஏக்கலையில் முறையே அமைந்துள்ளவற்றுடன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையொன்றை (இவ் ஆவணத்தில் EIAR எனக் குறிப்பிடப்படுவது) பெற்றுக்கொள்ளாமல் ஒரு ஒப்பந்தத்தில் நுழைந்துள்ளது என முறைப்பாட்டாளர் குறிப்பிட்டார்.

மேலும் சுாைெ சுழழகைபெீசழனரஉவள டுவன ஆனது பின்வரும் மூன்று இடங்களில் தொழிற்சாலைகளை அமைத்துள்ளதுளூ

1. இல 111, மைத்திரி மாவத்தை, ஏக்கலை
2. இல 144/11 மினிவாங்ஹொட வீதி, ஏக்கல
3. இல 30, மினிவாங்ஹொட வீதி, ஏக்கல

றைனோ ஒரு தடைசெய்யப்பட்ட கருத்திட்டம் இல்லை என்பதினாலும், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை BOI செய்த பிற்பாடு சொல்லப்பட்ட தாக்கத்தை குறைப்பதற்கான படிநிலைகளை எடுத்த பிற்பாடு CEA. யின் இணக்கத்துடன் ஒரு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்க அவசியமில்லை என்ற நிலைப்பாட்டுடன் BOI அங்கீகாரம் அளித்தது. Rhino RoofingProducts Ltd, இல.111, மைத்திரி மாவத்தை, ஏக்கலை தொடர்பான நிலைமைகளுக்கு உட்பட்டு CEA ஆனது BOI இற்கு அதன் இணக்கத்தை வழங்கியுள்ளது.

CEA யின் நிலைப்பாடு என்னவெனில் Rhino RoofingProducts Ltd ஆனது மைத்திரி மாவத்தை, ஏக்கலையில் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முன்பாக மினுவான்கொட வீதி ஏக்கலையில் ஒரு தொழிற்சாலையை நடத்தியிருக்கிறது என்பதாகும். முன்னைய தொழிற்சாலை தொடர்பாக சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுள்ளது. ஆனால் அது தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலை தொடர்பாக உற்பத்திக்கு ஒரு மாதத்திற்கு முன்பதாகவே சூழல் பாதுகாப்பு உரிமத்தை CEA யிடமிருந்து பெற வேண்டியுள்ளது. Melawire Roofing Ltd. தொடர்பாக எதையும் குறிப்பிட CEA தவறிவிட்டது.

111, மைத்திரி மாவத்தையிலுள்ள தொழிற்சாலை ஆனது உயர்நிலத்தில் இருப்பதால் SLLRDC யிடமிருந்து எந்த உரிமமும் தேவையற்றது என SLLRDC குறிப்பிட்டது. தாழ்ந்த சதுப்பு நிலப்பகுதியில் அமைந்துள்ளதாக முறைப்பாட்டாளரால் குற்றம் சாட்டப்பட்ட Melwire Roofing Ltd. தொடர்பான எந்தக் குறிப்பும் செய்யப்படவில்லை.

Rhino Roofing Products ஆனது ஒரு ஓய்வறையையும் களஞ்சியக் கட்டிடத்தையும் கட்டுவதற்கான விண்ணப்பத்தையே செய்தது எனவும், அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்பே தொழிற்சாலைக் கட்டிடத்தைக் கட்ட ஆரம்பித்தது என்பதுமே ஜா எல பிரதேசசபையின் நிலைப்பாடாக இருந்தது. பொதுமக்களின் எதிர்ப்பு விளைவாக அந்த அங்கீகாரமானது இரத்துச் செய்யப்பட்டதுடன், கம்பனியானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்தது. அதனைத் தொடர்ந்து ஒரு தீர்வு எட்டப்பட்டதுடன் கம்பனியானது கட்டிட விண்ணப்பங்களைச் செய்து அவைகள் பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. சட்டரீதியான கட்டணங்களாக பிரதேசசபைக்கு ரூபா 945000/- செலுத்தியிருந்தது.

### A) விசாரணை அதிகாரியின் அவதானிப்புக்கள்

1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் 1988 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறாக ஏற்பாடுகளின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் இரு கருத்திட்டங்களும் தடைசெய்யப்பட்ட கருத்திட்டங்களாக பிரசுரிக்கப்பட்டிருந்தன.

இதன் வண்ணமாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையானது CEA யின் அனுமதியுடன் எடுத்துக்காட்டப்பட வேண்டியிருந்தது. ஆகவே 1வது மற்றும் 2வது பதிலளிப்பவர்கள் தேசிய சுற்றாடல் சட்டத்தின் கட்டாய ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படவில்லை. அதில் அவர்கள் அதைப் பாதுகாப்பதற்காக ஒரு EIAR அறிக்கை காட்டப்பட வேண்டிய சட்டத்தால் சூழப்பட்டு ஆதரவளிக்கப்பட்ட வர்த்தமானி ஒழுங்குவிதிகளின் ஆதரவிற்குள் கருத்திட்டங்களாக அஸ்பெஸ்ரஸ் மற்றும் இரும்பு மற்றும் உருக்கு உற்பத்தியை கணிப்பிடுவதற்கு அதில் அவர்கள் தவறியுள்ளனர். Melawire Rolling Ltd உருக்கு உற்பத்திகளை கோயில் வீதி ஏக்கலையில், BOI யாலோ CEA யாலோ அங்கீகாரமளிக்கப்படாத நிலையில், சூழலை மாசடைய அனுமதித்துக்கொண்டும், கைத்தொழில் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தாமலோ அல்லது உரிய முறையில் பதப்படுத்தாமல் விடுவித்துக்கொண்டு, உருக்கு உற்பத்திகளை உற்பத்தி செய்ய தொடக்குவதற்கு என்ன சூழ்நிலைகளில் அனுமதியளிக்கப்பட்டது என்பதை 1 ஆம் 2 ஆம் பதிலளிப்பவர்கள் விளக்கவில்லை.

30,000 சனத்தொகையினர் வாழும் ஒரு பிரதேசத்தில் Rhino Roofing Ltd இனர் தமது கைத்தொழிற்சாலையை நிறுவுவதில் மத்திய சுற்றாடல் சட்டத்தின் கட்டாய ஏற்பாடுகளை பின்பற்றுவதற்கு 1ஆம் 2ஆம் பதிலளிப்பவர்கள் மேலும் தவறியுள்ளனர். இதன் மூலம் இவர்கள் அப்பகுதியில் வாழும் மக்கள் நல்ல காற்றையும், குடிநீரையும் பெறுவதற்கான உரிமையை தடுத்துள்ளனர். ஏனெனில் இந்தப்பகுதியானது அஸ்பஸ்ரஸ் மற்றும் உருக்கு தூசிகளினால் மாசடைந்துள்ளதுடன், கிணற்றில் உள்ள நீரும் மற்றும் அஸ்பஸ்ரஸ் மற்றும் உருக்கு உற்பத்திகளின் கழிவுகளிலிருந்தான கைத்தொழில் கழிவு சேறுகளால், அவைகள் பதப்படுத்தப்படாமல் சூழலுக்கு விடுவிக்கப்பட்டமையால் மாசடையச் செய்துள்ளன.

3வது பதிலளிப்பவர் நீர்வழி ஒதுக்குப்பட்ட நிலத்தில் அமைந்துள்ள காணி மீது தாழ்நிலை சதுப்புநிலத்தை நிரப்பி Melwire Rolling Ltd அத்துமீறுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. தொழிற்சாலையானது கொழும்பு மாவட்டத்தில் அடையாள இலக்கம் 18 17.04.2008 A2 என அடையாளமிடப்பட்ட vide வர்த்தமானி இல 1545 விபரிக்கப்பட்ட) ஒரு தாழ்ந்த ஈரவலயத்தில் தொழிற்சாலை அமைந்துள்ளது. 3வது பதிலளிப்பவரும் வளி மாசடைதலுக்கும் அப்பகுதியிலுள்ள நீர் மாசடைதலுக்கும் பொறுப்பாக உள்ளார்.

ஓய்வறையையும், களஞ்சியக் கட்டிடமும் கட்டுவதான உரிமத்தின் கீழ் ஒரு தொழிற்சாலை Rhino Roofing roducts ஆல் கட்டப்பட்டதால், பொதுமக்கள் எதிர்ப்பு ஏற்பட்டபொழுது 4 ஆம் பதிலளிப்பவர் கட்டிட அங்கீகாரத்தை இரத்துச் செய்துள்ளார். அப்பொழுது கம்பனியானது மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கு ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்து ஒரு தடுப்பு ஆணையைப் பெற்றுக்கொண்டதுடன் 4வது பதிலளிப்பவர் தடைச்சட்டத்தின் பலத்தில் கம்பனியானது கட்டிட வேலையைக் கொண்டு செல்வதை ஒன்றும் செய்ய முடியாதவராக பார்த்துக்கொண்டிருந்தார். 4வது பதிலளிப்பவர் ஏற்கனவே கட்டிடம் கட்டப்பட்ட கட்டிட

அமைப்புக்களை இடிப்பதற்கான கட்டளையை நாடி ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதனைச் செய்ய தவறிவிட்டார்.

மனுதாரர் பல கடிதங்களை எழுதியிருப்பதுடன் நான்கு அரச நிறுவனங்களுக்கும் பல பிரதிநிதித்துவங்களை அனுப்பியும் உள்ளார். அவர் சொல்வதின் பிரகாரம் எந்த நிறுவனமும் அவர்களுக்கு பதிலளிக்கவும் இல்லை பதிற் செயற்பாடு காட்டவும் இல்லை. Environmental Foundation டுவன எதிர் ருனுயு (Galle Face Green வழக்கு) SCFR இல 47/2004 இன் உயர்நீதிமன்ற வழக்கின் பிரகாரம் தகவலுக்கான உரிமையானது அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமையாக இல்லாதபோதும் பேச்சுச் சுதந்திரம் வெளிப்படுத்தல் சுதந்திரத்திற்கான உரிமையானது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பான உரிமைகளை வினைத்திறனுடன் செயற்படுவதற்கு ஒருவரை இயலச் செய்வதானது வெளிப்படுத்துகை சுதந்திரம் தகவலுக்கான சுதந்திரத்தையும் உள்ளடக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது.

1980ஆம் ஆண்டு தேசிய சுற்றாடல் 47 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளைப் நான்கு அரச நிறுவனங்கள் பின்பற்றத் தவறியுள்ளன என்பதுடன், அதில் உள்ள வர்த்தமானி ஒழுங்குவிதிகளையும் 1993 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டங்களையும் பிரதேசசபைகளுடன் தொடர்புடைய அபிவிருத்தி கருத்திட்டங்களை அங்கீகாரத்துடன் விசேட தொடர்புடைய வேறுபட்ட அதையொத்த வர்த்தமானிகளையும் பின்பற்ற அவை தவறிவிட்டன.

## B) சிபார்சுகள்

1ஆம், 2ஆம், 3ஆம் பதிலளிப்பவர்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 12(1) இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாட்டாளரின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர். இதில் அவர்கள் உறுப்புரை 1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டங்களினால் சமனான பாதுகாப்பில் இருந்து விலக்கப்பட்டுள்ளார். அத்துடன் Rhino Roofing Ltd மற்றும் Melwire Rolling Ltd போன்ற பொது முக்கியத்துவம் வாய்ந்த தொடர்புடைய விடயங்களில் தனது உரிமைகளை வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்கு தகவல் சுதந்திரத்திலிருந்தும் அவர் விலக்கப்பட்டுள்ளார். ஆகவே முறைப்பாட்டாளருக்கு அரசியலமைப்பின் உறுப்புரைகள் 12(1) 14(1) ஆல் உத்தரவாதப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் 1- 4 ஆம் பதிலளிப்பவர்களால் மீறப்பட்டுள்ளதாக பிரகடனம் செய்கிறது.

பின்வரும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களானவை மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஒரு உரிய மதிப்பீட்டை நடாத்தும் வரை ஒத்திவைக்கப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்படுகிறது

1) Rhino Roofing Products Ltd
2) Sri Lanka Asbestos Ltd
3) Melwire Rolling Ltd

ஏக்கலை கோயில் வீதியிலுள்ள Melwire Rolling Ltd இன் தொழிற்சாலையானது தாழ்ந்த சதுப்புநிலமாக பிரகடனம் செய்யப்பட்ட ஜா எல நீர்வழி ஒதுக்கப்பட்ட இடத்திற்குள் அமைந்துள்ளது என SLLRDC விசாரணை செய்வதற்கும், அவ்வாறாயின் அதை விருத்தி செய்வதை தடைசெய்வதற்கும் சிபார்சு செய்யப்படுகிறது. ஆகவே Melwire Rolling Ltd இற்கு வழங்கப்பட்ட அங்கீகாரமானது SLLRDC உரிய மதிப்பீட்டு அறிக்கையை வழங்கும் வரைக்கும் இடைநிறுத்தப்பட வேண்டும்.

## C) பின்வரும் முக்கியத்துவமிக்க விடயங்களை இ.ம.ஆ அவதானிக்கிறது

1. 30 மினிவாங்ஹொட வீதி, ஜா எலவிலுள்ள இலங்கை அஸ்பெஸ்ரஸ் ஆனது சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (நீடு) இன்றி செயற்படுகிறது. இந்த வகையில் உரிமம் புதுப்பிக்கப்படவில்லை

2. இல 144/11 மினிவாங்ஹொட வீதி, ஜா எலயிலுள்ள சுளைெ சுழழகைபெ சழனரஉவள தொழிற்சாலையானது சினிக் அலுமினியத் தகடுகளை உற்பத்தி செய்கிறது. இது சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இன்றி செயற்படுகிறது.

3. கோயில் வீதி, ஏக்கலையில் ஆநடறசைந சுழடடலைப டுவன ஆனது ஒரு இரும்பு மற்றும் இரும்புத் தொழிற்சாலையை பதிலளிப்பவர்கள் எனப் பெயரிடப்பட்ட எந்த அரச நிறுவனத்திடமிருந்தும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் செயற்படுகிறது.

ஆகவே உரிய உரிமங்கள் அங்கீகாரங்கள் பெறும் வரைக்கும் பின்வரும் நிறுவனங்களின் உற்பத்திச் செயற்பாடுகளை ஒத்திவைக்குமாறு சிபார்சு செய்யப்படுகிறது

1) Rhino Roofing Ltd
2) Sri Lanka Asbestos Ltd
3) Melwire Rolling Ltd

மேலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவானது பதிலளிப்பவர்களை 2012.01.31 க்கு முன்பதாக சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்த படிநிலைகள் குறித்து ஆணைக்குழுவுக்கு அறிக்கை அனுப்பிவைக்குமாறு பணிக்கிறது.

### 4.1.2. காத்தான்குடி சம்பவம் தொடர்பான விசேட இடையீடுகள்

காத்தான்குடியைச் சேர்ந்த 17 வயது மற்றும் 18 வயதைச் சேர்ந்த இரு பெண்பிள்ளைகள் காத்தான்குடியில் கிடைக்கப் பெறாத ஒரு ஆசிரியரை ரியூசன் வகுப்பிற்கு தேடிக் கண்டுபிடிக்கும் முகமாக மட்டக்களப்பு சென்றிருந்தனர். அவ் ஆசிரியர் அங்கு இல்லாமையினால் அவர்கள் ஒரு சைபர் கபே இற்கு சென்றிருந்தனர். சைபர் கபே யிலிருந்து பெண்கள் திரும்பிக்கொண்டிருப்பதைக் கண்ட ஒருவர் காத்தான்குடியிலுள்ள ஒரு நண்பருக்கு தொலைபேசியில் அவர்கள் ஒரு சைபர் கபேயில் நீலப்படங்களை பார்த்துக் கொண்டு வருவதாக தெரிவித்து இருந்தார். அவர்கள் காத்தான்குடிக்கு பஸ்சில் வந்ததும் பல இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் அவர்களை துரத்த தொடங்கியதுடன் இழிவான வார்த்தைக் குறிப்புக்களை வீசியதுடன் அவர்களை ஒரு முச்சக்கரவண்டியில் ஒரு வீட்டிற்கு கடத்திச் சென்றனர். இக்கட்டத்தில் இரு பெண்கள் அவர்களது உடைகளை அகற்றி பரிசோதித்ததுடன், பின்பு அவர்கள் சித்திரவதைக்கும் மனிதநேயத்திற்கு ஒவ்வாத நடத்தைக்கும் உட்படுத்தப்பட்டனர். அதன் பின்பு அந்த இளைஞர்கள் இரு பெண் பிள்ளைகளையும் காத்தான்குடி அனைத்து முஸ்லிம்கள் நிறுவனங்களுக்கும், பள்ளிவாசல்கள் சம்மேளனத்திற்கு அங்குள்ள ஆட்களிடம் கையளித்தனர். (இந் நிறுவனம் இதற்குப் பின்பு அறிக்கையில் சம்மேளனம் எனக் குறிப்பிடப்படும்) இவ்விரு பெண் பிள்ளைகளும் தாக்கப்பட்டு தரக்குறைவான மொழியில் ஏசப்பட்டதுடன் நான்கு மணித்தியாலங்கள் வைத்திருக்கப்பட்டனர். இக்கண நேரத்தின்பொழுது பெருந்திரளான மக்கள் சம்மேளனத்தை சுற்றிக் கூடியதுடன் 1000 ஆட்களுக்கு மேல் கூடிய இடத்திலிருந்து பொலிசார் பாதுகாப்பிற்காக கண்ணீர்ப்புகை பிரயோகத்தையும் மேற்கொண்டிருந்தனர். காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் இரு பெண் பிள்ளைகளிடமிருந்தும் வாக்குமூலங்களை பதிவு செய்த பின்னா அப் பிள்ளைகளை மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்த்து பாதுகாப்பு வழங்கினர். இப்பிள்ளைகள் மூன்று நாட்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன் அதற்குப் பின்னர் சிறுவர் இல்லத்தில் 7 நாட்கள் வைத்திருக்கப்பட்டு பின்பு அவர்கள் நீதிமன்றம் ஊடாக பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நீதிமன்றத்திற்கு செய்யப்பட்ட முறைப்பாட்டில் இப் பெண்பிள்ளைகள் பெரும் உடல் உள துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாகவும் அதன் நிமித்தம் அவர்கள் தமது நாளாந்த செயற்பாட்டை செய்ய முடியாதிருப்பதாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இச் சம்பவம் தொடர்பாக இ.ம.ஆ பிராந்திய அலுவலகத்திற்கு ஒரு முறைப்பாடு கிடைக்கப் பெற்றதுடன் அது தேவையான செயற்பாட்டிற்காக தலைமைச் செயலகத்திற்கும் அறிவிக்கப்பட்டது. காத்தான்குடி பொலிசார் இவ்விடயத்தில் சட்டநவடிக்கை எடுத்தபொழுதும் இன்னும் பல சந்தேக நபர்கள் நீதிமன்றத்திற்கு முன் கொண்டுவரப்பட வேண்டுமென அம் முறைப்பாட்டிலே குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இம் மனுவிலே காத்தான்குடி பொலிசாரும், காத்தான்குடி சம்மேளனத்து உத்தியோகத்தர்களும் பதிலளிப்பவர்களாக செய்யப்பட்டிருந்தனர்.

இ.ம.ஆ பொலிசாரை அழைத்து முன்னா முன்பாக கைது செய்யப்படாத சந்தேக நபர்களை நீதிமன்றத்திற்கு முன் நிறுத்துமாறு கேட்டுக்கொண்டது. அதற்குப் பின்பு பொலிசார் ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்து நீதிமன்றம் முன் நிறுத்தியதாக அறிவித்தனர்.

சம்மேளன உறுப்பினர்களின் செயற்பாடுகளானது சிறுவர்களின் உரிமைகள் மீதான சமவாயம் மற்றும் பெண்களுக்கு எதிரான எல்லா வடிவங்களிலுமான பாரபட்சங்களை இல்லாதொழிப்பது மீதான சமவாயம் போன்ற சமவாயங்களின் வேறுபட்ட உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை மீறுகின்றனர். ஒரு பெண்பிள்ளை 17 வயதுடைய பிள்ளையாக இருப்பதாலும், எவ்வாறாயினும் இச் சம்மேளன உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளாவனவை நிர்வாக அல்லது நிறைவேற்று செயற்பாடு என்ற வரைவிலக்கணத்திற்குள் வராமையினால் இ.ம.ஆ இனால் இவர்களின் செயற்பாடு குறித்து சட்டத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. இவ்வண்ணமான சூழமைவுகளில் இ.ம.ஆ ஆனது இச் சம்பவத்தின் நிமித்தமாக இப்பெண்களினதும் சிறுவர்களினதும் வலுமோசமாக மீறப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சில நடவடிக்கைகளை எடுப்பது இ.ம.ஆ க்கு அவசியமாக இருந்தது. ஆகவே சட்ட செயலாளருக்கும் சம்மேளன உத்தியோகத்தர்களுக்கும் இடையே ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், அதிலே பெண்பிள்ளைகள் தொடர்பாகவும் எதிர்மறையான சமூகத் தாக்கங்கள் எதுவும் இருக்கக்கூடாது எனவும், அத்துடன் அவர்கள் தமது நாளாந்த செயற்பாடுகளைச் செய்ய உகந்த சூழல் உருவாக்கப்பட வேண்டுமெனவும் ஆணைக்குழு சம்மேளன உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தது. கலந்துரையாடலில் வெளிப்படுத்தப்பட்டவாறாக அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சட்டத்திற்கு மரியாதை கொடுக்காது நடந்துள்ளதுடன், சட்டத்தைப் பேணுவது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்ட வேண்டிய தேவையிருப்பதாக சம்மேளனத்திற்கு ஆணைக்குழு அறியச் செய்தது. இளைஞர்களுக்கு அறிவூட்டுவதற்கு பயிற்சிப்பட்டறைகளை நடத்த சம்மேளனம் பொறுப்பெடுத்தது.

இரண்டாவது கூட்டமானது இ.ம.ஆ மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தில் ஒரு ஆணையாளர், சம்மேளன உத்தியோகத்தர்கள் மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ஜெயமத்துலமா பிரதிநிதிகள், மனுதாரர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் குறிப்பாக பெண் பிள்ளைகளும் சமூகமளித்திருந்தனர். இக் கலந்துரையாடலின்பொழுது அப்பாவி இரு பிள்ளைகள் குறித்து காத்தான்குடி எல்லாப் பள்ளிவாசல்களிலும் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பதற்கு சம்மேளனம் பொறுப்பெடுத்தது. பெண்பிள்ளைகளும் சிறுவர்களும் நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் பாதுகாப்புடனும் இருப்பதற்குரிய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு இணங்கப்பட்டது.

05.02.2012. அன்று காத்தான்குடியிலுள்ள எல்லாப் பள்ளிவாசல்களிலும் இவ்விரு அப்பாவிப் பெண்கள் குறித்து அறிவித்தல் அறிவிக்கப்பட்டதாக 06.02.2012 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் இ.ம.ஆ க்கு அறிவிக்கப்பட்டது.

### 4.2 கண்காணித்தல் மற்றும் மீளாய்வுப்பிரிவு

### சிறைச்சாலைவிடயங்கள் தொடர்பாக அரச அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடல்கள் மீதான அறிக்கை

**i) ஆள் நெருக்கம்**

- B அறிக்கையினை கவனமான பரீசிலித்த பின்னர் தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே சந்தேக நபர்களை நீதவான்கள் தடுத்து வைப்பதன்மூலம் மற்றும் கொண்டுவரப்பட்ட சந்தேக நபர்களின் பரிசோதிப்பிற்கு பின்னர் ஏனைய சந்தர்ப்பங்க்ளில் பிணையில் விடுவதின் மூலமும் தடுப்புச் சிறைகளில் ஆள் நெருக்கடி ஏற்படுவதைக் குறைக்க முடியும். பிணை கொடுக்கப்பட முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரமே சந்தேக நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படுவர்.

- சிறைகளில் ஆள்நெருக்கடி ஏற்படுவதை போதைப்பொருள் குற்றமிழைப்பவர்கள் வேறு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு அவ் ஆட்களுக்கு தடுப்புக்காவலில் உள்ளவாறே புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலமும் தடுப்புச் சிறைச்சாலைகளில் உள்ள ஆள் நெருக்கடியைக் குறைக்க முடியும்.

- சனசமூக அடிப்படையிலான திருத்தங்கள் சட்டத்தின் குற்றங்களின் வீச்செல்லையானது அதிகரிக்கப்படின் சிறைச்சாலைகளில் ஆள் நெருக்கடியைக் குறைக்க முடியும்.

**ii) நீண்டகால தடுப்புக்காவல் சிறைக்கைதிகள்**

- அவர்கள் மீது விதிக்கப்பட்ட குற்றப்பகர்வு அல்லது குற்றச்சாட்டுக்கள் எதுவும் அல்லாமல்

தடுத்து வைப்படும் ஆட்களின் வழக்குகளின் தாமதத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய சட்டரீதியான, நிர்வாக ரீதியான, நிறுவன ரீதியான காரணங்களை மீள்பார்வை செய்வதற்குளூ

- சட்டமா அதிபர் திணைக்களம், அரசாங்க பகுப்பாய்வு திணைக்களம், பொலிஸ் திணைக்களம், நீதியமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளை உள்ளடக்கி குற்றச்சாட்டுகளை அல்லது குற்றப்பகிர்வு வழங்குவதிலும் தொடர்பாடல்கள் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதிலும் தாமதங்களுக்கு இட்டுச்செல்லும் காரணங்களைக் கண்டறியும் முகமாக இவர்களை உள்ளடக்கி ஒரு குழுவை நியமித்தல்

- எல்லா சிறைக்கைதிகளின் விபரங்களுடனும் அவ் தாமதங்களைக் கண்காணிப்பதற்கான அதி-காரிகளைச் சென்றடைவதுடன் சேர்த்து ஒரு தரவுத்தளத்தையும் வலைப்பின்னலையும் உருவாக்குதல்

- சிறைக்கைதிகளை நடாத்துவதற்கான குறைந்தபட்ச சட்டநியமங்களின் பிரகாரம் சிறைக்கைதிகள் நடாத்தப்படுகின்றனரா என்பதை சரிபார்ப்பதற்காக சிறைச்சாலைகளை ஒழுங்குக்கிரமமாக மேற்பார்வை செய்தல் சிறைச்சாலைகளின் நிலையினை மேற்பார்வை செய்வதற்கான நீதவான்களின் சட்டரீதியான அதிகாரத்தை செயற்படுத்தும் பொருட்டு அவர்களால் சிறைச்சாலைகள் ஒழுங்குக்கிரமமாக மேற்பார்வை செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான தேவை்

- சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களால் கைக்கொள்ளப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் நடத்துகைக்கான குறைந்தபட்ச நியமச் சட்டங்கள் மற்றும் அடிப்படைக் கொள்கை மீது சிறை அதிகாரிகளிடையே விழிப்புணர்வை வளர்த்தல்.

### iii) மரணதண்டனை சிறைக்கைதிகள்

மரணதண்டனை சிறைக்கைதிகளினது மரண தண்டனையை இல்லாது செய்வதற்கும் மரண தண்டனையை ஆயுட்தண்டயையாக குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

### A) சிறைக்கைதிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள்

- தடுத்துவைக்கப்பட்ட சிறைக்கைதிகளின் சிறந்த நிலைக்காக சிறைக்கைதிகளின் நடத்துகை மீதான குறைந்தபட்ச நியமங்கள் மற்றும் அடிப்படைக் கொள்கைகளை சாட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருத்தல்.

- சிறைக்கைதிகளை உற்பத்தித்திறன் வாய்ந்த முறையில் பயன்படுத்துவதற்காக அவ்வாட்களின் திறன்களை தனித்தனியாக இனங்கண்டு அவற்றை விருத்தி செய்ய அவர்களுக்கு உதவுதல்.

- சிறைச்சாலைகளுக்கான நலனோம்பல் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஒரு பொறிமுறை.

### B) நீண்டகால தடுத்துவைப்பு மற்றும் ஆள் நெருக்கடியான சிறைச்சாலைகளுக்கான ஏற்பாடுகள்

- நீண்டகாலமாக சிறைக்கைதிகளை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதானது இலங்கை முறைமையின் நிறுவன ரீதியானதும், செயன்முறை ரீதியானதுமான பலவீனமானதாக நிருபிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம், அரச பகுப்பாய்வு திணைக்களம், பொலிஸ் திணைக்களம் என்பன இவ் இடைவெளியை வெற்றிக்கொள்வதற்கான வினைத்திறனான மாற்றங்களைச் செய்ய வேண்டும். ஏனைய தரப்புக்களானவை (உதா: சட்டத்தரணிகள், பொதுமக்கள்) கூட இது தொடர்பான வகிபங்கைக் கொண்டிருக்கிறார்கள்.

- வழக்குகள் அடைபட்டு இருப்பதற்காக அதன் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்காக ஒரு

பொருத்தமான ஏற்பாடுகளைக் கொடுத்து பிரயோகிப்பதற்காக ஒரு "வழக்கு முகாமைத்துவக் குழுவை" நியமித்தல். இவ் அதிகாரத்துவமானது தொடர்புடைய உத்தியோகபூர்வ அமைப்புக்களிலிருந்து பல்வேறுபட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கியிருக்கும்.

- பிணை வழங்குதல் தொடர்பான பிரச்சினைகள் உயர்மட்டத்தில் இருப்பதாகும். இது தொடர்பாக சிவில் சமூகத்திடமிருந்து ஒரு பலமான உதவி அவசரமாக தேவைப்படுகிறது என நிருபிக்கப்படுகிறது.

- பிணைச் சட்டத்தின் உரிய அமுல்படுத்தலை உறுதிப்படுத்துதல் அல்லது திருத்துதல்.

- மத்தியஸ்த சபையின் பங்கு தொடர்பாக அதிக ஈடுபாடுகள்.

- குற்றமிழைத்தவர்களோடு சம்பந்தப்பட்ட வழக்குகளை மீள்பார்வை செய்வதற்கும் தடுத்துவைக்கப்பட்ட சிறைக்கைதிகளுக்கான தீர்ப்புகளை வழங்குவதற்கும் காலத்திற்கு காலம் சிறைச்சாலைகளை மூடிவிடுதல் திறந்த நீதிமன்ற அமர்வுகளை நடாத்துதல்.

- குற்றத்தின் ஒரு ஆரம்ப வேண்டுகோளுக்காக விசாரணை குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஒரு நன்மை வழங்குவதற்காக ஒரு நன்மை வழங்குதல் முறைமையை உருவாக்குதல்.

- தேவையற்ற ஒத்திவைப்புக்களுக்காக சட்டத்தரணிகளுக்கு எதிராக செலவான கட்டளைகளைச் செய்தல்.

C) **போதைப்பொருளுக்கு பழக்கப்பட்டோருக்கான ஏற்பாடுகள்**

- போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களின் கீழ் கைது செய்யப்படும் கைதிகளின் எண்ணிக்கை வருடாவருடம் ஒரு குறித்த வீதத்தால் அதிகரித்து வருவதாக சிறைச்சாலை அறிக்கைகள் காட்டுகின்றன. குற்றமிழைப்பவர்களிடையே கெரோயின் சம்பந்தப்பட்டவைகள் அதிகளவாக உள்ளன. இது உறுதியான புனர்வாழ்வு மற்றும் தடுப்பு பொறிமுறைகளிற்கான விசேட தேவை இருப்பதை இது காட்டுகிறது. போதைப்பொருளிற்கு அடிமையாக இருக்கும் ஆட்களை (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) திட்டத்தை செய்முறைரீதியானதாக் கொண்டுவருவதானது சிறந்த பதிலாக அமையும். சிறைச்சாலைகளில் அதிக இடநெருக்கடிப் பிரச்சினைகளுக்கான ஒரு பகுதி ஏற்பாடாகவும் இது அத்தியவசியமானது.

- போதைப்பொருளுக்கு அடிமையாதல் என்பது நோயாளியாக நடாத்தப்பட வேண்டியதாகும். அத்துடன் அவர்களை சிறைக்கைதிகளாக சிறையில் அடைப்பதை விடுத்து புனர்வாழ்வு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்

- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கென் தனியான இடங்களில் சிறைகளை அமைத்தல்.

D) **விழிப்புணர்வு போதாமைக்குரிய நடவடிக்கைகள்**

அரச மற்றும் அரசசார்பற்ற துறையினரால் இலவச சட்ட உதவிகள் கிடைக்கும் என்பதினை மக்களிற்கு அறிவுறுத்த தேசிய பொறிமுறையை கொண்டிருக்க வேண்டும்.

சித்திரவதை தொடர்பான நிலைமைகளில் சிறைக்கைதிகளிற்கு போதிய விழிப்புணர்வின்மை. அவர்களிற்கு சட்ட உதவிகள் மாத்திரமல்லாது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் தொடர்பிலும் விழிப்புணர்வு தேவை.

E) **எதிர்மறை சமூகப் பிரச்சினைகளுக்கான ஏற்பாடுகள்**

- சிறைக்கைதிகள் றிமாண்ட் சிறையிலுள்ள காலத்தின்பொழுது அவர்களிடம் குடும்பத்தின்

பிரச்சினைகள் (அவர்களின் முக்கியத்துவம் வாய்ந்த விசேடமாக பிள்ளைகள் பாடசாலை செல்லும் காலம் தொடர்பாக பரிசீலிப்பதற்கான ஒரு விசேட பொறிமுறை உருவாக்கப்படட வேண்டும்.

- போட்டிப் பொருளாதாரம், சமூக, கலாசார அல்லது ஏனைய பிரச்சினைகளுக்கு மக்கள் பதிற்செயற்பாடு காட்டும் விதமானது அவர்களின் ஆரம்ப பின்புலம் தொடர்பான வேறுபட்ட படிநிலைகளை உருவாக்குவதினால் திருப்திகரமான முறையில் மாற்றப்படக்கூடியது. (உ-ம்: முறைசார் முறைசாராக் கல்வி, கலாசார மற்றும் சமூகப் பின்புலம்)

- சிவில் சமூகமானது சிறைக்கைதிகள் மீது கொண்டுள்ள சம்பிரதாய பதிற்செயற்பாட்டை மாற்றுவதற்கு அவர்களும் சமூகத்தின் ஒரு பகுதியானவர்கள் என்ற வகையில் பொருத்தமான படிநிலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

- பிரதேச செயலக மட்டங்களில் சிறைக்கைதிகளின் குடும்பத்தினருக்கான உளவள ஆலோசனைத் திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

## F) புனர்வாழ்வு மற்றும் ஏனைய தொடர்புடைய பிரச்சினைகளுக்கான ஏற்பாடுகள்

- புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் வாழ்க்கைத்திறன் பயிற்சி செயற்பாடுகளுக்குமாக போதிய நிதியங்களை அரசாங்கத்திடமிருந்து அல்லது அந்நோக்கத்திற்கான அனுசரணையைப் பெறும் வழிவகைளில் இருந்து பெற்று வழங்குதல்.

- புனர்வாழ்வுக்காக அரசாங்கம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களிடையே அர்ப்பணிப்பை வளர்த்தல்.

- அவர்கள் சிறைச்சாலைகளில் இருந்து வெளிவந்ததும் புனர்வாழ்வு அளிப்பதற்காக வீடு செல்லும் வழி இல்லங்களை அமைக்கவும் இது சிறைக்கைதிகளுக்கு தமது சமூகத்துடன் மீள இணைந்து கொள்வதற்கும் மேலும் குற்றச்செயல்களில் ஈடுபடாது தடுப்பதற்கும் உதவும்.

## G) மீள இணைதல் பிரச்சினைகளுக்கான ஏற்பாடுகள்

- செயன்முறைகளை முடித்தவர்களுக்காக மாகாணப் பாதுகாப்பு நிலையங்களை (புனர்வாழ்வுக்கு பிற்பாடு 06 மாதங்களுக்கு ஆவது நிறுவுதல்).

- அவர்கள் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் வாழ்க்கையை அமைக்கக்கூடியவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் முகமாக இத்தரப்பினருக்கு பின்தொடர்வதற்காக அரசாங்க தொழிற்பயிற்சி சமூக சேவை நிறுவனங்களிடமிருந்து கட்டாய சேவைகள்.

- சிறைக்கைதிகள் சிறையை விட்டுச் செல்லும்பொழுது உதவுவதற்காக ஒரு முறையை உருவாக்குதல்.

- வங்கிகளின் கூட்டுழைப்புடன் விடுவிக்கப்பட்ட சிறைக்கைதிகளுக்கு கடன்வசதிகளை வழங்குதல்.

## H) பங்காண்மையாளர்களிடையே நெருக்கமான உள்ளுறவுகள் இன்மைக்கான ஏற்பாடுகள்

- சிறைச்சாலை அதிகாரிகள் பலமானதும் நம்பிக்கைக்குரியதுமான உறவுகளை சிவில் சமூகத்துடன் கொண்டிருக்க வேண்டும். அதன் பிரகாரம் அசலானதும் பொறுப்புணர்வு மிக்கதுமான வெளிப்புற நிறுவனங்கள் சிறைச்சாலைகளுக்கு செல்லக்கூடியதாக இருப்பதுடன் மனித நிதி மற்றும் வளப்பண்ட உதவிகளை சிறை நிலைமைகளை முன்னேற்றும் நோக்கத்திற்காக செய்ய முடியும்.

- சிறைக்கைதிகளின் ஒரு பூரணமான தேசிய தரவுத்தளத்தை வேறுபட்ட பங்காண்மையாளர்களுக்கு அனுகக்கூடியதாகவும் நன்மையளிப்பதாகவும் இருத்தல் (மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்ட உதவி ஆணைக்குழு).

- முன்னேற்ற மதிப்பீட்டு நோக்கங்களுக்கான பொறுப்பான நிறுவனங்களிடையே காலாண்டு கூட்டங்களை நடாத்துதல்.

**I) மரண தண்டனை வழங்குவதற்கான ஏற்பாடுகள்**

- சமூகத்திலே எமது மதத்தாலும் கலாசாரத்தாலும் மரண தண்டனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நாட்டில் அதிகரித்து வரும் குற்றச்செயல்களுக்கான பதில் இதுவல்லவென ஆணைக்குழுவும் நம்புகிறது. ஆகவே தான் மரணதண்டனையை இல்லாதொழிப்பதற்கான அத்தியவசியமான ஏற்பாடுகளை எடுப்பதற்கு முன்மொழியப்படுகிறது.

- குடியியல் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேசப்பொருத்தனையின் 2வது விருப்பத்திற்குரிய பின்னேட்டினை ஏற்று அங்கீகரித்துக் கொள்வதுடன் அதன் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யக்கூடிய அளவில் உள்நாட்டுச் சட்டங்களை திருத்துதல்.

- மரண தண்டனைக் கைதிகளினதும் மரண தண்டனையை மாற்றுவதற்கு நிர்வாக ரீதியானதும் நீதி ரீதியானதுமான அவசியமான ஏற்பாடுகளை எடுப்பதும் இத்தண்டனையை ஆயுட்கால சிறைத்தண்டனையாக மாற்றுதலும்

**J) குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கான ஏற்பாடுகள்**

- தடுத்து வைத்திருக்கும் தற்போதைய இடங்களின் நிலைமைகளைப் பரிசீலித்து இடம்மாற்றுதலும், பால்நிலை உணர்வை மதித்தலும் இயலாமையுடன் கூடிய ஆட்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தலும்.

- குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரினால் நிலையத்தை வினைத்திறனான முறையில் முகாமைத்துவம் செய்வதற்காக வேண்டிய பணியாட்தொகுதியினரை ஒதுக்குதலும் அவ்வாறு தடுத்து வைத்திருப்பவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதலும்.

- நாட்டைவிட்டு அனுப்புவதை வசதிப்படுத்துவதற்காக உரிய நாட்டு தூதரகங்கள்/ உயர்ஸ்தானிகர் அலுவலகங்களுடன் ஒருங்கிணைத்தல்

- தடுத்து வைத்திருப்போர் தொடர்பான தரவுகளை சேகரித்துப் பேணுதல்.

- நிறுவனத்தின் அடையாளத்துவத்தின் பெயரை மாற்றுதல்.

- தற்போதுள்ள கட்டிடத்தை புனர்நிர்மாணம் செய்வதுடன் மிரிகான தடுத்துவைப்பு நிலையத்தின் தடுப்பு வைப்பு நிலைமைகளை அது தற்காலிக இடத்திற்கு அல்லது உத்தேச மினிவாங்ஹொட நிரந்தர கட்டிடத்திற்கு மாற்றும்வரை அதன் தடுத்து வைப்பு நிலைமைகளை தரமுயர்த்துதல், சர்வதேச புலம்பெயர் தாபனம் ஆனது அவ்வாறான மீள்நிர்மாணத்திற்கு தேவைப்படும் நிதிஉதவியை வழங்குவதற்கு தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது.

## அத்தியாயம் ஐந்து

# ஏனைய சில அடைவுகள்

### 5.1 சுருக்கமாக சில செயற்பாடுகள்

#### 5.1.1 "தேசத்திற்கு மகுடம்"கண்காட்சியில் ஏற்படுத்தப்பட்ட மனித உரிமைகள் விழிப்புணர்வு

2012 பெப்ரவரியில் அனுரதபுரத்தில் இடம்பெற்ற "தேசத்திற்கு மகுடம்" தேசிய அபிவிருத்திக் கண்காட்சியில் இ.ம.ஆ ஒரு கண்காட்சிக் கூடத்தை நடத்தியிருந்தது. இ.ம.ஆ காட்சிக்கூடத்திற்கு வந்தவர்களுக்கும் ஒரு கேள்வி பதில் போட்டியில் வென்றவர்களுக்கு அன்பளிப்பு பையொன்று வழங்கப்பட்டது. கண்காட்சிக்கு விஜயம் செய்தவர்களுக்கு பெருந்தொகையிலான மனித உரிமைகள் மீதான கல்விப் பெறுமான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

#### 5.1.2 "மனித உரிமைகளில் உயர்தர டிப்ளோமாவின்" ஆரம்பிப்பு வைபவம்

கொழும்பு பல்கலைக்கழகத்திலே பட்டதாரிக் கற்கைகள் பீடத்தில் 2012 ஏப்ரல் 23 ஆம் திகதி மனித உரிமைகளில் உயர்தர டிப்ளோமாவினை ஆரம்பிக்கும் வைபவம் இ.ம.ஆ இனால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வைபவமானது நீதியரசர் பிரியந்த R.P பெரேரா தவிசாளர் இ.ம.ஆ தலைமையின் கீழ் இடம்பெற்றது. ஆணைக்குழுவின் ஆலோசணையுடன் இக்கற்கைநெறியானது சேர் ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழத்தினால் நடாத்தப்படும்.

#### 5.1.3 சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களை ஆதரவளிக்கும் சர்வதேச தினம் 2012

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களை ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு "புனர்வாழ்வு வேலை என்பது சித்திரவதையில் இருந்து தப்பிப்பிழைக்கும் ஒரு உரிமை" என்ற தொனிப்பொருளின் கீழ் இ.ம.ஆ இனால் ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந் நிகழ்வானது இ.ம.ஆ தவிசாளர் பிறரியந்த R P பெரேராவின் தலைமையின் கீழ் இ.ம.ஆ தலைமைக்காரியாலய கேட்போர்கூடத்தில் 2012 ஜுன் 26 ஆம் திகதி இடம்பெற்றது. மேல்மாகாண பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பதிகாரிகளும், சிறைச்சாலை புனர்வாழ்வு உத்தியோகத்தர்களும் சிவில் சமூகத்தினரும் பங்குபற்றியிருந்தனர்.

#### 5.1.4. மனநல ஆட்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இ.ம.ஆ இன் இடையீடு உதவியது

தேசிய மனநலசுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர். ஜயன் மென்டிஸ் இ.ம.ஆ ஆல் 2012.07.25 அன்று கேட்போர்கூடத்தில் பணியாட்டொகுதியினருக்காக ஒழுங்கு செய்யப்பட்ட விசேட விரிவுரையில் பங்குபற்றியிருந்தார். அவ் நிறுவனத்தை விருத்தி செய்வதற்கு தான் பல சவால்களை எதிர்கொண்டதாகவும் இ.ம.ஆ ஆனது அந் நிறுவனத்திற்குள் பார்வையுள் வரும் ஆட்களின் நிலைமைகளை உயர்த்துவதற்கு ஆதரவளித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மனநலம் பாதிக்கப்பட்ட ஆட்களைப் பாதுகாப்பதற்கும் மனநலச்சுகாதாரக் கவனத்தின் முன்னேற்றத்திற்குமான கோட்பாடுகள்" மீதான பிரசுரங்கள் இ.ம.ஆ ஆல் மும்மொழிகளிலும் அச்சடிக்கப்பட்டு (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) இச்சமயத்தில் டாக்டர். ஜயன் மென்டிஸ் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

### 5.1.5 சிவில் சமூகக் கூட்டங்கள்

சிவில் சமூகத்தினருக்கான கூட்டமொன்று 2012 ஒக்ரோபரில் இலங்கை மன்றக்கல்லூரியில் இடம்பெற்றது. கூட்டத்திற்கு பங்குபற்றுவதற்கான அழைப்பானது ஒரு பத்திரிகை அறிவித்தல் ஊடாக செய்யப்பட்டிருந்த நடவடிக்கையானது ஆணைக்குழுவால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களே இவ்வகையான நிகழ்வுகளில் பங்குபற்றுவதாக சிவில் சமூக நிறுவனங்களால் சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் கொடுப்பதான இந்த சாதகமான நகர்வு பாராட்டப்பட்டது. அடிமட்டத்தில் பூகோள காலாா்ந்த மீளாய்வு தொடர்பான அறிவு இல்லாமை தடுத்து வைக்கப்படும் இடங்களுக்கு சட்டத்தரணிகளின் விஜயமானது விலை அதிகமானதாக இருப்பதால் மனித உரிமை பாதுகாப்பாளர்களால் அவ்விடயங்களைச் சென்றடையக்கூடிய சாத்தியம் இ.ம.ஆ இன் ஆணையின் விழிப்புணர்வுக்கான தேவை பொதுவில் மக்களிடத்திலான செயற்பாடுகள் அங்கு கலந்துரையாடப்பட்ட பல தலைப்புக்களில் அடங்கியிருந்தன. பங்குபற்றுனர்கள் கலந்துரையாடல்களைத் தொடர்ந்து ஐந்து குழுக்களை உருவாக்கிக்கொண்டதுடன், இ.ம.ஆ ஆல் விநியோகிக்கப்பட்ட படிவங்களைப் பூர்த்தி செய்தன. அதன் நோக்கமானது ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் சிவில் சமூகத்தின் ஈடுபாட்டை முன்னேற்றுவதற்கான வழிவகைகள் மீதான கருத்துக்களை பெற்றுக்கொள்வதாக இருந்தது.

### 5.1.6 ஊடகவியலாளருக்கான மனித உரிமைகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

2012 ஒக்ரோபர் 15ஆம் மற்றும் 16 ஆம் திகதிகளில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டத்தின் ஆதரவுடன் ஒழுங்கு செய்யப்பட்ட மனித உரிமைகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது இ.ம.ஆ க்கும் உள்ளூர் தொடர்பாடல் வலைப்பின்னல்களுக்கும் இடையிலான இணைப்பின் ஒரு முக்கிய புள்ளியை குறித்துக் காட்டியதுடன் மேலும் ஆணைக்குழுவின் முயற்சிகளையும் இயலச் செய்தது. இ.ம.ஆ சிபார்சுகளை உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனடி நிலையிலும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் பாதுகாத்தல் 2011 -2016 தேசிய செயற்திட்டம் ஒன்றைக் கைக்கொண்ட நிலையிலும் அத்துடன் மிகவும் அண்மையாக இ.ம.ஆ ஆல் ஐநா மனித உரிமைகள் பேரவையின் பூகோள காலாா்ந்த மீளாய்வுக்கு அதனது சுயாதீன அறிக்கையை முதலாவதாக சமர்ப்பித்த நிலையிலும் அதன் உள்ளடக்கம் பூகோள காலாா்ந்த மீளாய்வுக்கான் இணைந்த அறிக்கையிலுள்ள முக்கியமான அம்சமாக கொண்டுள்ளது. இந் நிகழ்வானது முக்கியமானதாகவும் ஏற்கனவே நிகழ்வுகள் நிறைந்த ஆண்டில் ஆணைக்குழுவுக்கான மற்றொரு முக்கிய புள்ளியாகவும் அமைந்திருந்தது.

### 5.1.7 உங்களது உரிமைகளை கோருவதற்கான உரிமை மீதான ஒரு சுவரொட்டிப் பிரசுரம்

உங்களது உரிமைகளை கோருவதற்கான உரிமை மீதான பிரசுரமானமானது உருவாக்கப்பட்டு (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) மும்மொழிகளிலும் 5000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. இப்பிரசுரமானது பொலிஸ்மா அதிபர் ஊடாக தீவிலுள்ள அனைத்து பொலிஸ்நிலையங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன.

### 5.1.8 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மனித உரிமைகள் மீதான ஆய்வு மகாநாடு

2012 டிசெம்பரிலே இலங்கை பாராளுமன்றத்தின் வரலாற்றில் முதற்தடவையாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மனித உரிமைகள் ஆய்வு மகாநாடு இடம்பெற்றது. இவ் மகாநாட்டின் நோக்கமானது மனித உரிமைக் கருவிகள் மற்றும் இக்கருவிகளுக்கான அரசாங்கத்தின் கடப்பாடுகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அடிப்படை அறிவை உருவாக்குவதும், இவ் மகாநாடானது ஐநா மற்றும் இ.ம.ஆ ஆல் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டு பிரதிச் சாபாநாயகர் அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

### 5.1.9 சர்வதேச மனித உரிமைகள் தினக் கொண்டாட்டம்

மனித உரிமைகள் தினத்தை கொண்டாடுவதற்காக இ.ம.ஆ ஆல் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சியானது 2012 டிசெம்பர் 10 ஆம் திகதி BMICH இல் 2012 ஆம் ஆண்டிற்கான மனித உரிமைகள் தினத்திற்கான ஐநா அறிவித்த "எனது குரல் கணக்கில் எடுக்கப்படுகின்றது" என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்றது. தொனிப்பொருளை மனதில் கொண்டு ஆணைக்குழுவானது அதன் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு குழாம் கலந்துரையாடலிலே பிரபல குழாத்தினர் ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்களில் சுருக்க உரையாற்றினர். இக் கலந்துரையாடல் நோக்கமானது உரிமைகளைக் கோரும் மக்கள் சார்பாக குரல்களை எழுப்புவதாக இருந்தது. தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்கள் பின்வருவனவாக இருந்தன�ளூ

- பொருளாதாரம், சமூக, மற்றும் கலாசார உரிமைகள்
- பெண்கள் உரிமைகள்
- சிறுவர் உரிமைகள்
- வெளிப்பாடு மற்றும் சுதந்திரத்திற்கான உரிமை

ஒவ்வொரு பேச்சாளருக்கும் தலைப்பை அறிமுகம் செய்வதற்கு 5–7 நிமிடம் கொடுக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து குழாத்தினர் மற்றும் சபையில் இருந்த உறுப்பினர்களுடன் பங்குபற்றுதலுடன் கூடிய ஒரு கேள்வி வினா அமர்வு இடம்பெற்றது. கொட்டஹேன விவேகானந்தாக் கல்லூரி மாணவர்கள், பம்பலப்பிட்டி முஸ்லிம் பெண்கள் கல்லூரி Help Age இருந்தான முதியவர்கள் ஒரு கலாசார நிகழ்வை நடத்தியதுடன் நிகழ்ச்சி முடிவுக்கு வந்தது.

## 5.2 கூட்டங்கள் / கலந்துரையாடல்கள் / ஊடக விளக்கங்கள் / பத்திரிகைக் குறிப்புக்கள் - 2012

இச்சமயங்களில் கலந்துரையாடப்பட்ட சில விடயங்கள் சுருக்கமாகத் தரப்படுகிறது

### 5.2.1 மேன்மை தங்கிய ஜனாதிபதியுடனான சந்திப்பு

ஒரு கட்டிடத்தை கொள்வனவு செய்தல்

- கிளிநொச்சி, புத்தகளம், குருநாகலை, இரத்தினபுரி, மொனராகலை மற்றும் நுவரெலியா போன்ற 6 மாவட்டங்களில் புதிய பிராந்திய நிலையங்களை அமைப்பதற்கான முன்மொழிவு;

- தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் 2011-2016யை அமுல்படுத்துவதற்காக இ.ம.ஆ இன் ஊக்குவிப்புச் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கீடுகளை விஸ்தரித்தல்

### 5.2.2 அரசாங்கத் திறைசேரியுடனான கூட்டம்

- ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்ட அதே விடயங்கள் மேலதிக கலந்துரையாடல்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன

### 5.2.3 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, உயர்கல்வி அமைச்சின் அதிகாரிகளுடனான கூட்டம்

- “ Z “ அளவீட்டுத்திட்டத்தின் சர்ச்சை தொடர்புடைய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் கௌரவ சட்டமா அதிபரிடமிருந்து மதியுரையை பெற்றுக்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டது.

### 5.2.4 அகமீடியா முஸ்லிம் தூதுக்குழுவுடனான சந்திப்பு

- அகமீடியா அகதிகள் சம்பந்தப்பட்ட ஆதாரமற்ற கதைகளை அச்சு ஊடகத்தில் பிரசுரித்ததால் அவர்களின் நம்பிக்கைக்கு விளைவு காட்டப்பட்டது தொடர்பான பிரச்சினைகள்.

### 5.2.5 பொதுநலவாய செயலகத்தின் மதிப்பீட்டுக் குழுவுடனான கூட்டம்

- பகுதி உதவியின் தாக்கம் மற்றும் தாக்கவிளைவின் மதிப்பீடு
- எதிர்கால உதவிகளை முன்னேற்றுதலும் வடிவமைத்து வழங்குதலும

### 5.2.6 சர்வதேச தொழிலாளர் ஐக்கியத்திற்கான அமெரிக்க நிலையத்துடனான கூட்டம்

புலம் பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்து ஊக்குவிக்கும் முகமாக கட்டார் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் ஒரு நெருங்கிய இணைப்பை உருவாக்கும் முகமாக கட்டார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளருடனான கூட்டத்தை வசதிப்படுத்தியது.

### 5.2.7 தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் மீதான கவனக்குழு கூட்டம்

மனித உரிமைகள் தொடர்பாக கௌரவ தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சர் மற்றும் மேன்மை தங்கிய ஜனாதிபதியின் விசேட தூதுவருடன் ரேசுயீ 2011 – 2016 யை அமுல்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்ட கூட்டத்தில் பங்குபற்றியமை

**5.2.8 வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு - கூட்டம்**

- ஏற்று அங்கிகரிக்கப்பட்ட மனித உரிமை சமவாயங்கள் மீதான காலக்கிரம அறிக்கைகளை தயாரிப்பது தொடர்பானது.

**5.2.9 புனர்வாழ்வு சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு - பிரதிநிதிகள் கூட்டம்**

- சிறைக்கைதிகளுக்கான மனித உரிமைகளை ஊக்குவிப்பது தொடர்பானது

**5.2.10 கூட்டம் - தேசிய மனநலசுகாதார நிறுவகம்**

- மனநலம் பாதிக்கப்பட்ட ஆட்களின் உரிமைகளை ஊக்குவித்தல்

**5.2.11 14.08.2012 அன்று பொலிஸ்மா அதிபருடனான கூட்டம்**

- உத்தியோகத்தர்களுக்கு எதிராக இ.ம.ஆ ஆல் செய்யப்பட்ட சிபார்சுகளை அமுல்படுத்தாமை பொலிஸ் திணைக்களத்தின் பணியாளர்களால் அதே திணைக்களத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பான விடயம்
- மொழிக்கொள்கையை அமுல்படுத்துதல்
- பொலிஸ் அதிகாரிகளிடையே மனித வஞ்சக்கடத்தல் தொடர்பான சட்டரீதியான ஏற்பாடுகள் குறித்து அறிவின்மை
- வெள்ளைவானுடன் தொடர்புடைய கடத்தல்கள்
- எதிர்ப்பு போராட்டங்களையும் கலைத்தலும் அந்நோக்கங்களுக்காக பொலிசாரால் பயன்படுத்தப்படும் ஆயுதங்களும்

**5.2.12 மாற்று ஆற்றலுடைய ஆட்களின் அனுகுவதற்கான உரிமை தொடர்பான ஊடக வெளியீடு**

- மாற்று ஆற்றலுடைய ஆட்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் 2006 ஆம் ஆண்டு இலக்கம் 01 இவற்றினைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக ஒழுங்குவிதிகளானவை 18/09/2009 விசேட வர்த்தமானி அறிவித்தலால் 2014 வரை பின்போடப்பட்டமை என்ற உண்மை
- சொல்லப்பட்ட ஒழுங்குவிதியை அமுல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்கு இ.ம.ஆ ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.
- அனுகுவதற்கான ஒழுங்குவிதிகளின் ஏதாவது மீறுகைகளை ஆணைக்குழுவுக்கு அறியத்தருவதற்கு மக்களிற்கு அழைப்பு விட்டமை.

**5.2.13 இ.ம.ஆ இன் அண்மை நடவடிக்கை தொடர்பான ஊடகங்களிற்கு விளக்கமளித்தல்**

- சிறைகளிலும் றிமாண்ட் சிறைகளிலும் தடுப்புக்காவல் சிறைகளிலுமான இடநெருக்கடி
- காத்தான்குடியில் இரண்டு பாடசாலைப் பிள்ளைகளுக்கான தொந்தரவு
- புலம்பெயர் தொழிலாளர்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள்
- எவ்வாறு இ.ம.ஆ இன் சிபார்சுகளானவை பெரும் தாக்கவிளைவுடனும் வினைத்திறனுடனும் அமுல்படுத்த முடியும்

**5.2.14 சர்வதேச புலம்பெயர் தினத்திற்காக இ.ம.ஆ ஆல் விடுக்கப்பட்ட செய்தி**

- 1.8 மில்லியன் தொழிலாளர்களை வெளிநாடுகளில் கொண்டிருப்பதுடன் வருடாந்தம் 250,000 ஆட்கள் வெளியேறி வருகின்றனர் என்பது கவனிக்கப்பட்டது.
- பொருளாதார அபிவிருத்திக்கு புலம்பெயர்களின் பங்களிப்புக்களை அங்கீகரித்துக்கொள்வது முக்கியமானது
- புலம்பெயர் தொழிலாளர்களின் மனித உரிமைகளை அவர்கள் வேலை செய்யும் நாடுகளில் அவர்களின் உள்ளுர் ஆணைக்குட்பட்டு பாதுகாத்துக்கொள்வதற்கான உருப்படியான படிநிலைகளை எடுப்பது அவசியமானது

## அத்தியாயம் ஆறு

# வெளிநாட்டு நிதியீட்டக் கருத்திட்டங்கள்

### 6.1. தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கு ஐநா ஆதரவு – ஐநாவின் கூட்டுடனான மனித உரிமைகள் மீதான நிகழ்ச்சித்திட்டம், இலங்கை 2012

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான முக்கிய ஐநாவின் ஆதரவானது 2009 நவம்பரில் ஆரம்பித்த மனித உரிமைகள் மீதான ஒரு ஐநா கூட்டு நிகழ்ச்சித்திட்டம் ஊடாக நடாத்தப்பட்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை தரம் A க்கு தரமுயர்த்துவதற்கு ஆதரவளிக்கும்படி 2008 மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்தால் செய்யப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் இத்திட்டமானது ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான இலக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதாகும். இவ் ஆதரவானது இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தரமானது தரம் A யில் இருந்து 2007 இல் தரம் B க்குச் சென்று, 2009 இலும் அது உறுதிப்படுத்தப்பட்டது. இது மனித உரிமைகள் நிறுவனங்களுக்கான சர்வதேச ஒருங்கிணைப்புக்குழுவால் இனங்காணப்பட்டதால் முக்கிய விடயங்களில் நடவடிக்கை தாக்கவிளைவை பலப்படுத்துவதை நோக்கி இந்த ஆதரவு இலக்கு வைக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது இ.ம.ஆ ஆல் அவர்களது தலைமைக்காரியாலய மற்றும் பிராந்திய அலுவலக பணியாட்டொகுதியினர் ஊடாக ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத் தினதும் ஐநா சிரேஸ்ட மனித உரிமைகள் ஆலோசகரினதும் நிதியிட்டம் மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடனும் நடாத்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டு OHCHR மற்றும் UNHCR என்பனவும் கூட்டு நிகழ்ச்சித்திட்டத்தை நோக்கி நிதி வழங்கியிருந்தன.

அறிக்கையிடப்படும் 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஐநா கூட்டு நிகழ்ச்சித்திட்டம் ஆனது முக்கிய அவர்களது ஆணை உடைய விடயங்களிளுக்கான ஆதரவைத் தொடர்ந்தது.

**இ.ம.ஆ இன் தந்திரோபாயப் பார்வைகள்–** இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 21 நாள் இயலுமை மதிப்பீடானது முத்தரப்புக் குழுவினராகிய ஆசிய பசுபிக் சபை, பிராந்திய அலுவலகம், மற்றும் OHCHR அடங்கிய குழுவினரால் சிரேஷ்ட மனித உரிமைகள் மதியுரைஞர் ஊடாகப் பொறுப்பெடுக்கப்பட்டது. ஏற்பாட்டைத் தொடரும்பொழுது ஐநா கூட்டு நிகழ்ச்சித்திட்டமானது இயலுமை மதிப்பீடு சிபார்சுகளினை அடிப்படையாகக் கொண்ட ஒரு மூன்று வருட தந்திரோபாயத் திட்டத்தின் விருத்தியிலும், மனித உரிமைகள் செயற்திட்டத்திலும் மற்றும் LLRC சிபார்சுகளிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தேசிய மற்றும் பிராந்திய மட்ட அனைத்து பணியாட்டொகுதியினருடனான பரந்த ககலந்துரையாடல்களிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை ஐநா கூட்டு நிகழ்ச்சித்திட்டம் வசதிப்படுத்தியது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் எல்லா சிரேஷ்ட பணியாட்டொகுதியினரும் பங்குபற்றிய வேலைப்பயிற்சி பட்டறையின் வெளியீடுகளினை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதனது 2012 வது செயற்திட்டத்தை விருத்தி செய்தது. சிரேஷ்ட மனித உரிமை மதியுரைஞர் மற்றும் ஆணையாளர்கள் மற்றும் UNDP யின் கருத்திட்ட ஒருங்கிணைப்பாளரின் பங்குபற்றுகை என்பவற்றுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மத்திய குழுக்கூட்டங்களில் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் அவர்களது பார்வை நோக்கை தொடர்ச்சியாக தொடர்பால் செய்வதற்கு ஐநா முயற்சி எடுத்திருந்தது.

**பிராந்திய அலுவலகங்கள் –** ஐநா கூட்டு நிகழ்ச்சித்திட்டமானது ஐநா பிராந்திய அலுவலகங்களுக்கு தொழில்நுட்ப பயிற்சிகள், உபகரணங்கள் வழங்குகைகள், சட்ட ஆலோசகர்கள் மற்றும் சிவில் சமூகத்துடனான ஈடுபாடுகளை ஆதரிப்பதற்கான நிதியீட்டங்கள் என்ற வடிவங்களில் தொடர்ந்து ஆதரவு வழங்கியது. இந்த இணைந்த நிகழ்ச்சித்திட்டம் ஊடாக UNHCR ஆனது 2012 இல் கிளிநொச்சியில் ஒரு நடமாடும் செயற்பாட்டை ஏற்பாடு செய்வதற்கு ஆதரவளித்தது. வடக்கே இன்னும் பிராந்திய அலுவலகம் அமைக்கப்படாத முன்பு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு பிரதேசங்களில் சமூகப்பணிகளை வழங்கி வருகிறது.

தேசிய கொள்கையும் சட்டவாக்கமும் - பாராளுமன்ற உறுப்பினர்களை சர்வதே மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் நியமங்கள் தொடர்பானவற்றில் உணர்வு அனுபவத்தை பெறச் செய்வதற்கான திட்டமிடப்பட்ட முதலாவது கலந்தாலோசனையும் ஆய்வு மகாநாடும் ஆனது 2012 டிசெம்பரில் இ.ம.ஆ மற்றும் ஐ நா மற்றும் பாராளுமன்றத்தின் கூட்டுழைப்புடன் பாராளுமன்றத்தின் கருத்திட்டத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

பாராளுமன்றத்தின் வரலாற்றில் முதற் தடவையாக மனித உரிமைகள் மீதான ஒரு முழுநாள் ஆய்வு மகாநாடு பாராளுமன்றத்திற்குள் 73 பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கெடுப்புடன் இடம்பெற்றது, மனித உரிமைகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், இ.ம.ஆ ஆணையாளர்கள், ஐநா நாட்டு குழுவினருக்கிடையே ஒரு உரையாடல் இடம்பெற்றது.

இக் கருத்திட்டமானது ஒரு மனித உரிமைகள் தெரிவுக்குழுவை பாராளுமன்றத்துடன் நிறுவுவதற்காக பணியாற்றுகிறது. முதற்படியாக பிரதிச்சபாநாயகர் மற்றும் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு பிலிப்பைன்ஸில் உள்ள சபாநாயகர் மற்றும் பிரதிச் சபாநாயகரிடம் ஒரு விஜயத்தை மேற்கொண்டு மனித உரிமை தெரிவுக்குழு தொடர்பாக கலந்துரையாடுவதற்காக ஒரு பட்டறிதல் விஜயம் ஒன்றை கருத்திட்டம் ஒழுங்கு செய்தது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் முதியோர் உரிமைகள் தொடர்பாக தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடாத்தவும் UN OEWG (வரையறையில்லாத செயற்குழு) க்காக முதியோர் உரிமைகள் தேசிய கொள்கை வகுப்பு அதிகாரிகளுக்காகவும் சிபார்சுகளை உருவாக்கவும் இக்கருத்திட்டமானது இ.ம.ஆ க்கு தொழில்நுட்ப மற்றும் நிதியீட்ட ஆதரவை வழங்கியது..

**சிவில் சமூகத்துடனான ஈடுபாடு –** ஒரு பரந்த வீச்சிலான சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு உருப்படியானதும் அனைத்தையும் உள்ளடக்கியதுமான பிராந்திய மட்டங்களிலான காலாண்டுக்கு ஒருமுறையான உரையாடல்களையும் / கலந்துரையாடல்களையும் நடத்த கருத்திட்டம் தொடர்ந்து ஆதரவு வழங்கியது. கருத்திட்டமானது தேசிய மட்டத்தில் இரண்டு கூட்டங்களுக்கு ஆதரவு அளித்தபோதிலும் 10 பிராந்திய அலுவலகங்கள் ஊடாக கருத்திட்டமானது 34 கூட்டங்கள் / கலாந்தாலோசிப்புக்களுக்கு ஆதரவளித்தது. சிவில் சமூகத்துடனான கூட்டுச் செயற்திட்டங்களானவை 07 பிராந்திய அலுவலகங்களால் விருத்தி செய்யப்பட்ட சிவில் சமூகத்துடனான கூட்டுச் செயற்திட்டங்களானவை உரையாடல்களின் விளைவாக இருப்பதுடன் அவைகள் பிராந்திய மட்டத்தில் இன்னும் செயற்பாட்டில் உள்ளன.

பயிற்சி மொடியுலை விருத்தி செய்வதில் இ.ம.ஆ க்கு இக் கருத்திட்டம் ஆதரவளித்ததுடன் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக வெளிப்புற நிபுணர்களின் ஆதரவுடன் அவர்களின் வேண்டுகோளின் பேரில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்காக இரண்டு நாள் வதிவிடப் பயிற்சியை 10 உறுப்பினர்களுக்கு நடாத்துவதற்கும் இது ஆதரவளித்தது. கருத்திட்டமானது ஊடக ஆட்களுக்கான இரண்டு நாள் பயிற்சிக்கும் மனித உரிமைகள் மீதான இளைஞர்களுக்கான வேறொரு 03 நாள் பயிற்சிக்கும் **இ.ம.ஆ** ஊடாக ஆதரவளித்தது.

**பொதுமக்கள் அறிக்கையிடல்–** ஐநா கூட்டு நிகழ்ச்சித்திட்டமானது மும்மொழியிலான ஒரு இணையத்தளத்தை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்காக விருத்தி செய்வதற்காக ஆதரவு அளித்ததுடன் இணையத்தளத்தை பேணுவதற்கும் பிந்திய வருடாந்த அறிக்கைகள் பிரசுரிப்பதற்கும் பத்திரிகைக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு உதவி வழங்குவதற்கும், பத்திரிகையாளர் மகாநாட்டிற்கு ஆதரவு வழங்குவதற்கும் ஆதரவளிக்கிறது.

தேசிய கருத்திட்ட ஒருங்கிணைப்பாளர் – Ms **தனுஜா நவரத்ன**

### 6.2 ருஜேஊநுக் கருத்திட்டம்

அறிக்கையிடல் மற்றும் சிறுவர் உரிமைகள் மீறுவதில் பதிற்செயற்பாடு காட்டுதல் சிறுவர் உரிமைகள் மீறுகைகள் மற்றும் அறிக்கையிடல் செயற்பாடில் சனசமூகத்தின் நம்பிக்கையை அதிகரித்தல் என்ற தொனிப்பொருள் மீதான ஒரு விசேட கருத்திட்டமானது 2012 ஜுலை 25 இல் யுனிசெப் ஆல் நிதியீட்டப்பட்டது. கருத்திட்டமானது ஆறு மாவட்டங்களை உள்ளடக்கியிருந்ததுடன் மேற்படி நோக்கை பூர்த்தி செய்வதற்காக வேறுபட்ட தொனிப்பொருள் விடயங்கள் மீதான செயற்பாடுகளாவன இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களால் நடாத்தப்பட்டது. பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களானவை 2012 ஆம் ஆண்டுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

| பிராந்தியம் | நிகழ்ச்சித்திட்டவகை | நிகழ்ச்சித்திட்டஎண். |
|---|---|---|
| வடமாகாணம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்கள் | விழிப்புணர்வு | 17 |
| | கூட்டங்கள் | 12 |
| வடமாகாணம் வவுனியா, முல்லைத்தீவு மன்னார் மாவட்டங்கள் | விழிப்புணர்வு | 12 |
| | கூட்டங்கள் | 03 |
| | பயிற்சிப்பட்டறை | 05 |
| | களப்பணிகள் | 05 |
| மத்திய மாகாணம் நுவரெலிய மாவட்டம் | விழிப்புணர்வு | 07 |

கருத்திட்ட ஒருங்கிணைப்பாளர் - Ms **சிரானி ராஜபக்ஷ** பணிப்பாளர் கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டம்

## அத்தியாயம் ஏழு

# 2012 ஆம் ஆண்டில் மனித உரிமைகளின் நிலை

### சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதன் தேவை

தற்போதைய சூழமைவில் காணப்படுகின்ற முக்கியமான விடயம் சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பதன் தேவையாகும். ஆரோக்கியமான சனநாயக சமூகமொன்றிற்காக அரசாங்கத்தின் மூன்று நிறுவனங்களுக்கிடையில் அதிகார சமநிலை காணப்பட வேண்டியதுடன் ஒவ்வொருவர் கௌரவத்துடனும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் பணியாற்ற வேண்டியுள்ளது. அதனூடாக சிறந்த கட்டுப்பாட்டினைப் பேணிச் செல்வதற்கான வாய்ப்பும் ஆற்றலும் உண்டாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட பிரதம நீதியரசரை நீக்கிய செயற்பாடானது நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு அமைவாக இருப்பினும் அது சம்பந்தப்பட்ட ஒட்டுமொத்த செயன்முறை இடம்பெற்ற விதம் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் சட்டவாக்கச் சபைக்கும் நீதித் துறைக்கும் இடையில் மோதல் ஏற்படும் தன்மையைக் கொண்டிருந்தது. இது சட்டத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் பலவீனப்படுத்தும் ஒரு செயலாக அமைந்ததுடன் ஒவ்வொரு நிறுவனங்கள் தத்தமது வரையறைகளுள் சுயாதீனமாகவும் பக்கச்சார்பின்றியும் செயற்படுவதைக் காண்பதற்கு மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்பு வீழ்ச்சியடையவும் காரணமாக அமைகின்றது. நீதிமன்றத்திற்குச் சுதந்திரமாக செயற்படுவதற்கான தன்மை கிடையாது அல்லது அதன் சுயாதீனத்தன்மை பலவீனப்படுத்தப்படும் வகையில் ஏனைய நிறுவனங்கள் செயற்படுகின்றன என்ற எண்ணம் மக்கள் மனதில் ஏற்படுவது பாதகமானது என்பதுடன் அது சட்டத்தின் ஆட்சியைப் பலவீனப்படுத்தவும் காரணமாக அமையும். மேற்படி குற்றப்பிரேரணை செயன்முறையில் நடைமுறையிலிலுள்ள சட்டத்தின் குறைபாடுகளை இனங்கண்டு அதனைத் திருத்தி நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையை மேலும் உறுதிப்படுத்தக் கூடிய வகையில் சட்ட ஏற்பாடுகளை வழங்கும் ஒரு செயன்முறையை நோக்கி பயனிக்கும் கலந்துரையாடலை ஏற்படுத்திக் கொள்வதற்கு இது சிறந்ததொரு சந்தர்ப்பமாக அமைந்தது. இருப்பினும் அச்சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு தரப்புக்களும் பொதுக் கொள்கை ரீதியான காரணங்களை மேலெழுப்புவதை விடுத்து ஒவ்வொருவர் தொடர்பாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட மோதலாக மோதல்கரமான வகையில் செயற்பட்டன. மறுபுறத்தில், அது அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒவ்வொரு கட்சியின் பலத்தைக் காண்பிக்கின்றதும் கட்சிகள் மீது மக்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளும் முறையாகவும் சம்பவங்கள் வரிசை படுத்தப்பட்டது காணக்கூடியதாகவிருந்தது. இதனால் சனநாயக உரையாடலுக்கான வாய்ப்பு நலுவிச் சென்றதுடன் அது பாதகமான முறையில் சமூகமயமானது. நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மை உயர் மட்டத்தில் இருக்க வேண்டியதுடன் அதற்காக நீதியரசர்கள் சுயாதீனமாக செயற்படுவதற்கான உச்சமட்ட வாய்ப்பு ஏற்படக்கூடிய வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டியுள்ளது. தொழில்சார் பிரச்சினைகள் இன்றி அச்சமும் ஐயமும் இன்றி நீதியாகவும் பக்கச் சார்பின்றியும் செயற்படுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். நீதியரசரொருவரை நீக்கும் செயன்முறையானது வெளிப்படைத் தன்மையுடன்கூடிய இயற்கை நீதிக் கோட்பாடுகளைப் பின்பற்றும் முறையொன்றாக இருத்தல் வேண்டும். நீதியரசரொருவரை நீக்கும் போது தற்போது பின்பற்றப்படுகின்ற முறைகள், குற்றப் பிரேரணைச் செயன்முறை என்பன நீதியானதும் பரந்ததுமான செயன்முறையொன்றை நோக்கிப் பயனித்தல் மிக சனநாயகமானதும் பொருத்தமானதமாக அமையும். இதன் போது பொதுநலவாய நாடுகளுக்கான லத்திமர் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்து நீதியரசரொருவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை தகுதிவாய்ந்த பிறிதொரு சபை மூலம் புலனாய்வு செய்வதும் அதனை மீண்டும் குற்றப் பிரேரணை செயன்முறையுடன் தொடர்பு படுத்துவதும் அல்லது அத்தகைய பிறிதொரு பொருத்தமான முறையொன்றைப் பயன்படுத்தும் பொருத்தத் தன்மை தொடர்பாக கருத்தாடல் ரீதியான சொல்லாடலொன்றை ஆரம்பிப்பது அவசியமாகவுள்ளது. சட்டத்தின் மீது

மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை அத்தகைய சொல்லாடலின் ஊடாக ஏற்படுத்திக் கொள்ளும் கட்டமைபிற்குள்ளேயே ஏற்றுக் கொள்ளச் செய்விக்கலாம். அச் சந்தர்ப்பம் கடந்து சென்றிருந்தாலும் அத்தகைய தடையொன்றிற்கான தேவை மேற்கொண்டும் செல்லுபடியானதாகவே உள்ளது.

**காணாமல் போகச் செய்தல் மற்றும் காணாமற்போன ஆட்கள்**

தம் அன்புக்குரியோரை இழந்த பெண்களின் ஒரு எதிர்ப்பு ஊர்வலானமானது காணாமல்போனோரை தேடுவோருக்கான குழு மற்றும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான இயக்கம் என்பவற்றால் கூட்டாக ஒழுங்கு செய்யப்பட்டது. கிட்டத்தட்ட வடக்கு கிழக்கிலிருந்தான 25 பெண்கள் கொச்சிக்கடை இந்துக் கோயிலில் இருந்து ஜிந்துப்பிட்டியிலுள்ள மற்றுமொரு இந்துக்கோயிலுக்கு ஒரு அடையாள ஊர்வலத்தில் பங்குபற்றியிருந்தனர். இவ்வாறு சம்பிரதாயங்களுக்கு ஒப்ப மண்சட்டிகளில் எரியும் கற்பூர பந்தத்தை ஏந்திச் சென்றனர். அவர்கள் தமது காணாமற்போன கணவன்மார்கள், தந்தையர்கள், மகன்மார்கள் குறித்த தகவல்களை மன்றாடிக் கெஞ்சிக் கேட்டிருந்தனர். சிலர் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டதாக அறியப்பட்டுள்ளனர். ஜனநாயகத்திலே நீதிக்குப் புறம்பான கைதுகளும் கடத்தல்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

பல சந்தர்ப்பங்களில் பொலிஸ் நிலையங்களிலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் ICRC யிடமும் முறைசார் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக LLRC அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும் இந்த காணாமற்போன ஆட்கள் எங்கிருக்கிறார்கள் குறித்து தாம் அறியமுடியாது இருப்பதான அவர்களின் உறவினர்களின் முறைப்பாடுகள் தொடருகின்றன. இக்குற்றச்சாட்டுக்களை உரிய முறையில் விசாரித்து குற்றமிழைத்தோரை நீதியின் முன் கொண்டு வருவதை உறுதிப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை சட்ட அமுல்படுத்தும் அதிகாரிகள் செய்வதற்குப் பணிப்பதற்கு அரசாங்கம் கடமையுடையதாக உள்ளது. சரணடைந்தோ அல்லது கைது மூலமோ அரசாங்க அதிகாரிகளின் காவலில் எடுக்கப்பட்டுள்ள எந்த ஆளினதும் பாதுகாப்பையும், காப்பையும் உறுதிப்படுத்தவது அரசின் பொறுப்பாகும்.

## கருத்து

சமூக ஒருங்கிணைப்பு மீதான தேசிய கொள்கை LLRC சிபார்சுகளை அமுல்படுத்துவது மீதான தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் என்பன உட்பட்ட பல கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. LLRC சிபார்சுகள் மீதான தேசிய செயற்திட்டமானது நேர்மையுடன் அமுல்படுத்தப்பட வேண்டியுள்ளது. இந்த சிபார்சுகளை அமுல்படுத்துவதானது தேசிய ஐக்கியத்தையும், அமைதியையும் ஊக்குவிப்பதை நோக்கி நீண்டநேரம் எடுத்துச் செல்லும். அரசாங்கம் தனக்குள்ளே உள்ள ஊடாக தீவிர தேசிய சக்திகளை கணக்கில் எடுக்காது நாட்டில் அமைதி, ஸ்திரத்தன்மை, வளர்ச்சி என்பவற்றை ஊக்குவிக்கும் யுகத்தை நோக்கி செல்ல வேண்டும். சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுவதுடன் பழிவாங்கலுக்கும் தீங்கிழைத்தலுக்கும் எந்த இடமும் இருக்கக்கூடாது.

நாட்டில் ஒன்றுக்கு பின் ஒன்று வந்த அரசாங்கங்கள் சமூக ஏற்பாடுகளை நாட்டின் நிர்வாகத்தில் கைக்கொண்டுள்ளமையால் இலங்கை 1948 இல் சுதந்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்பிருந்தே சமூக நலனோம்பல் நாடாக இருந்து வந்துள்ளது. 1930 இன் நடுப்பகுதியிலேயே சமூகத்தின் வசதி குறைந்தவர்களின் நலனுக்காக வழங்குவதற்கு தொடங்கிய இவைகள் சூரியமல் பிரசாரம் போன்ற இயக்கங்களுக்கு உரியனவாகும். ஆகவே தான் இன்று அரசியல் அமைப்பின் III ஆம் அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகளாகவும் அரச கொள்கையின் பணிப்புக்கொள்கைகளாகவும் மக்களின் நன்மைக்கான சமூக நலனோம்பல் ஏற்பாடுகளை அமுல்படுத்துவற்காக அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள VI அத்தியாயத்தில் சொல்லப்பட்ட அடிப்படையில் கடமைகளாகவும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் போலல்லாது பொருளாதார, சமூக, மற்றும் கலாசாரம் மீதான சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு சட்ட விளைவு கொடுப்பதற்கு பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சட்டவாக்கம் எதுவும் இல்லாதுள்ளது. போதிய உணவு, உடுத்தல் வதிவிடம் மற்றும் வாழ்க்கை நிலைமையில் தொடர்ச்சியான முன்னேற்றம், ஓய்வுநேரங்களின் முழுமையான மகிழ்வூட்டம் நாட்டின் ஆட்சியிலே சமூக கலாசார சந்தர்ப்பங்கள் உட்பட்ட போதிய வாழ்க்கை நியமத்தை பாதுகாப்பதால் மக்களின் சமூக, பொருளாதார நலனோம்பலை ஊக்குவிக்கும் இலக்குடன் சட்டவாக்கம் மற்றும் நிறைவேற்று தரப்பினர் வழிநடத்தப்படுவதாக இக் கொள்கைகள் குறிப்பிடுகின்றன. 2012 ஆம் ஆண்டின்பொழுது 2009 இல் உள்ளக முரண்பாடு பூர்த்தியடைந்த பிற்பாடு ஆரம்பிக்கப்பட்ட நாட்டின் பெரும்

உட்கட்டமைப்பு விருத்திகள் தொடர்கின்றன.

இலங்கையில் 80ூ ஆன மக்கள் கிராமங்களிலும் தோட்டப்பகுதிகளிலுமே வாழ்கின்றனர். ஆகவே வீதி வலைப்பின்னல், மின்சாரம், நீர், நீர்ப்பாசனம், பாடசாலைகள், தாய்மைச் சிகிச்சை என்பன நெகும கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்க்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டு கிராமத்திற்கு ஒரு கருத்திட்டம் என்ற திட்டத்தின் கீழ், தீவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கருத்திட்டம் அபிவிருத்தி செய்யவோ நிர்மாணம் செய்யவோ என ஒரு மில்லியன் ரூபா வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 2012 இல் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு பாகங்களிலும் பெரும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்பொழுது சில சிறிய பட்டினங்களும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இடம்பெறும் அபிவிருத்தியோடு சமதையாக செல்வதற்கு கடினப்பட வேண்டியதாக உள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. எனவேதான் 108 சிறிய பட்டினங்களை விருத்தி செய்வதற்காக அபிவிருத்தியடையாத நாட்டிலுள்ள பிரதேசசபைகள் பூராகவும் “புற நெகும” என்ற பெயரின் கீழ் இந்த வருடத்தில் 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்காக ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உரிய பிரதேசசபைகள் தமது உட்பட்டமைப்பு வசதிகளையும் அந்தப் பட்டினங்களில் பொதுமலசலகூடங்கள், வாகனத்தரிப்பிடங்கள், முச்சக்கரவண்டித் தரிப்பிடங்கள், சந்தைத் தொகுதிகள், வாரச்சந்தைப் பகுதிகள், பிரதேசசபைக்கட்டிடங்கள், நூலகங்கள், சிறுவர்பூங்காக்கள், இணைக்கும்பாதைகள், குடிநீர், ஓய்வெடுக்கும் இடங்கள் என்பன விருத்தி செய்யப்பட வேண்டியனவாக உள்ளன. வடக்கு கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சானது இதேநோக்கங்களை கவனத்தில் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதினால் அதற்கு வெளியால் உள்ள பிரதேசசபைகளில் புறநெகும அமுல்படுத்தப்படுகிறது.

2012 ஆம் ஆண்டில் பல கருத்திட்டங்கள் ஊடாக நகர சுற்றாடலின் தர முன்னேற்றம் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டமையால் இவ்வாண்டில் இல்லாதது நகர அபிவிருத்தியில் உச்சமானதை ஈட்டியதாக உள்ளது. இவ் அபிவிருத்திகளின் இலக்கானது நாட்டின் ஒரு முழுமையான வாழ்வு மற்றும் வேலைச்சூழமைவை வழங்குவதாகும். ஆகவே பயன்பாடுகள் பொழுதுபோக்குவசதிகள், நகர அலங்கரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இந்த வருடத்தில் கொழும்புக்கும் அதன் சுற்றுப்புறங்களுக்கும் முக்கிய இடம் அளித்து வழங்கப்பட்டிருந்தன.

இந்தவருடத்தில் பல தாழ்ந்த, இடைத்தர, மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பகுதி வீட்டுத்திட்டங்களில் 30 ஆண்டுகளில் பழைமைவாய்ந்தவைகள் புதுப்பிக்கப்பட்டு 18,000 வதிவோருக்கு நன்மையளிக்கப்பட்டது. NHDA நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிரந்தரமில்லாத வதிவாளர்களுக்கு சிலவருடங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது இற்றைப்படுத்துவதை 2012 ஆம் ஆண்டின்பொழுதும் தொடர்ந்தது. பல ஆடம்பர வீட்டுத்தொகுதிகளும், வெளிநாட்டு ஒத்துழைப்புடன் தனியார்துறையினரால் உயர்வருமானம் பெறுபவர்களுக்காக கட்டப்படுகிறது.

புலம்பெயர்ந்த ஆட்களுக்கான நிரந்தர வீட்டுவசதிகளைக் காணும்பொருட்டு வடக்கு கிழக்கில் பெருமளவிலான வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கிழக்கிலே வெளிநாட்டு நிதியக் கருத்திட்டத்தின் கீழ் விசேடமாக கடன்கள் இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்டதுடன், வீடு அமைப்புக்களானவை பங்குபற்றுகை அணுகுமுறையில் செய்யப்பட்டதுடன், அரசாங்கத்தின் மீள்குடியேற்ற முயற்சிகளும் இவ்வாறு அதிகரிக்கப்பட்டன.

நகரமயமாக்கலுடனும் மக்களின் வாழ்க்கைதர மாற்றத்துடனும் குழாய் மூலம் கிடைக்கப்படும் நீரின் கேள்வி எல்லா நகரங்களிலும் அதிகரித்து வருகிறது. எல்லா மக்களுக்கும் சுத்தமான குடிநீர் வசதி வழங்கப்பட வேண்டி இருப்பதுடன் பட்டினங்கள், நகரங்களின் அபிவிருத்திக்கான திட்டங்களை வரைவதில் ஏனைய இடங்களுக்கான குடிநீர்வசதி, மலசலகூடவசதிகள் என்பன கட்டாயமாக செய்யப்பட வேண்டியுள்ளன.

ஆரம்ப இரண்டாம்தரக் கல்விகள் இலவசமாகவும் கட்டாயமாகவும் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இருப்பதால் இலங்கையின் கல்வி வீதம் 90.8% ஆக உள்ளது. மேலும் பல்கலைக்கழக கல்வியானது அரச பல்கலைக்கழகங்களில் இலவசமானதாக உள்ளது. பாடசாலைகளில் தமிழ் சிங்களத்தை கற்பித்து அதன்மூலம் இளமையிலிருந்தே இன ஐக்கியத்தை ஊக்குவிப்பது அரசகொள்கையாக உள்ளது. எவ்வாறாயினும் இக் கருத்திட்டத்திற்கான தகைமைவாய்ந்த ஆசிரியர்கள் இன்மையானது தற்பொழுது பிரச்சினைகளை உண்டாக்கிறது. ஆங்கில கற்பிப்பு மற்றும் கணனிக்கல்வியைப் பாடசாலைகளில் ஏற்படுத்துவதற்கும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

2012 ஆம் ஆண்டில் 1000 இரண்டாம்நிலை பாடசாலைகளை தீவு பூராகவும் விருத்திசெய்வதற்கான கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கல்வியமைச்சானது தனியார்துறையினருடன் இப்பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை முன்னேற்றுவதற்காக பல கூட்டு முயற்சிகளில் நுழைந்தது. இதன் காரணமாக அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் Etiselat கம்பனியுடன் உடனான கூட்டு முயற்சியில் 1000 கணனிக்கள் இணையவசதிகளுடன் வழங்கப்பட்டன. இம் முயற்சியின் பிரதான இலக்கானது தேசிய கல்வி

நிறுவனத்தால் ஆசிரியர்களால் அங்கீகரிக்கப்பட்ட பாட அறிவை இணையம் ஊடாக பாடசாலைப்பிள்ளைகளுக்கு வழங்குதல். இம் முயற்சியிலே இன்ரெல் சிறிலாங்கா ஆல் ஏற்கனவே பயிற்றப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை தமது பாடங்களில் ஒன்றிணைப்பதற்கு உதவி அத்துடன் மாணவர்களை உலகின் ஏனைய இடங்களோடு சமதையாக செல்வதற்கு உதவியது. பல்கலைக்கழக ஆசிரியர்களின் தொடர்ச்சியான வேலைநிறுத்த செயற்பாடுகள் மாணவர்களின் கல்வியினை தடைபோட்டன. பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்ளமுடியாமல் இருக்கும் நிலைமையினால் 150000 மாணவர்களில் 22000 பேரே தகைமை பெறுவதானது பல்கலைக்கழகங்களிலே இடம்பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கும் பிரச்சினை தீர்க்கப்படாது உள்ளது. Z புள்ளித்திட்ட விடயத்தின் நிமித்தமாக மேலதிகமாக 5800 மாணவர்கள் அனுமதி தொடர்பில் பல்கலைக்கழகங்கள் பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள். அரசாங்கம் பல்கலைக்கழகங்கள் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாதென திட்டவட்டமாகக் கூறியுள்ளது. ஆனாலும்வெளிநாட்டுச் செலாவணி நாட்டிற்கு வெளியே செல்வதிலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக தரமான தனியார் கல்வியை அங்கீகரிப்பது இணங்கக்கூடியதாக உள்ளது. இதன் நிமித்தம் மாலபேயிலுள்ள தனியார் மருத்துவ கல்லூரியானது மருத்துவர்களின் ஒன்றிய எதிர்ப்புக்காரணமாக வேண்டிய பயிற்சியினை வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்ள முடியாமையினால் ஒரு புதிய மாணவர்களுக்கான போதனா வைத்தியசாலையுடன் தொடர்கிறது. 95மூ ஆன பொறியியல் பட்டதாரிகளுள் 90% பட்டதாரிகளுடன் ஒப்பிடும்பொழுது 29% மான கலைப்பட்டதாரிகளே வேலைவாய்ப்பு பெற்றுக்கொண்டுள்ளனர். BA பாடங்களுக்குள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளை உட்சேர்ப்பதற்கான ஒரு முன்மொழிவு ஆராயப்படுகிறது.

இலங்கைப் பெண்களின் ஆயுள் எதிர்பார்ப்பானது 80 மற்றும் 76 ஆக அதிகரித்துள்ளது. இவ்வாறாக மக்களின் சுகாதாரக்கவன சேவைகள் மற்றும் வாழ்க்கை நியமங்களின் முன்னேற்றம் பிரதிபலிக்கப்படுகிறது. அரச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார சிகிச்சை நிலையங்கள் இலவசமானதாகவும் வெளிநாட்டவர் உட்பட எல்லோரும் செல்லக்கூடியதாகவும் உள்ளது. நாட்டிலே 593 அரசாங்க வைத்தியாசலைகள் 73,437 படுக்கைகளுடன் உள்ளன. ஒரு அண்மைய ஆய்வின் பிரகாரம் 20% ஆன வைத்தியசாலைப் படுக்கைகள் புகையிலை மற்றும் மதுபாவனையால் நோயுற்ற நோயாளிகளைக் கொண்டிருப்பதாகவும் மேலும் நாட்டிலுள்ள 72% ஆன நோய்கள் புகையிலை மற்றும் மதுபாவனையோடு பிரதான தொடர்புடைய NCDக்களாகவும் உள்ளன. புகைத்தலுக்கான எச்சரிக்கைகளை சிகரெட் பெட்டிகளில் ஏற்கனவே உள்ள எழுத்துமூலமான எச்சரிக்கை வடிவத்தைவிட பட வடிவிலான எச்சரிக்கையானது மிகவும் தாக்கமானதாக இருக்கும் என்பதால் அவ்வாறான எச்சரிக்கையை கொண்டிருக்க எடுத்த முயற்சியானது சிகரெட் வியாபாரிகளால் கடுமையாக எதிர்க்கப்பட்டு இவ்விடயமானது நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதுடன், சுகாதார அமைச்சானது நீதிமன்றத் தீர்ப்பிற்காக காத்திருக்கிறது. தொற்று ஏற்படாத நோய்களாகிய நீரிழிவு, உயர் குருதியமுக்கம், புற்றுநோய், இதயக்குழாய் நோய்கள், மாரடைப்பு என்பவற்றில் ஒரு திடுக்கிடும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தொற்றாத நோய்களுக்கான பிரதான இடர்க்காரணியாக சுகாதாரமற்ற உணவுப்பழக்கங்கள், வேலைப்பழு, உடற்செயற்பாடின்மை என்பன கருதப்படுகிறது. ஆகவே சுகாதார அமைச்சானது சிறந்த உணவை உண்ணல், ஆரோக்கிய வாழ்வுக்கான பயிற்சி செய்தல், என்பன குறித்து பாடசாலைப் பிள்ளைகள் இளம் ஆட்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரமொன்றை ஊக்குவிப்பதில் சுகாதார அமைச்சானது துடிப்பாக செயற்படுகிறது. டெங்கு, வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்களும் மற்றும் அநேகமாக சில ஆண்டுகளுக்கு முன்னர் இல்லாதொழிக்கப்பட்ட அண்மித்த மலேரியா போன்றவைகளும் பொதுமக்களின் கவனத்திற்குரியனவாக இன்னும் உள்ளன.

2012 செப்ரெம்பரில் யாழ்ப்பாணக் குடாநாடானது 25 வருடங்களுக்கு பின்பு தேசிய மின்னிணைப்புக்குள் சேர்க்கப்பட்டது. மேல் கொத்தலை நீர் மின்சக்தி தொகுதியானது இந்த ஆண்டின்பொழுது தேசிய மின்னோட்டத்துடன் இணைக்கப்பட்டது. பொதுமக்களால் மின்சாரம் வழங்கப்படக்கூடிய ஒரு தேசிய மின்சுற்று ஓட்ட முறைமையை உருவாக்கும் இலக்குடன் 100 க்கு மேற்பட்ட நீர் மின்சக்தி கருத்திட்டங்கள் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தனியார்துறை 100 சிறு நீர் மின்சக்தி திட்டங்களை நாட்டில் செயற்படுத்துகிறது. நுரைச்சோலையின் இரண்டாம் கட்ட நிர்மாண வேலைகளும், சம்பூரின் புதிய நிலக்கரி மின்தொகுதியின் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. மின்சாரத்தின் செலவானது வருடா வருடம் அதிகரித்துச் செல்வதால் மாற்றுசக்தி மூலமாக மின் சூரியசக்தி கடலலைகள், காற்று மற்றும் சக்தி தொடர்புடைய நனோ தொழில்நுட்பம் என்பவற்றுக்கான ஆய்வானது தொடர்கின்றன. எனவே 74 மெகாவோட்ஸ் காற்று சக்தியும், 11.5 மெகாவோட்ஸ் உயிரியல் சக்தியும் 1.4 மெகாவோட்ஸ் சூரியசக்தியும் தேசிய மின்சுற்று ஓட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. முதலாவது டென்றோ (கிளிறிசிடியா) அனுரதபுரத்திலுள்ள சக்தி வலுத்தொகுதியானது 500 KW களை தேசிய இணைப்புக்குள் ஜுலை 2012 இல் கொடுக்க ஆரம்பித்துள்ளது.

2011 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்ட "டிவி நெகும" தேசிய நிகழ்ச்சித்திட்டமானது உணவுப்பாதுகாப்பு, வறுமையையும் பசியையும் இல்லாதொழித்தல், மக்களின் போசாக்கு நியமங்களை முன்னேற்றுதல், என்பவற்றை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளது. 2012 இல் நிகழ்ச்சித்திட்டமானது விவசாயம், கால்நடைவளர்ப்பு, மற்றும் மீன்பிடித்துறை போன்ற எல்லா விடயங்களிலும் பெரும் வெற்றியை ஈட்டிக்கொண்டது. இந் நிகழ்ச்சித்திட்டமானது எல்லா 25 மாவட்டங்களிலும் அமுல்படுத்தப்படுவதுடன் தென்னம்கன்றுகள், மரக்கறி விதைகள், பழக்கன்றுகள், மூலிகைக்கன்றுகள், சிறு ஏற்றுமதிப்பயிர்கள் என்பன தெரிவு செய்யப்பட்ட வீடுகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. காளான் வளர்த்தல், தேனீ வளர்த்தல், அழகு பூக்கன்றுகள் வளர்த்தல் போன்ற கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான வளங்கள் வழங்கப்படுகின்றன. இலங்கையில் வளர்க்கக்கூடிய ஆனால் தற்பொழுது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற சில பயிர்களை வளர்ப்பதற்கு மக்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. இப்பயிர்களாவன பயறு, கச்சான், செத்தல்மிளகாய், சோயா, சோளம் என்பன இப்பயிர்களாகும். கோழிக்குஞ்சுகள் மற்றும் பசுக்கள் இந் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் விநியோகிக்கப்படுவதானது குடும்பங்களின் போசணையை அதிகரிக்கவும் அவர்களின் வருமானத்தை உயர்த்தவும் உதவியது. வரையறையுடைய இடங்களில் மாட்டுக்கொட்டில்களில் பசுக்களை வைத்திருப்பதும், முறைமை ரீதியாக அவைகளுக்கு ஊட்டுவதும் பால் உற்பத்தியானது அதிகரிக்கப்படக்கூடியது என கண்டுகொள்ளப்பட்டதுடன், 5290 மாட்டுக்கொட்டில்கள் இந்நோக்கத்திற்காக கட்டப்பட்டன. 2012 இல் இக் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆட்டுமந்தை வளர்ப்பும் கணிசமான முன்னேற்றத்தை சாதித்துள்ளது. இவ்வருடத்திலே 6000 மீன்பிடிக் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருப்பதுடன் இதன் விளைவாக நுவரெலிய மாவட்டமாகிய தோட்டத்துறையில் கூட உடன் மீன் கிடைக்கக்கூடியதாக உள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் தமது நாளாந்த வேலையின் பின்பு மதுபானச் சாலைகளுக்கு செல்வதற்குப் பதிலாக மீன்பிடிக் குளங்களுக்கு செல்வதாக அறிக்கையிடப்பட்டது.

ஆட்கடத்தலானது 2012 ஆம் ஆண்டின் பெரிய அக்கறைக்குரிய விடயமாக இருந்ததுடன் 2000 க்கு மேற்பட்டோர் அவுஸ்திரேலியாவுக்கு சட்டத்திற்கு மாறான நுழைவை ஈட்டுவதற்கு முயற்சிக்கும்பொழுது கைது செய்யப்பட்டுள்ளனர். சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவர்கள் பச்சைப் புற்றரைகளை நாடுவதற்கு தூண்டப்பட்டுள்ளதுடன் இச்செயன்முறையானது ஒரு வலைப்பின்னலால் இயக்கப்படுவதுடன் இவ் வலைப்பின்னலின் உள்ளூர் முகவர்கள் அப்பாவி மக்களை இடர்மிகுந்த கடற்பயணங்களில் செல்லுவதற்கு ஊக்குவிக்கின்றன. எவ்வாறாயினும் அவுஸ்திரேலிய அரசாங்கம் பலமான நடவடிக்கைகளை எடுப்பதனாலும் படகுகளை முதலில் கிறிஸ்மஸ் தீவுக்கு மாற்றி அனுப்பி பின்பு பப்புவே நியு கெனியாவுக்கு அனுப்புவதினாலும் இச் செயன்முறையில் ஒரு மெதுவான தன்மை காணப்படுகிறது.

சமூகத்தில் பெண்கள், சிறுவர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள் உடல் ரீதியாகவும் மற்றும் உளரீதியாகப் பாதிப்படைந்தவர்கள், வயதுமுதிர்ந்தோர்கள் என்போர் தாக்கப்படும் குழுக்களாகக் கருதப்படுவதுடன் அவர்களுக்கு விசேட கவனமும் தேவைப்படுகிறது. 2012 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் செயற்பாடுகள் பல ஊடகங்களில் அறிக்கையிடப்பட்டு இருந்தாலும் அவைகள் அனைத்தும் 2011 இல் அறிக்கையிடப்பட்ட மட்டத்தை அடையவில்லை. எவ்வாறாயினும் அறிக்கையிடப்பட்ட புலம்பெயர் பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்களாவன இந்த ஆண்டிலே அதிகளவில் அதிகரித்து இருப்பதைக் காட்டுகிறது. இதன் விளைவாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சானது வீட்டுவேலையில் செல்லும் விடயங்களில் சவுதி அரேபியா, ஜோர்தான், போன்ற சில வளைகுடா நாடுகளுக்கு வீட்டு வேலை தொடர்பாக செல்பவர்களின் வயதை 25 ஆக அதிகரித்தல் மற்றும் வேலைவழங்குபவர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்பதாக வேலைப்பெறுனர் ஒவ்வொருவருக்கும் 1000 அமெரிக்க டொலர்களை வைப்பாக வைக்கும் தேவைப்பாட்டை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வரும் வருடங்களில் திறனற்ற பெண் வீட்டுப்பெண் பணிப்பெண்களாக புலம்பெயர்வதை முற்றுமுழுதாக நிறுத்துவதற்கு அரசாங்கம் முன்மொழிகிறது. 2012 ஆம் ஆண்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு புள்ளிவிபரங்களின் பிரகாரம் பெண்கள் ஆண்களுக்கான இவ் விகிதாசாரம் 49% - 51%. ஆகும். குழந்தை பராமரிப்போர், தாதிகள், விற்பனைப் பெண்கள் போன்ற நிலைகளுக்கு பயிற்றப்பட்டவர்களாக வளைகுடாநாடுகளுக்கு திறனுடைய பெண் வேலைவாய்ப்புக்களை நிரப்புவதற்கு இலங்கை தவறியுள்ளது. எனவே அரசாங்கமானது அந்த வேலைத்தேவைகளைக் கைப்பற்றிக்கொள்வதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கான நேரம் இதுவாக உள்ளது. எவ்வாறாயினும் மத்தியகிழக்கில் தாதியர் போன்ற வேலைவாய்ப்புக்களை நாடுவதில் ஒரு தயக்கம் காணப்படுகிறது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் வருடாந்தம் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றன. தற்பொழுது தொலைபேசி அழைப்பிற்கு கொடுக்கப்பட்ட பகிரங்க பிரசங்கத்தாலும், நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்சித்திட்டங்களாலும்

இவ்வண்ணமான செயற்பாடுகள் முன்பு போன்று அறிக்கையிடப்போகாமல் தற்போது அறிக்கையிடப்படுவதால் இவ்வண்ணமான துஷ்பிரயோக செயற்பாடுகள் குறித்து அதிக விழிப்புணர்வு மக்களிடம் தற்பொழுது ஏற்பட்டுள்ளதாக அதிகாரசபை குறிப்பிடுகிறது.

30 வருடங்கள் நீடித்த உள்ளக முரண்பாட்டின் நிமித்தமாக உடற்குறைபாடு உடைய ஆட்களின் நூற்றுவீதம் இலங்கையில் கணிசமானதாக உள்ளது. இவ் ஆட்கள் சமூக பொருளாதார மற்றும் சனசமூக கலாசார வாழ்வில் முழுப் பங்குபற்றுகையைக் கொண்டிருக்க உரிமை கொண்டிருக்கிறார்கள். எவ்வாறாயினும் பொது இடங்கள் மற்றும் பொதுப்போக்குவரத்து போன்றனவற்றுக்கு அவ் ஆட்கள் செல்லுவது வரையறுக்கப்பட்டிருப்பதானது சனசமூகத்தில் அவர்கள் சாதாரண வாழ்வை அனுபவிப்பதில் தடையாக உள்ளது. 1996 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க இயலாமையுடையோருடன் கூடிய ஆட்களை பாதுகாக்கும் சட்டமும், 2006 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க செல்லுவதற்கான ஒழுங்குவிதிகள் சட்டமும் அவ்வண்ணமான ஆட்கள் சமூக வாழ்வில் சமனான மகிழ்வைப் பெறுவதற்கான தேவையான சட்டரீதியான சட்டக வேலையை வழங்கியுள்ளன. புதுக்கட்டிடம் / கட்டமைப்பு போன்ற சொற்களுக்கு ஒழுங்குவிதிகளிலே ஏதாவது அரச தனியார் துறைக்குச் சொந்மான நாளாந்த வாழ்வில் பொதுமக்கள் பாவிக்கும் கட்டிடங்களாக ஒரு பரந்த அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே வங்கிகள், வைத்தியசாலைகள், கடைத்தொகுதி நிலையங்கள், பொருட்கள் கொள்வனவு நிலையங்கள், சந்தை தொகுதிகள் என்பன எல்லாம் செல்லக்கூடியவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் கொழும்பு நகரில் கூட வங்கிகள் மற்றும் வசதி செய்யப்பட்ட கடைத்தொகுதி நிலையங்களில் இன்றும் இயலாமையுடையோருக்கு செல்வதற்கான வழி எதுவும் இல்லாதிருப்பதை நாம் காண்கிறோம்.

ஆயுள் எதிர்பார்க்கை அதிகரிப்பு, சுகாதார கவன வசதிகள் முன்னேற்றம் மக்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றம் என்பவற்றுடன் வயது சென்ற சனத்தொகையினர் இலங்கையில் குறிப்பிடத்தக்க வகையில் இலங்கையில் அதிகரித்து வருகிறது. துரதிஷ்டவசமாக இந்த விடயமானது சுகாதாரத்துறையிலுள்ள திட்டமிடுபவர்களாலும், கொள்கைவகுப்பவர்களாலும் தீர்த்து வைக்கப்படவில்லை. பல இடங்களிலே முதியோருக்கான தேசிய நிதி ஆதரவளிக்கப்படும் முதியோருக்கான பகல் நிலையங்கள் உள்ளன. சமூகசேவைத்திணைக்களமானது நியாயமான விலைக்கு பொதுமக்களுக்காக வீட்டு நாள் கவனிப்பு சேவைக்காக பயிற்றுவிக்கிறது. ஆனாலும் வளர்ந்து வரும் தேவைக்கு ஏற்றவாறாக அதனுடைய சேவைகள் முன்னேற்றப்பட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் பல தனியார் ஓய்வூதிய வீடுகள், இரவு பகல் கவனிப்பு சேவைகள் என்பன சேவைக்காக உயர்கட்டணம் செலுத்தக்கூடியவர்களுக்கு சேவையாற்றுவதற்காக உள்ளனர்.

டிவிநெகும மற்றும் சமுர்த்தி திட்டங்களின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் பொருளாதார வலுவூட்டல் நிகழச்சித்திட்டம் போன்ற திட்டங்களினால் இலங்கையில் வறுமை மட்டமானது கணிசமானளவு குறைந்துள்ளது. மெழுகுதிரிகள், ஊதுவர்த்திகள், சீமெந்து கற்கள், இளநீர் எண்ணெய்கள் போன்ற உற்பத்திகள் டிவிநெகும வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வறியோர் மேலதிக வருமானத்தை ஈட்டும் முகமாக பல குடிசைக்கைத்தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சமுர்த்தி திட்டத்தின்கீழ் குடும்ப இறப்புக்கள், வைத்தியசாலை சேர்ப்புக்கள், குழந்தை பிறப்புக்கள் போன்ற சமயங்களில் வறியோரின் தாக்கமுறு தன்மையைக் குறைப்பதற்காக பல்வேறுபட்ட வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடருவதற்கு கடன் வழங்கப்படுகிறது.

2012 ஆம் ஆண்டு இலங்கைப் பொருளாதாரமானது 6.4% ஆல் வளர்ந்துள்ளது. முன்னைய இரு ஆண்டுகளானவை 8 மூபொருளாதார வளர்ச்சியைக் கண்டதுடன் ஒப்பிடும்பொழுது 2012 ஆம் ஆண்டு 6.4% வளர்ச்சியைக் கண்டுள்ளது வறுமையை அரைவாசியாக்கல், உலகளாவிய அடிப்படைக் கல்வியை சாதித்தல், பால்நிலை சமத்துவ ஊக்குவிப்பு, 2015 ஆம் இலக்காண்டுக்கு முன்பாக பெண்களை வலுவூட்டல், பல மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை நாடு சாதித்துள்ளதுடன், 2016 ஆம் ஆண்டு இலக்கு தலாவீத வருமானமாக 4000 டொலர்களை சாதிப்பதற்கு கடுமையாக முயற்சிக்கிறது. எவ்வாறாயினும் LLRC சிபார்சுகளை அமுல்படுத்துவதிலுள்ள மெதுவான கதியானது பலரது அக்கறைக்குரிய விடயமாக மாறிவிட்டது. 30 வருட இன முரண்பாட்டுக்கு இட்டுச்சென்ற விடயங்களுக்கு சிபார்சுகளை அமுல்படுத்துவது தீர்வுகாணும் என நம்பப்படுகிறது. இருந்ததுபோல் ஒரு அமைதியான சூழலில்தான் இன்றைய மற்றும் எதிர்கால எல்லா இலங்கையரும் தற்போது முன்னெடுக்கும் பெரும் அபிவிருத்திதிட்டங்களின் கனிகளை அனுபவிக்க முடியும் என்பதாகும்.

பின்னிணைப்பு **I:**

# பூகோள காலார்ந்த மீளாய்வுக்கான எழுத்து மூல சமர்ப்பிப்பு 2வது சுற்று 14வது அமர்வு **2012**

# இலங்கை மனித உரிமை ஆணைக்குழு **[HRCSL]**

இல 165 கின்சி வீதி, பொரளை, கொழும்பு 8.
தொலைபேசி: ++ 94 112 696 470 / ++94 112 689 558
தொலைநகல்: ++ 94 112 694 924
மின்னஞ்சல்: sechrc@sltnet.lk
இணையத்தளம்: www.hrcsl.lk

1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க சட்டத்தின் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நிறுவப்பட்டது. இது இலங்கை அரசியலமைப்பில் 18வது திருத்தத்தின் கீழ் வருவதுடன் மக்களின் உரிமைகளை ஊக்குவித்து பாதுகாக்கும் பரந்த பணி இதனுடன் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அடிப்படை உரிமைகள் ஜபி 10(அ)ஸஉடன் தொடர்புடைய அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒத்துச் செல்வதை உறுதிப்படுத்தும்பொருட்டு செயன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கிறது அல்லது புலனாய்வு செய்கிறது. அத்துடன் அடிப்படை உரிமைகளின் தெளிவான மீறுகைகளை விசாரிப்பதுடன் இணக்கம் மற்றும் மத்தியஸ்தம் மூலம் தீர்வுகளையும் வழங்குகிறது. அரசியலமைப்பாலும் சர்வதேச நியமங்களாலும் ஜபி 10(ஆ)ஸ உத்தரவாதப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளுடன் உடன்படக்கூடிய வகையில் தேசிய சட்டங்களையும் நிர்வாக ஏற்பாடுகளையும் கொண்டுவருவதற்கு இ.ம.ஆ அரசாங்கத்திற்கு அறிவுரை செய்கிறது. அத்துடன் மனித உரிமைகளுடன் தொடர்புடையவற்றில் விழிப்புணர்வையும் கல்வியையும் ஊக்குவிக்கிறது. ஜபி 10(ஊ)ஸ. மேலும் ஆணைக்குழுவானது அடிப்படை உரிமைகளை மேலும் ஊக்குவித்தல் பாதுகாப்பதில் சட்டவாக்கங்களை உருவாக்குவதில் அரசாங்கத்திற்கு மதியுரை அளித்து உதவி செய்கிறது. ஜபி 10(இ)ஸ அத்துடன் உரிமைகளுடன் தொடர்புடைய ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்வதற்கு அங்கீகரித்துச் செயற்படுவதற்கு அரசாங்கங்களுக்கு சிபார்சுகளைச் செய்கிறது. 10(உ)ஸ.

**அறிமுகம்**

1. முதலாவது பூகோள காலாந்த மீளாய்வில் செய்யப்பட்ட முடிவுகள் மற்றும் சிபார்சுகளை இ.ம.ஆ வரவேற்கிறது. சமர்ப்பணங்களைச் செய்வதாலும் கடைசி மீள்பார்வையில் இருந்து சிபார்சுகள் தொடர்பாகச் செய்யப்பட்ட முன்னேற்றத்தை மதிப்பிடுவதனாலும் அதற்கு மேலதிகமாக மீள்பார்வை செய்யப்படும் காலப்பகுதிக்கான மனித உரிமைகள் நிலைமையை மீள்பார்வை செய்வதாலும் இ.ம.ஆ முதற்தடவையாக பூகோள காலாந்த மீளாய்வு செயன்முறையில் துடிப்பாக பங்குபற்றுகிறது.

   சமர்பிப்பின் தயாரிப்பில் இ.ம.ஆ அரச அதிகாரிகளுடன் சிவில் சமூகத்தினருடன், சர்வதேச ஃஅரச சார்பற்ற நிறுவனங்களுடன் வாய்மூல, எழுத்துமூல சமர்ப்பணங்களை வரவேற்கும் பிராந்திய தேசிய மட்ட உறுப்பினர்களுடன் இறுதி மீளாய்வு சிபார்சுகளை அமுல்படுத்துவது தொடர்பாக கலந்தாலோசனை உரையாடல்களைச் செய்தது.

**சர்வதேசக் கடப்பாடுகள்**

2. இலங்கையானது பல சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களுக்கு ஒரு தரப்பாக உள்ளது. ஆனாலும் பின்வரும் சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களை நாட்டின் மனித உரிமைச் சட்டகவேலையைப் பலப்படுத்தும் பொருட்டு ஏற்று அங்கீகரித்து உள்ளுர்மயப்படுத்தப்பட வேண்டியுள்ளது. அத்துடன் ஒப்பந்தங்களின் பிரகாரம் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இ.ம.ஆ இலங்கையை தூண்டுகிறது.

2.1. இலங்கையின் குடியியல் அரசியல் உரிமைகளிற்கான சா்வதேச பொருத்தனையையும் விருப்பத்திற்குரிய பின்னேட்டினையும் இலங்கை ஏற்று அங்கீரித்ததை இ.ம.ஆ வரவேற்கின்றது. குடியியல் அரசியல் உரிமைகளிற்கான சா்வதேச பொருத்தனை ஆனது குழுக்களுக்கான தனிநபர்களின் அணுகுகையை இயலச் செய்வதுடன் குடியியல் அரசியல் உரிமைகளிற்கான சா்வதேச பொருத்தனையை உள்ளுர்ச் சட்டங்களாக மாற்றுகிறது. CATகான ஏற்றுக்கொள்கை இருந்தபொழுதிலும் இலங்கை அரசாங்கமானது CAT க்கான ஒதுக்கங்களை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தேவையுள்ளது.

2.2. இ.ம.ஆ இன் உரிமைகளின் அனுபவிப்பை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை இ.ம.ஆ கவனிப்பதுடன் இலங்கை அரசாங்கம் ICECSR தெரிவு மரபொழுங்கை இணங்கி ஏற்றுக்கொள்ள தூண்டுவதாகக் குறிப்பிடுகிறது.

2.3. இயலாமையுடன் கூடிய ஆட்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச அசாறிகளின் முனைப்புக்களின் அர்ப்பணிப்பை பாராட்டும் அதேவேளையில் தெரிவுடைய மரபொழுங்கையும் CRPD யையும் ஏற்று அங்கீகரிப்பதற்கு இ.ம.ஆ இலங்கையை தூண்டுறது. ஊசீனு உறுப்புரை 33 இன் பிரகாரம் இ.ம.ஆ ஆனது ஒரு சுயாதீன கண்காணிப்பு பொறிமுறையாக நியமிக்கப்பட முடியும்.

2.4. இலங்கை அரசாங்கத்தின் சட்டங்களையும் கொள்கை மாற்றங்களையும் நிர்வாக ஏற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்களின் கீழ் ஊக்குவிக்கப்பட்ட உரிமைகளை பூர்த்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களையும் இ.ம.ஆ வரவேற்கின்றது. அரசாங்கம் காலத்திற்கு கால அறிக்கைளை சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை எடுக்க இ.ம.ஆ எதிர்பார்த்திருக்கிறது. உரிய முக்கிய அமைச்சுக்களை அறிக்கைகளை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கவும் கண்காணிக்கவும் குழுக்களை நியமிக்கவும் குவிமையப்புள்ளிகளாக உரிய முக்கிய அமைச்சுக்களை அரசாங்கம் ஒதுக்க வேண்டிய தேவையுள்ளது.

2.5. பூகோள காலாா்ந்த மீளாய்வின் கீழ் செய்யப்பட்ட சிபார்சுகளை அமுல்படுத்தல் தொடர்பாடல் செய்வதில் அரசாங்கத்தின் வகிபங்கை அழுத்தியுரைக்கிறது. இ.ம.ஆ அதிகாரசபைகள் உட்பட்ட அரசாங்க அதிகாரிகளிடையே பூகோள காலாா்ந்த மீளாயவுக்கு முன்பும் பூகோள காலாா்ந்த மீளாயவின் பொழுதும், பூகோள காலாா்ந்த மீளாயவின் பின்பும் பரந்த வீச்சுடைய கலந்துரையாடல்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தை அது ஊக்கப்படுத்துகிறது.

**உள்ளூர் அக்கறைகள்**

**3. உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள்**

2010 இன் ஆரம்பத்திலே மொத்தமாக புதிய உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களாக 317இ7902 உம் காலம் கடந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக 304இ000 உம் அறிக்கையிடப்பட்டன. பெரும்பான்மையான உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மீளக் குடியேற்றப்பட்டதாக அரசாங்கம் உரிமை கோருகிறது. ஆனால் விருந்தளிக்கும் குடும்பங்களுடன் வாழ்ந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரையும் நிலையான தீர்வு தேவையானோரையும் நாம் பரிசீலிக்க வேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களின் உணவுப் பாதுகாப்பு தொடர்பான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டன. அத்துடன் திரும்பி வந்த இடங்களில் மீள இணைந்துகொள்வதற்கும் உட்கட்டமைப்புக் கட்டிடங்கள் ஊடாகவும் ஆரம்ப பொருளாதார சந்தர்ப்பங்களுக்கான உதவிகளை வழங்குவது ஊடாகவும் வசதிப்படுத்தப்பட்டன. வீடுகளை வழங்கியதன் ஊடாக வீட்டு உரிமையை உறுதிப்படுத்துவது தொடர்பான அரசாங்கத்தின் முயற்சிகளை இ.ம.ஆ பாராட்டுகின்றது. காணி தொடர்பான பிணக்குகள் கடும் பிரச்சினைகளாக உள்ள அவைகளுக்கு அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது.

இடம்பெயர்ந்தோரினதும் திரும்பிவந்தோரினதும் பிரச்சினைகளை தீர்ப்பதில் சமஉரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு இறப்பு காயம் மற்றும் காணி சொத்து இழப்பு சேதம் என்பவற்றுக்கு குறித்த காலப்பகுதிக்குள் நட்டஈட்டை வழங்குவதற்கான தற்போதுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும்படியும் இ.ம.ஆ ஆலோசனை கூறுகிறது. மற்றும் சொத்து தொடர்பான கூருணர்விலுள்ள பிணக்குகளின் முரண்பாட்டுக் கூருணர்வையும் கனாகனத்தையும் பரிசீலிப்பதற்கு ஒரு உரிய அரசாங்கப் பொறிமுறையை ஆரம்பிக்கும்படியும் அறிவுரை கூறுகிறது.

**4. எச் .ஐ. வி/எயிட்ஸ்**

இலங்கையில் எச்ஐவி இருப்பதாக 1987 இல் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து உலகம் பூராகவுமாக ஆகக் குறைந்த 0.1%. உள்ளது. 2011 இன் முடிவிலே இலங்கையில் மொத்தமாக 1463 பேர் அறிக்கையிடப்பட்டுள்ளனர். அதேவேளையில் மொத்த 20 மில்லியன் சனத்தொகையில் இவ் எண்ணிக்கையானது 2000-4000 இருக்க முடியும் என மதிப்பிடப்படுகிறது. இலங்கை அரசாங்கத்தின் பாலியலால் கடத்தப்படும் நோய் சேவைகளின் எச்ஐவியுடன் வாழும் எல்லா தகுதிவாய்ந்த ஆட்களுக்கும் கட்டணமின்றி வைரல் எதிர்ப்பு சேவையை வழங்கி வருகிறது.

**4.1.** எச்ஐவியுடன் வாழும் ஆட்களுக்கு கிடைக்கும் சேவைகள் மனவடு மற்றும் பாரபட்சத்தின் சம்பவங்களுக்கு அநேகமாக குறித்துரைக்கப்படுகின்றன என இ.ம.ஆ அவதானித்தது. எச்ஐவியுடன் வாழும் ஆட்களால் எதிர்கொள்ளப்படும் மனவடு மற்றும் பாரபட்சத்தைக் குறைப்பது மீது வைத்தியசாலைப் பணியாளர்களையும் அதிகாரிகளையும் உணர்வூட்டுவதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும் மறுப்பு தெரிவித்தல், எச்ஐவியுடன் வாழும் ஆட்களின் நிலைமையின் இரகசியத்தன்மையை மீறுதல் போன்ற

பல உரிமை மீறல் நிலைமைகள் இறந்தகாலத்தில் நிகழ்ந்துள்ளன. சுகாதாரப் பெருந்திட்டம் (2007-2011 மற்றும் எச்ஐவி தடுப்பு மற்றும் தேசிய தாய் சேய் சுகாதாரக்கொள்கை மற்றும் எச்ஐவியுடன் வாழும் ஆட்களுக்கான கவனம் என்பவற்றின் கீழான இலங்கையின் தந்திரோபாயப் பணிப்புக்களானவை எச்ஐவியுடன் வாழும் ஆட்களின் உரிமைகளுக்கானவைகளை விசேடமாக குறித்து நிற்கவில்லை. எச்ஐவியுடன் வாழும் ஆட்கள் மற்றும் LGBTIQ, IDU, CSW போன்ற சனசமூகங்களின் சட்டரீதியான விழிப்புணர்வுக்கும் இலவசமான சட்ட உதவிக்கும் இலங்கை அரசாங்கம் அவற்றை உறுதிப்படுத்துவற்கான ஏற்பாடுகளை எடுப்பதுடன் சுகாதார மற்றும் சட்டசேவைகளைப் பெறுவதுடனான மகத்துவமான வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும். மேலும் NDDCB யின் இயலுமைகளை போதை பயன்படுத்துவோரைப் புனர்வாழ்வு அளிப்பதற்கும் நாடுபூராகவும் உள்ள புனர்வாழ்வு நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் NDDCB யின் இயலுமைகளை அரசாங்கம் அதிகரிக்க வேண்டியதாக உள்ளது. தரப்பினரின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு புனர்வாழ்வு நிலையங்களுக்கு NDDCB ஆல் அழைக்கப்பட்டுள்ள வரையப்பட்டுள்ள குறைந்தபட்ச நியமங்களின் பிரகாரம் இதனைச் செய்ய வேண்டியும் உள்ளது.

4.2 இரத்தமாற்றுச் சேவை சட்டமூலம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை அரசாங்க வைத்தியசாலைகளில் இரத்தமாற்றுகை ஊடாக எச்ஐவி தொடர்பை பெற்ற ஆட்களுக்கு இலங்கை அரசாங்கம் நட்டஈடு வழங்குவதற்கு இ.ம.ஆ சிபார்சு வழங்குகிறது.

### 5. வெளிப்பாட்டுச் சுதந்திரம்

இ.ம.ஆ வெளிப்பாட்டுச் சுதந்திரம் தகவல் அறியும் சுதந்திரத்துடன் இணைக்கப்படுகிறது. அதுவே ஜனநாயகத்தின் ஊற்றாக இருப்பதாக இ.ம.ஆ அங்கீகரித்து அரசாங்கம் ஊடக ஆட்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒரு பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான திருத்தங்களுடன் தகவல் உரிமைச் சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கும் தூண்டுகிறது.

### 6. மனித உரிமைகள் மற்றும் சமூகம்.

மனித உரிமைகளை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாப்பதில் சிவில் சமூகம் மனித உரிமை பாதுகாப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், ஊக்குவிப்பாளர்கள் கல்வி நிலையங்களின் முக்கிய பெறுமானத்தை இ.ம.ஆ அங்கீகரிக்கிறது. தேவை உள்ள மக்களுக்கு அவர்களின் சேவைகள் கிடைக்கச் செய்வதற்காக இலங்கை அரசாங்கமானது அவற்றினை வசதிப்படுத்தவேண்டியுள்ளது. அத்துடன் மனித உரிமை நிறுவனங்களின் ஆட்களின் பாதுகாப்பையும் நிலைநிற்கக்கூடிய தன்மையையும் உறுதிப்படுத்தவும் வேண்டும். மீள்பார்வைக் காலப்பகுதியின்பொழுது இ.ம.ஆ ஆனது முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட இடங்களில் 1340 மனித உரிமை பாதுகாவலர்களிற்கு பயிற்சியளித்து ஈடுபடுத்தியது.

### 7. சிறைக்கைதிகளின் உரிமை

பல்வேறுபட்ட சிறை நிறுவனங்களின் சிறைக்கைதிகளின் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதானது சிறைச்சாலைகளில் இடநெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. தடுத்துவைப்பு சிறைச்சாலைகளின் இடநெரிசலானது வழக்கு தொடுப்பு செயற்பாடுகளின் தாமதத்தின் காரணமாகவும் விசாரணைகளை முடிப்பதின் தாமதத்தின் காரணமாகவும் கடுமையான பிணை நிபந்தனைகளின் நிமித்தம், பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கான பிணைகொடுப்போரின் இயலாமையினாலும் அல்லது பிணை கொடுக்காததினாலும் இது ஏற்பட்டது. 2000 – 2010 க்கான காலப்பகுதியில் 1064 மரணதண்டனை பெற்ற சிறைக்கைதிகள் உள்ளனர். ஆனால் 1977 இல் இருந்து அவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படவில்லை. அவர்கள் குறைந்தபட்ச வசதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இறுதித்தீர்ப்பு வழங்கப்படும்பொழுது தடுப்பில் இருந்த காலப்பகுதியை கழிக்கும் முறைமையொன்று இல்லை. தீர்ப்புக்கூறப்பட்ட சிறைக்கைதிகள் சிறையில் அடைக்கும் எண்ணிக்கையை பெருமளவில் குறைப்பதற்கு சனசமூக அடிப்படையிலான திருத்தங்கள் திணைக்களம் பங்களிப்புச் செய்துள்ளது. சனசமூக அடிப்படையிலான திருத்தங்களுக்கு அனுப்பக்கூடிய குற்றச்செயல்களின் வீச்செல்லையானது மிகவும் குறைவாகவே உள்ளது. சிறைச்சாலைகளின் வசதிகளை விஸ்தரிக்கும், வழக்குகளை விரைவுபடுத்துவதற்கான நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளை மதிக்கும் அதேவேளையில் இலங்கை அரசாங்கமானது தாமதமின்றி உரிய ஏற்பாடுகளை எடுக்க ஊக்குவிக்கிறது.

**8. பரிகாரச் செயற்பாடுகளுக்கான உரிமை**

நிர்வாகஸ்தர்கள் தமது செயற்பாடுகளுக்கும் செயற்பாடின்மைகளுக்கும் பொறுப்புக்கூறுவதற்காக ஆக்கப்பட்ட நீதித்துறை , அரைநீதித்துறை மற்றும் ஏனைய நிறுவனங்களை முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் நிறுவப்படுகின்றன. இந் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துக் கொள்வதுடன் விசேடமாக முரண்பாட்டுக்குப் பிந்திய யுகத்தில் தேவைகள் மாவட்ட பிரதேச மட்டங்களில் இச்சேவைகளை சென்றடைந்து கொள்ளுதல் திருப்தியாக இல்லையென்பதையும் அவதானிக்கிறது. ஆகவே இ.ம.ஆ ஆனது இலங்கை அரசாங்கத்தை அந் நிறுவனங்களுக்கு இயலுமை அளித்து மாவட்ட மட்ட பொறிமுறைகளை நிறுவுமாறு தூண்டுகிறது.

**9. காணி, வீடமைப்பு மற்றும் சொத்து உரிமைகள்**

காணி, வீடமைப்பு மற்றும் சொத்தில் சம உரிமைகளை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பார்வையின் கீழ் உள்ளது. வறுமையொழிப்பின் ஒரு அணுகுமுறையாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் இரண்டாம் தலைமுறையினருக்கும் வறியோருக்கும் காணிகளை விறியோகம் செய்வதற்கு செயன்முறைகளை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்துவதை இ.ம.ஆ காண விரும்புகிறது. பாதுகாப்பு நிறுவுகைகளுக்காகவும் அபிவிருத்தி நோக்கங்களுக்காகவும் காணிகள் சுவீகரிக்கப்படுவதை இ.ம.ஆ அவதானிக்கிறது. அரசாங்கமானது காணி சுவீகரிப்பில் நியம செயன்முறைகளை அமுல்படுத்து வேண்டுமெனவும் மக்களுக்கு அறிவிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு காணி சுவிகரிப்பு முன்பாக நட்டஈடு வழங்கவோ அல்லது மாற்றுக்காணிகள் வழங்கவோ வேண்டும் என இ.ம.ஆ அழுத்தியுரைக்கிறது.

**10. சித்திரவதை மற்றும் தடுத்துவைப்பின்பொழுதான சுதந்திரம்**

அரச காவலில் இருக்கும்பொழுது ஆட்கள் இறப்பதும், சித்திரவதை நிகழ்வுகள் இடம்பெறுவதும் குறித்து இ.ம.ஆ க்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தடுத்து வைக்கப்படும்பொழுது சித்திரவதை மற்றும் இறப்புச் சம்பவங்களின்பொழுது பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மீது தண்டனை அல்லது கடும் பொறுப்புக்களை விதித்தல் ஏற்பாடு எதுவும் இல்லை. தடுத்து வைக்கப்படும்பொழுது சித்திரவதை மற்றும் இறப்பைக் குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முனைப்புக்களை பாராட்டும் அதேவேளையில் போதிய சான்றுகள் நிறுவப்படும்பொழுது பொலிஸ்நிலையங்கள் சிறைச்சாலைகளின் சிரேஷ்ட அத்தியட்சகர்கள் ஏனைய தடுத்து வைக்கும் நிலையங்களின் தலைவர்கள், பொலிஸ்நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மீது தடுத்துவைக்கப்படும்பொழுது சித்திரவதை மற்றும் இறப்பிற்கான பொறுப்பை விதிப்பது மீதான உரிய பொருத்தமான செயற்பாடுகளை எடுக்கும்படி இலங்கை அரசாங்கத்திடம் இ.ம.ஆ அழுத்தியுரைக்கிறது. தடுத்து வைக்கும்பொழுது சித்திரவதையில் இறந்துபோன ஆளின் தங்கியிருப்போருக்கு நட்டஈட்டுத்திட்டங்களை அறிமுகம் செய்ய வேண்டிய தேவையுள்ளது. நீதிமன்றத்தின் பணிப்புக்களின்பிரகாரம் பாதிக்கப்பட்டவரோ குற்றம் சாட்டப்பட்டவரோ தனது சட்டத்தரணி மூலம் பொலிஸ்நிலையத்தில் பிரதிநிதித்துவம் செய்வதை உறுதிப்படுத்துவதற்கு சட்டவாக்கங்கள் நீக்கப்பட வேண்டும். .

**12. சமாதானமும் மீளிணக்கமும்**

**12.1.** மூன்று தசாப்தகால யுத்தம் 2009 இல் முடிவுக்கு வந்தது உயிர்களுக்கான புதிய நம்பிக்கையைக் கொண்டு வருகிறது. முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட இடங்களில் தேர்தல்கள் இடம்பெற்றன. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் வடமாகாணத்தில் இடம்பெறுவதை இ.ம.ஆ அவதானிக்கிறது. ஆனாலும் யுத்தம் முடிந்ததிலிருந்து பொது நிர்வாகத்திலும், பொது நிகழ்ச்சிகளிலும், செல்வாக்கு பங்குபற்றுகை என்பவற்றுடன் யுத்த நிலைமைகளில் இருந்து சாதாரண வாழ்வுக்கு மாறியதைக் காண முடியாதுள்ளது. நன்கு காணக்கூடிய உயர் இராணுவ பிரசன்னத்துடன் இப்பகுதிகள் யுத்தத்திலிருந்து சாதாரண வாழ்வுக்கு திரும்பியதை அதிகம் காணவில்லை. வடக்கு மக்களின் ஜனநாயகத்தையும் வாக்குரிமையையும் உறுதிப்படுத்துவதற்காக மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டிய தேவை இலங்கை அரசாங்கத்திற்குள்ளது.

**12.2.** நிலையான சமானத்திற்கான தேவையை அங்கீகரிக்கும் இ.ம.ஆ இலங்கை அரசாங்கம் நீடித்து நிலைக்கக்கூடிய சமாதானத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் மீளிணக்க நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த தூண்டுகிறது. டுடுசுஊ நியமிக்கப்பட்டதை பாராட்டும் அதேவேளையில் இலங்கை அரசாங்கம் மீளிணக்கத்துடன் தொடர்புடைய சிபார்சுகளை அமுல்படுத்த இ.ம.ஆ தூண்டுகிறது.

**சுருக்க விளக்க சொல் நிரல்**

| | |
|---|---|
| CAT | சித்திரவதை ஏனைய கொடூர மனிதத்திற்கு எதிரான அல்லது இழிவுபடுத்தும் நடத்துகை அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயம் |
| CRPD | இயலாமையுடைய ஆட்களின் உரிமைகள் மீதான சமவாயம் |
| GOSL | இலங்கை அரசாங்கம் |
| HRDs | மனித உரிமை பாதுகாப்பாளர்கள் |
| | இ.ம.ஆ இலங்கை மனித உரிமை ஆணைக்குழு |
| ICCPR | சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் |
| ICESCR | பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைள் மீதான சர்வதேச சமவாயம் |
| IDPs | உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் |
| NDDCB | தேசிய அபாய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை |
| NP | வடக்கு மாகாணம் |
| OIC | பொறுப்பதிகாரி |
| PLHIV | எச்ஐவியுடன் வாழும் ஆட்கள் |
| LLRC | கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்கத்திற்கான ஆணைக்குழு |
| SP | சிறை அத்தியட்சகர் |
| UPR | பூகோள காலாந்த மீளாய்வு |

## பின்னிணைப்பு II:

## இலங்கையிலுள்ள வயது முதிர்ந்த ஆட்களின் மனித உரிமைகளைப் பலப்படுத்துவது மீதான அறிக்கை
## (வயதுமுதிர்ந்த ஆட்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதை பலப்படுவது மீதான வரையறையற்ற செயற்குழுவின் மூன்றாம் அமர்விற்கு இவ் அறிக்கை முன்வைக்கப்பட்டது)

**அறிமுகம்**

ஆவணத்தின் முதற்பகுதி இலங்கையில் வயதுமுதிர்ந்த சனத்தொகையின் காட்சியை விபரிக்கிறது. இரண்டாம் பகுதியானது வரையறையற்ற செயற்குழுவால் கலந்துரையாடப்பட்ட முன்மொழிவுகளைக் கொண்டுள்ளது. இந்த முன்மொழிவுகளானவை அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், கல்விக்கூடங்கள், புலமையாளர்கள், தொழில்வாண்மையாளர்கள், சட்டவாக்குனர்கள், ஐநா முகவர்கள், சர்வதேச அசாநிகள், உள்ளுர் அசாநிகள், சனசமூக அடிப்படையிலான நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், சிவில் சமூக உறுப்பினர்கள், ஊடக ஆட்கள் வயதுமுதிர்ந்தோர் சனத்தொகையின் பிரிவுகள் அரசாங்க அமைச்சுக்களின் உயர்மட்ட அதிகாரிகள் உட்பட்ட பல பங்காண்மையாளர்கள் பங்குபற்றிய தேசிய மட்ட கலந்துரையாடல் மற்றும் பிராந்திய ரீதியான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து விருத்தி செய்யப்பட்ட முன்மொழிவுகளாகும்.

இவ் ஆவணத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விசேடித்த முன்மொழிவுகளாவன உள்ளுர் கலந்துரையாடல் செயன்முறைகளிலான விபரமான தீர்மானங்களிலிருந்து எடுக்கப்பட்டது. மேலதிக தீர்மானங்களுக்கு பின்னிணைப்பு ஐ – டம. இணைக்கப்பட்டுள்ள பிறிதான ஆவணத்தை தயவுசெய்து உசாவுக.

கலந்தாலோசனை செயன்முறையின் முடிவானது முதியோர் உரிமைகளைப் பலப்படுத்துவதற்கும் நலனோம்பலுக்கும் பாதுகாத்தலுக்குமென உலகளாவிய கருவி தேவையாக உள்ளது என்பதாகும்.

**இலங்கையில் வயது முதிரும் சனத்தொகை : 21 நூற்றாண்டுக்கான புதிய சவால்**

ஆசிய சமூக மரபில் வயது முதிர்ந்தோர் மதிக்கப்படுகின்றனர். எவ்வாறாயினும் ஐக்கியநாடுகள் இன்னும் கைத்தொழில் மயமாக்கல், நகரமயமாக்கல், புதிய தொழில்நுட்பங்கள் என்பன ஆசிய சமூகங்களில் சமூக ஆதரவு முறைமையை பலவீனப்படுத்தும் முக்கியமான சமூக மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது என ஐநா அவதானிக்கிறது. இந்தச் சூழமைவுகளில் வயதுமுதிர்ந்த சனத்தொகையானது இலங்கை உட்பட பல ஆசிய சமூகங்களில் பாரதூரமான பிரச்சினையாக மாறிவருகிறது.

மேற்கத்தேய நாடுகளின் வயது முதிர்தல் அனுபவத்துடன் ஒப்பிடுமிடத்து இலங்கையில் வயது முதிர்தலானது பொருளாதார அபிவிருத்தியின் கீழ்மட்டத்தில் சமாந்தரமாக இடம்பெறுவது காட்டப்படுகிறது. இறப்பு வீதம், உள்ளகப் புலம்பெயர்வு போக்குகள் என்பனவற்றின் சார்பான கூட்டுச்சேர்க்கையின் போக்கானது நாட்டிலே கட்டமைப்பு நிலைமாற்ற யுகம் ஒன்றை நோக்கிச் செல்வதுடன் வயதுமுதிர்ந்த சனத்தொகையினரின் விகிதாசார கணிசமான அதிகரிப்பை விளைவித்தபொழுதிலும் அண்மைக்கால நகரமயமாக்கல் மற்றும் அதிகரித்த பெண் தொழிலாளர் படை பங்குபற்றுகை போன்ற சமூக பொருளாதார மாற்றங்களானவை (பெண்களின்தொழில்படை பங்குபற்றுகை ஒப்பீட்டளவில் இன்னும் குறைவாக இருந்தபொழுதிலும்) வயதுமுதிர்ந்தோருக்கு ஆதரவு வழங்கும் இயலுமையைக் குறைத்துள்ளன.

இலங்கையில் வயது முதிர்ந்த சனத்தொகையின் விகிதாசாரமானது ஏனைய தென்னாசிய நாடுகளை விட உயர்வாக உள்ளது. 2001 ஆம் ஆண்டு 9%இலங்கைச் சனத்தொகையினர் 60 வயதுக்கு மேற்பட்டோராக இருந்தனர். இது ஒப்பீட்டளவில் ஒரு அபிவிருத்தி செய்யும் நாட்டிற்கான அதிகரித்த முதியோர் சனத்தொகை அளவாகும். வயதுமுதிர்ந்தோர் என்னும் வரைவிலக்கணமானது சமூகத்திற்கு சமூகம் வேறுபடுகின்றன. இங்கே வயதுமுதிர்ந்தோர் எனப்படுவோர் 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டோராக வரைவிலக்கணம் செய்யப்படுகின்றனர். 60 னை இவ் வெட்டுத்துண்டு ஆண்டாக எடுப்பதற்கான காரணம் இலங்கையில் அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களில் ஓய்வுபெறும் வயதானது 55 - 60 க்கும் இடையில் இருப்பதாகும். சர்வதேச தொழிலாளர் புலம்பெயர்வானது இளம் வயதுக்கு வந்த வேலைசெய்யும் குழுவினரிடையே பணம் செலுத்துவதால் கடந்த மூன்று தசாப்தங்களில் இது அதிகரித்து இருப்பதுடன் நாட்டில் வேலை செய்யும்

வயதையுடைய சனத்தொகையின் விகிதாசரத்தைக் குறைக்கிறது. இளைஞர்கள் புலம்பெயர்வின் விஸ்தரிப்பு அளவின் நிமித்தமாக வயது முதிர்ந்தோர் சனத்தொகையின் விகிதாசாரம் அதிகரித்துள்ளது. புலம்பெயர்வு வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டும் இறப்பு வீதத்தின் எதிர்காலப்போக்குகள் கருவளம், சர்வதேச புலம்பெயர்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையினரின் விகிதசமம் ஆனது கிட்டத்தட்ட 9.2% - 12.5% ஆக 2001 இல் அதிகரித்துள்ளதாக காட்டப்படுவதுடன் 2011 இல் 12.5% ஆக காட்டப்படுகிறது. 2041 ஆம் ஆண்டளவில் இலங்கை சனத்தொகையின் கிட்டத்தட்ட காற்பங்காக (24.8%) 60 வயதும் அதற்கு மேற்பட்ட வயதினர் இருப்பர்.

2010–2041 உள்ளடக்கும் காலப்பகுதியின்பொழுது இலங்கை சனத்தொகையானது மிதமாக 9% ஆல் அதிகரித்து 20–22 மில்லியனாக அதிகரிக்கும். இக்காலப்பகுதியின்பொழுது 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது முதிர்ந்த சனத்தொகையானது 2010 இல் 2.5 மில்லியனிலிருந்து 2041 இல் 5.3 மில்லியனாக அதிகரிக்கும். இது 100%, அதிகரிப்பு அல்லது வயது முதிர்ந்த சனத்தொகையின் இரட்டிப்பானதாக இருக்கும்.

**இலங்கையில் வயது முதிர்ந்தோர் உரிமைகள் பாதுகாப்புடன் தொடர்புடைய வேறுபட்ட தொனிப்பொருள் விடங்கள் மீதான கலந்துரையாடலுக்கான விசேடித்த முன்மொழிவுகள்**

**1. கொள்கை, சட்டம் மற்றும் நிறுவன சட்டகவேலை**

1. வயதுமுதிர்ந்தோருக்கான தேசிய ஓய்வூதியம் மீதான எல்லாநாடுகளுக்குமான கொள்கையானது வயதுமுதிர்ந்தோருக்கான கட்டாய உலகளாவிய ஓய்வூதியத்திட்டமாக அறிமுகப்படுத்த முடியும்.
2. தற்போதுள்ள ஓய்வூதியத்திட்டமானது பணியாளர்களின் எல்லா தொகுதியினரையும் உட்படுத்துவற்கு போதியதாக இல்லை. அரசாங்கம் மற்றும் தனியார் துறையின் ஒரு பகுதியினர் மாத்திரமே தனியார் மயப்படுத்தப்பட்ட ஓய்வூதியத்திட்டத்தில் உட்படுத்தப்படுகின்றனர்.
3. வயதுமுதிர்ந்த ஆட்களுக்கான ஒரு அனைத்துமடங்கிய வரைவிலக்கணத்தை அறிமுகப்படுத்துதல். இது சர்வதேச ஒப்பீட்டை வசதிப்படுத்தும்.
4. வயதுமுதிர்ந்த ஆட்களுக்கான அடையாளத்துவ முறைமை (அடையாள அட்டை)
5. வரவு செலவுத்திட்டத்தால் அரசு முதியோர் நிதியத்திற்கு ஒதுக்குவதுடன் வயதுமுதிர்ந்தோர் உரிமைகள் பாதுகாப்பிற்காக தேசிய வரவு செலவுத்திட்டத்திலிருந்து போதிய நிதி ஒதுக்கீட்டை உறுதிப்படுத்துதல்
6. எல்லா அரசாங்க செயற்திட்டங்களிலும் விருத்தி செய்யும் கட்டங்களில் முதியோர் சம்பந்தப்பட்ட தனியான பிரிவை உள்ளடக்குதல்.
7. எல்லா மட்டங்களிலும் உரிய பொறித்தொகுதி/நிறுவன சட்டகவேலை/பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் போதியளவில் கிடைக்கச் செய்தல்.
8. முதியோரின் உரிமைகள் பாதுகாத்தல் ஊக்குவித்தலின் சிறந்த தன்மைக்காக உறுப்பு நாடுகளின் அரச மற்றும் தனியார் பங்காண்மையை ஊக்குவித்தல்.
9. முதியவர்களை மிலேனியம் அபிவிருத்தி இலக்குக்குள் உள்ளடக்குவதற்காக ஒரு ஐநா செயலாளர் ஐநா பொதுச் சபை தீர்மானத்தை ஊக்குவித்தல் இவ்வண்ணமாக எல்லா நாடுகளினதும் அபிவிருத்தி செயன்முறைக்குள் முதியோரை ஒன்றிணைத்தல் உறுதிப்படுத்தப்படுகிறது.
10. முதியோர்களுக்கான ஒரு சமவாயத்தை உருவாக்கும்பொழுது உரிய வேறுபட்ட சமூக கலாசார வேறுபாடுகள் பரிசீலிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.
11. முதியோருக்கான தனிப்பட்ட உரிமைகள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சட்டவாக்காளர்கள் நிறுவனங்களை நிறுவுவதில் மாத்திரமேயன்றி தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதன் மீதான சட்டவாக்கங்களை சட்டவாக்குனர்களிடம் தூண்டுதல்.
12. நிறுவனச் சட்டகவேலையொன்றை நிறுவுதல் - 2011 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தற்போதிருக்கும் சிரேஷ்ட பிரசைகள் குழுக்களினதும் பிரதேசசெயலர் பிரிவுகளில் உள்ள உழளெழசவயை மட்ட முதியோர் குழுக்களினதும் மாகாண மற்றும் தேசிய மட்ட குழுக்களினதும் ஒரு பலமான நிறுவக சட்டகவேலை சட்டரீதியான சட்டகவேலையால் ஆதரவளிக்கப்படும் இம் மாதிரியானது ஏனைய நாடுகளிலும் அமுல்படுத்தக்கூடியது.

**2. சமூக நலனோம்பல்**

1. வயது முதிர்ந்தோருக்கான பங்களிப்பு அற்ற உலகளாவிய ஓய்வூதியத்திட்டத்தை அறிமுகம் செய்து அமுல்படுத்துதல்.
2. புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களைப் பலப்படுத்தி பாதுகாப்பதற்கு விசேட அக்கறை செலுத்தப்படும்.

**3. சமூகப் பாதுகாப்பு**

1. முதியோருக்கான தனியான ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி திட்டங்களை அறிமுகம் செய்வதற்கு முதியோரின் பெரும் பாதுகாப்பு கருதி உறுப்பு அரசுகளை ஊக்குவித்தல்.

**4. சுகாதாரம் (பொதுவானது)**

1. குடும்ப மற்றும் வாழ்க்கைத்துணை உறவுமுறையை முன்னேற்றுவதற்காக வயதுமுதிர்ந்தோரிடையே பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரத்தை ஊக்குவித்தல். உதாரணம் இது சிறுவர் துஷ்பிரயோகம், எச்ஐவி எயிட்ஸ் மற்றும் குடும்ப பிரிவுகளை தடுக்கக்கூடியது.

**5. மனச்சுகாதாரம்**

1. சுகாதார விடயங்கள் தொடர்பாகவும் வயதுமுதிர்வுடன் தொடர்புடைய பாரதூரமான மனநலக்குறைபாடு தொடர்பாகவும் பொதுமக்களிடையே ஏலவே தடுத்துவைத்தல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
2. தற்போதுள்ள ஆலோசனைச்சேவை பயிற்சித்திட்டங்களை பலப்படுத்துவதுடன் வயது முதிர்ந்தோருக்கு சேவைகளை வழங்குதல்.

**6. முரண்பாடு மற்றும் அழிவுக்குரிய நிலைமைகள்**

1. பாதிப்புற்ற முதியோர்களுக்கு அவர்களின் நலனோம்பலை உறுதிப்படுத்துவதற்காக ஏற்பாடுகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கு விசேட பொறித்தொகுதிகளை நிறுவுதல்.
2. வயது முதிர்ந்தோர் கைவிடப்படும் நேரங்களில் காப்பாற்றல் நோக்கங்களுக்கு விசேடமாக அவசரகால நிதி.
3. அனர்த்தம் மற்றும் முரண்பாட்டு நிலைமைகள் மீதான அனைத்து தேசிய செயற்திட்டங்களும் முதியோரோடு தொடர்புடைய விடயங்களில் ஈடுபடுவதற்காக பிறிதான பிரிவுகளைக் கொண்டிருக்கும்.
4. முதியோரை குடும்பங்களுடன் மீள இணைப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகம் செய்யப்படும்

**7. கல்வி பரிந்துரைப்பு மற்றும் தொடர்பாடல்**

1. முதியோர் மற்றும் முதியோர் சனசமூகங்களின் உறுப்பினர்களை அவர்களின் உரிமைக்கான பரிந்துரைப்பு பிரச்சாரத்திற்கு வலுவூட்டுதல்
2. சிரேஸ்ட பிரசைகள் சமூக ஐக்கியத்தை ஊக்குவிப்பது பற்றி இளம் தலைமுறையினரிடையே பொறுப்பை ஊட்டுவதற்கான பரிந்துரைப்பு.
3. முதியோருக்கான பரிந்துரைப்பை ஊக்குவிப்பதற்கு வயதுமுதிர்ந்த புகழ்பெற்றோரை முன்கொண்டு வருதல்.
4. வயதுமுதிர்ந்த ஆட்களின் மகத்துவத்தையும் சமூகத்திற்கான அவர்களின் விம்பத்தையும் ஊக்குவித்தல்.
5. தற்போதுள்ள குடும்பம் தொடர்புடைய நெறிகளையும் முதிர்ந்தோரின் மகத்துவம் மற்றும் விம்பமும் குறித்துப் பலப்படுத்தவதற்கு எல்லா ஊடகங்களையும் தூண்டுதல்.
6. நற்பழக்கங்களையும் நெறிகளையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கு தன்னார்வமான ஆகும் முகமாக ஊடக மற்றும் சட்டவாக்காளார்களை பயிற்றுவித்தல்.
7. ஒன்றிணைக்கப்பட்ட ஐக்கியத்தை வசதிப்படுத்துவதற்காக தற்போதுள்ள பாடசாலை பாடவிதானத்தை பலப்படுத்துதல்.

**8. பங்காண்மையாளர்களிடையே தாக்கவிளைவுள்ள ஒருங்கிணைப்பு**

1. வயதுமுதிர்ந்தோர் உரிமைகளை ஊக்குவிப்பதில் உறுப்பு நாடுகளுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் இடையிலான தாக்கவிளைவுள்ள ஒருங்கிணைப்புக்கான பொறிமுறையை விருத்தி செய்வதற்காக வசதிப்படுத்துதல்

பின்னிணைப்பு III:

2012 இல் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப்பயணம்– மகாநாடு/கூட்டங்கள்/பயிற்சிப்பட்டறைகள

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு T E ஆனந்தராஜா – ஆணையாளர் | அவுஸ்திரேலியா<br>நீதிமீதான பயிற்சிப்பட்டறை சர்வதேச குற்றவியல் நீதிமன்ற மகாநாடு மற்றும் ICC மற்றும் பாலியல் நீதி ஆசிய பசுபிக் பிராந்திய இயலுமையைக் கட்டியெழுப்புதல் | 13.02.2012<br>-<br>16.02.2012 |
| 2. | Ms. E சகுந்தலா – புலனாய்வு உத்தியோகத்தர் | தாய்லாந்து<br><br>ஆசிய பசுபிக் தேசிய மனித உரிமைகள் நிறுவனத்திடமிருந்தான பிரதிநிதிகளுக்கான மனித உரிமைகளில் பிராந்திய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 19.03.2012<br>–<br>29.03.2012 |
| | திரு . A L இிசடீன்<br>- புலனாய்வு உத்தியோகத்தர் | | |
| 3. | Ms. T R K சமரசேகர- பணிப்பாளர்<br>– (க மற்றும் மீ) | மாலைதீவு<br><br>புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை ஊக்குவித்தல் பாதுகாத்தல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 30.04.2012<br>-<br>02.05.3012 |
| 4. | Ms. T R K சமரசேகர - பணிப்பாளர் ( க மற்றும் மீ) | பெய்ரூட், லெபனான்<br><br>மத்திய கிழக்கு மற்றும் ஆசிய பணியாளர்களின் மனித உரிமைகள் மற்றும் பரிந்துரைப்பு புலம் பெயர் தொழிலாளர்கள் மீதான இயலுமையைக் கட்டியெழுப்பல் நிகழ்ச்சித்திட்டம் | 21.05.2012<br>-<br>25.0.2012 |
| 5. | Ms. S J பரணகம – செயலாளர் | அவுஸ்திரேலியா<br><br>சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகள் வட்டமேசை | 24.05.2012<br>-<br>25.05.2012 |
| 6. | Ms. சிரானி ராஜபக்ஷ - பணிப்பாளர் (கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டம்) | இந்தியா<br><br>ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வயது முதிர்ந்த ஆட்களின் உரிமைகள் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 04.06.2012<br>-<br>06.06.2012 |
| 7. | Ms. நதி எதிரிசிங்க – சட்ட உதவியாளர் | பிலிப்பைன்ஸ்<br><br>மாதிரி பிராந்திய பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கலக்கப்பட்ட கற்றல் கற்கைநெறி | 18.06.2012<br>-<br>22.06.2012 |
| 8. | Ms. W A U S விஜயசூரிய -ஆவண அதிகாரி | மலேசியா<br><br>ஆசிய பசுபிக்கில் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் நூலகங்கள் மற்றும் வளங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 26.06.2012<br>-<br>30.06.2012 |
| 9. | Ms. S J பரணகம – செயலாளர் | பிலிப்பைன்ஸ்<br>மனித உரிமைகள் மீதான பிலிப்பைன்ஸ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இயலுமை மதிப்பீடு | 09.07.2012<br>-<br>21.07.2012 |
| 10. | கலாநிதி. பிரதீபா மஹானாமஹேவா – ஆணையாளர் | தாய்லாந்து<br>தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் இயலுமையை மதிப்பிடுவதற்காக பிராந்திய பங்காண்மையாளர்கள் உரையாடல் | 09.10.2012<br>-<br>10.10.2012 |
| 11. | Ms. B L T C டி சில்வா - புலனாய்வு உத்தியோகத்தர் | கட்டார்<br><br>புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான மனித உரிமைகள் | 14.10.2012<br>-<br>18.10.2012 |
| 12. | நீதிபதி பிறியந்த R P பெரேரா – தவிசாளர் | நேபாளம்<br><br>புலம்பெயர் தொழிலாளர்களின் மனித உரிமைகளின் ஊக்குவிப்புக்கான ஒத்துழைப்புக்கும் NHRI இடையிலான மீதான சர்வதேச மகாநாடு | 26.11.2012<br>-<br>27.11.2012 |
| | திரு. T E ஆனந்தராஜா – ஆணையாளர் | | |
| 13. | Mr. A S நிலந்த - புலனாய்வு உத்தியோகத்தர் | தாய்லாந்து<br><br>ஆசிய பசுபிக்கில் தேசிய மனித உரிமைகள் நிறுவகத்திடமிருந்தான பிரதிநிதிகளுக்கான பிராந்திய கலப்பு கற்றல் கற்கைநெறி | 26.11.2012<br>-<br>05.12.2012 |
| | Ms. S N லியனகம- புலனாய்வு உத்தியோகத்தர் | | |

பின்னிணைப்பு IV:

இ.ம.ஆ பணியாட்டொகுதிக்கான ஆற்றலைக் கட்டியெழுப்பல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - **2012**

| இல | பெயரும் பதவிநிலையும் | பயிற்சி/ பயிற்சிப்பட்டறைகள் | காலப்பகுதி |
|---|---|---|---|
| 1. | Ms. W அமிதா டி சில்வா – எழுதுவினைஞர் | முகாமைத்துவ மற்றும் கொள்வனவு செயன்முறைகளின் களஞ்சியப்படுத்துகை – ஆற்றல் விருத்தி வரையறுக்கப்பட்டநிதியம் | 19.09.2012 - 20.09.2012 |
| | திரு. M T M இர்ஷாட்- எழுதுவினைஞர் | | |
| 3. | Ms. சிறோமி றொஷிகா பெல்பிற்ற – வரவேற்பாளர் | தொலைபேசி திறன்கள் மற்றும் பண்பு செயலாளர்களுக்கான பயிற்சி – திறன் விருத்தி நிலையம் வரையறுக்கப்பட்டது | 04.10.2012 |
| | Ms. சியமாலி உதயகாந்தி – எழுதுவினைஞர் | | |
| 4. | திரு. M C பிரதீப்- கணக்கியல் எழுதுவினைஞர் | காசாளரின் வகிபங்கும் பொறுப்புக்களும் - திறன் அபிவிருத்தி நிலையம் வரையறுக்கப்பட்டது | 05.11.2012 |
| | திரு . T R அலகொட – கணக்கியல் லிகிதர் | | |
| 5. | அலுவலக உதவியாளர்களும் சாரதிகளும் (தலைமைச் செயலாகம்) | திறன் விருத்தி – திறன் விருத்தி நிலையம் வரையறுக்கப்பட்டது | 07.11.2012 |